Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 65 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஜனவரி 15 2024







**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**
































# விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலை**
**உணர்வே மனித**
**ஆன்மாவின் சாரமாக – உயிர்**
**மூச்சாக – இயங்குகின்றது.**
**மனித வரலாற்றை**
**இயக்கும்**
**மகத்தான சக்தியும்**
**அதுவே.**






## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கேணல் சாள்ஸ்

## விடுதலைப் புலிகளின் படைய புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர்




**சொன்னால் முடியாத சரித்திரமாக... "என்னால் முடியும்" – கேணல் சாள்ஸ்**

2008 ஆம் ஆண்டின் முதல் வார நாட்கள். தீவிர மோதல்களால் மன்னார் களமுனை அதிர்ந்துகொண்டிருந்த காலம். தளபதி பானு அவர்களைச் சந்திக்க விரும்பியிருந்தேன். மன்னாரில் எமது வழமையான பணிகளுடன், போகுமிடத்தில் பானுவையும், களநிலவரத்தையும் கண்டு வரலாம் என்ற விருப்புடனான பயணம்.

பயணத்திட்டத்தை முறைப்படி தலைவருக்கு முன்வைக்கும் சந்திப்பு.

தலைவரின் புருவம் உயர்கின்றது.

"இப்ப மன்னாருக்கு ஏன் போகவேண்டும்?" நீ இப்போது அங்கு போய் என்ன செய்யப்போகின்றாய்?" தனது வழமையான கேள்விகளுக்கான பதில்களுடன் எமது தயார் நிலையைக் கண்ணுற்ற தலைவர் கூறுகின்றார்.

மன்னார் களமுனையின் பின்னணியில் எதிரியின் சிறப்பு அணிகள் நிலையெடுத்துள்ளன. முதன்மைச் சாலைகளுடான பயணம் பாதுகாப்பானதல்ல. இவை எதிரியின் வழமையான நகர்வுகள் என்பதாக எனது கருத்துகளைச் சொல்லி பயணத்திட்டத்தை முன்னெடுக்க முற்பட, தலைவர் தீர்மானமாக கூறுகின்றார். "அங்கு நிற்கும் பானு, சொர்ணம் ஆகியோருக்கும் முதன்மைச் சாலை பாதுகாப்பானதல்ல எனச் சொல்லப்பட்டுள்ளது. நீ போக வேண்டாம்."

எம் மன்னார் பயணத் திட்டத்தை தலைவர் தடுத்து நிறுத்திவிட்ட மறுநாள். அன்றைய மாலைப் பொழுதைப் பரபரப்பாக்கும் வகையில் மன்னாரில் எதிரியின் கிளைமோர் தாக்குதலொன்று நடைபெற்றுவிட்ட செய்தி வந்து சேர்ந்தது.

அண்ணை சொன்ன புலனாய்வுத் தகவல் மிகச் சரியாகவே அமைந்திருந்தமை பற்றிய எண்ண ஓட்டத்துடன் எதிரியின் அத்தாக்குதலிற்கு உள்ளானவர் யார்?

கேள்விக்குப் பதிலைத் தேடியபோது நெஞ்சை உலுக்கும் அதிர்ச்சியாகவும், வேதனைமிக்க பேரிடியாகவும் வந்து சேர்ந்தது அந்தச் செய்தி. அந்தத் தாக்குதலில் எங்களின் சாள்ஸ் வீரச்சாவு. படையப்புலனாய்வுப் பொறுப்பாளர், தளபதி சாள்ஸ் வீரச்சாவு.

அன்றைய நாளின் பின் இரவில் சாள்சின் பிரிவின் வேதனையுடன் தனிமையில் இருந்தார் தலைவர் அவர்கள். சாள்சின் வித்துடலுக்கான வீரவணக்கத்திற்கு வரச்சொல்லிக் கேட்க "அவனைக் கடைசியாகக் கண்ட அந்த முகமே நினைவில் இருக்கட்டும்" என்றதும், "சாதித்தவன் போய்ச் சேர்ந்துவிட்டான்" என்றதுமே தலைவரின் சுருக்கமான வார்த்தைகளின் சாரம்சமாகும். அதிகம் பேசாது தலைவர் தனது சட்டைப் பையில் இருந்ததை எடுத்துத் தந்தார். அது நாலாக மடிக்கப்பட்ட கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்ட அறிக்கைத்தாள். மூன்று நாட்களுக்கு முன்னர் சாள்ஸ் அனுப்பியிருந்த புலனாய்வு அறிக்கை அது.

மன்னார் களமுனையின் பின்னணிச் சாலையைக் குறிவைத்து, ஊடுருவித் தாக்குதல் செய்ய எதிரியின் அணிகள் நிலையெடுத்துள்ளமையை, எடுத்து வெளிப்படுத்தி, வலியுறுத்தியிருந்தது. படையப்புலனாய்வின் முக்கிய மூலத்தில் இருந்து கிடைத்த ஆழமான தகவல்களைக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்டிருந்த தீர்மானமான அறிக்கை அது.

மன்னாருக்கான முதன்மைச் சாலையில் எதிரியின் தாக்குதல் நடைபெறலாம் என்ற கணிப்பை முற்கூட்டியே அறிக்கையாகக் கொடுத்த சாள்ஸ், அதே சாலையில் எதிரியின் கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டான். ஆபத்திருப்பது தெரிந்தும் அவ்விடத்தை நோக்கி அவனை பயணிக்க வைத்த சக்தி எது? அது விதியின் கொடிய கரமா?

இந்திய படைகள் எம் மண்ணை விட்டகன்று அமைதி நிலவிய நாட்கள். பிறேமதாசா அரசும் புலிகளும் பேச்சு நடத்தி வந்த நேரமது. எமது மக்களுக்கு ஏதோ ஒரு நன்மையைச் செய்ய பிறேமதாசா அரசு முன்வருமா? என்ற எண்ணத்தில் அனைவருமே ஆழ்ந்திருந்தனர்.

இந்திய இபடையினரின் நெருக்கடி மிக்க சுற்றிவளைப்புக் காலத்தில், பிரிந்திருந்த தலைவரின் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்திருந்த காலமுமதுதான் – அவ்வேளையிற்தான் அவ் அறிக்கை கிடைத்தது – எம்மவர்களால் புறக்கணிக்க முடியாத முக்கியமான அறிக்கை.

அப்போதைய சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் றஞ்சன் விஜயரட்ணாவும், பலாலியில் இருந்த சிறீலங்கா புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியும் இணைந்து செயற்படுத்தும் திட்டத்தின் விபரங்கள் கிடைத்திருந்தன.

அக் காலப்பகுதியில் தலைவர் அவர்களது துணைவியார் மதியக்கா நல்லூர் கோவிலுக்குச் சென்றிருந்ததை உதயன் நாளெடு சிறு செய்தியாக வெளியிட்டிருந்தது. அச்செய்தியை அடிப்படையாக வைத்து அமைந்திருந்தது சிறீலங்காவின் திட்டம் மதியக்காவை பின்தொடர்ந்து கண்காணிப்பதற்கான ஏற்பாடும், அதனைத் தொடர்ந்து தலைவரின் இடத்தைக் கண்டறிவதும், தலைவரைக் கொலை செய்வதுமான திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையது.

தென்னிலங்கையில் எழுந்த ஜே.வி.பி கிளர்ச்சியை ஒடுக்கியதன் மூலம் சிறீலங்காவின் அரசு புத்தூக்கம் பெற்றிருந்த காலமது. எமது விடுதலைப் போரையும் அதே வழியிற் சென்று முடக்கிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் நகர்வுகளில் இறங்கியிருந்தனர். ஜே.வி.பியை ஒடுக்குவதில் நேரடியாக முன்னின்று செயற்பட்ட பாதுகாப்பு அமைச்சர் றஞ்சன் விஜயரட்ணாவின் மிக நேரடியான வார்த்தைகளில் அமைந்திருந்தது – அவ் அறிக்கையிலிருந்த திட்டம். அறிக்கை துல்லியமானதாக, தெளிவானதாக, இறுக்கமானதாக, இருந்தது. மதியக்கா அவர்களைப் பின்தொடர்ந்து தலைவர் அவர்களது இருப்பிடத்தைக் கண்டறிந்து தலைவரைக் கொன்றுவிட வேண்டும் எனும் நேரடியான கட்டளை என்பதாகவும் அமைந்திருந்தது.

நிலைமை தெளிவாகத் தெரிந்தது. சிங்களம் உண்மையுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. வஞ்சகத்தின் வழியிற் பேசுகின்றது என்பது தெளிவாகிவிட்டது. கொல்லும்வரை பேசுவோம் – "கொல்லச் வாய்ப்பு கிடைப்பதற்காகப் பேச்சுவார்த்தை நடத்துவோம்" என்பதாக அமைந்திருந்தது சிங்களத்தின் திட்டம்.

எமக்கு அதுவொரு சவால். சிறீலங்காவின் திட்டம் எமக்குத் தெரியுமென்பது இரகசியமாக வைக்கப்பட்டது.

ஆனாலும் இனிச் செய்வது என்ன? என்ன செய்ய வேண்டுமென்று தெரிந்தது. ஆம் அவர்களின் வழியிலேயே அவர்களுக்கு பதிலளிக்க வேண்டும். அதனை எப்படிச் செய்வது? யார் செய்வது?

அவர்களது தலைநகரத்தில் அவர்கள் முடக்கப்பட வேண்டும். அவர்களது செயற்பாடுகளை கொழும்பிலும் முடக்க எம்மால் முடியுமென்பது நிரூபிக்கப்படவேண்டும்.

தலைவர் தனது வார்த்தைகளில் சொன்னார் இதுதான் எமக்கொரு ஆற்றல் மிக்க புலனாய்வு அமைப்பு வேண்டுமென்று சொல்வது. நாமோ... பெயரளவிலேயே புலனாய்வு என்ற பெயர் தரித்திருந்தோம்.

அக் காலப்பகுதியில் நாம் புலனாய்வு ரீதியாக எந்தவொரு அடிப்படையையுமே உருவாக்கியிருக்கவில்லை. சொல்லப்போனால் புலனாய்வு என்ற எண்ணக்கருவை மனதிற் கொண்டிருந்தோம் என்பதற்கு மேலாக புலனாய்வு ரீதியாக நாம் எந்தவொரு கட்டமைப்பையோ அல்லது அதற்கான ஆளணிகளையோ கூடக் கொண்டிருக்காத காலமது. சாள்ஸ் நினைவிற்கு வந்தான்.

1988 யாழ். மாவட்டப் பணிக்காக, மணலாற்றில் இருந்து யாழ். நோக்கிப் பயணம் மேற்கொண்டிருந்தேன். விசுவமடுவில் உள்ள கிராமம் ஒன்றில் ஓய்விற்காக அமர்ந்திருந்தோம். எனது உதவியாளர்களில் ஒருவராய் இருந்த கிளி, சாள்சை எனக்கு அறிமுகப்படுத்தினார். அப்போது சாள்ஸ் கிளிநொச்சி மாவட்டத்

திற்குரிய சண்டையணிப் போராளிகளில் ஒருவர். முதலாவது அறிமுகத்திலேயே சாள்சை அடையாளம் கண்டுவிட்டேன். சாள்சின் ஆற்றலை முழுமையாக அடையாளம் கண்டுவிட்டதாகக் கூறினால் அது மிகைப்படுத்தப்பட்ட பொய். கொழும்பிற்குச் சென்று வரக்கூடிய துணிவும், அதற்குப் பொருத்தமாக சிறீலங்கா அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையும் கைவசம் வைத்திருக்கும் ஒரு போராளி.

கொழும்பில் சில வேலைகள் செய்ய வேண்டி வரலாம் எனத் தலைவர் அவர்கள் கூறிவிட்டது நினைவிற்கு வர, அன்றே சாள்ஸ் என்வசம் ஆனான். ஆயுதங்கள் களைந்து பொதுமக்களின் உடை தரித்த போராளியானான்.

இந்தியப் படைகள் இங்கிருந்த காலத்திலேயே வேறு வேலையாகச் சென்று கொழும்புடன் ஓரளவு பரீட்சயத்தை ஏற்படுத்தியிருந்த சாள்ஸ் முன்வந்தான். நான் செய்கிறேன். “என்னால் முடியும் அம்மான்” என்று முன்வந்தான்.

இருபது வயதே நிரம்பிய இளைஞன் வஞ்சினம் பொங்கும் நெஞ்சினனாய் கொழும்பு நோக்கிப் பயணிக்கின்றான். இன்றும் நினைவில் மாறாத அன்றைய நாள். அதன்பின் யாழ்ப்பாணத்திற்கு வராமலேயே நின்றுவிட்ட அந்தப் தொடரூந்து. - யாழ் தேவி தொடரூந்து - சாவகச்சேரி நிலையத்திலிருந்து சாள்சையும் ஏற்றிக் கொழும்பு நோக்கிப் போகின்றது.

தொடரூந்து திரும்ப வரவில்லை. சாள்ஸ் மீண்டு வந்தான். வெற்றி வீரனாக, தேசத்தை நோக்கி உலகைத் திரும்பிப் பார்க்க வைத்த சாதனையாளனாகத் திரும்பி வந்தான்.

1990 கொழும்பில் சாள்ஸ் அவனோ மிகவும் இளவயது இளைஞன் கொழும்பிலோ சரியான தொடர்புகள் இல்லை. இலக்கற்ற வகையில் அலைச்சல், கொழும்பு சிங்களக் கொழும்பாக இருக்க அந்தக் கொழும்புக்குள் கால் பதிக்க முடியாமல் தனி இளைஞனாக அலைந்து திரிந்தான்.

தொடக்கத்தில் அவனது கொழும்புப் பயணமும் கூட எல்லாம் நல்லபடியாக அமைந்துவிடவில்லை. அவனது தொடக்க பயணத்திலேயே வழித்துணையாக தொடரூந்து ஏறிச்சென்ற மனிதன் கொழும்பு தொடரூந்து நிலையத்திலேயே தனியாக இறங்கி, மெதுவாகக் கழன்றுவிட தனித்துநின்று, பின் ஆசுவாசப்படுத்தி தெரிந்த ஓரிடத்தில் நிலைபெற்று தொடங்கியது தான் அவனது செயற்பாடு.

உள்ளூரில் முன்னரே அறிமுகமாகியிருந்த துரோகி - நல்ல வேளையாக துரோகி என்று முன்னரே அடையாளம் தெரிந்த துரோகி - கண்டுவிட்டுப் பின்தொடர சுழித்துத் தப்பியோடினான் சாள்ஸ். துரோகியானவன் தொடர்ந்து முயற்சித்தும் முடியாமற் போகும் வரை சுழித்து விட்டு, ஓடித்தப்பி மூச்சுவிட்டு முன்னேறித்தப்பியிருந்தான் சாள்ஸ். ஆனாலும் கொழும்பை விட்டு விட்டு வர முடியாதபடி கடமை முதன்மையானது.

சாள்ஸ் மறைமுகச் செயற்பாட்டாளனாய் களத்தில் நின்ற காலத்தில் அவனுக்கு அதிர்ஷ்டம் என்று கூறப்படும் ஆகூழ் உம் கொஞ்சம் உதவி செய்யாமல் இல்லை. இந்திய படைகள் இருந்த காலத்தில், பயணத்தில் கட்டாய ஆட்சேர்ப்பிற்கு என்று கூறி ஈ.என்.டி.எல்.எஃப். ஆல் ஒருமுறையும், பின்னர் கொழும்பிற்குப் போகையில் வவுனியாவில் வைத்து புளொட் ஆல் இன்னொரு தடவையும், கொழும்பு வானூர்தி நிலையத்தில் சிறீலங்கா புலனாய்வாளர்களினால் மீண்டும் ஒரு தடவையுமாக கைதாகிப்போன பட்டறிவும் பெற்றிருந்தான்.

அவனது உரையாடற்திறனும், சொன்ன மறைப்புக் கதைகளும் அவனது ஆகூழ் உம் ஒன்றாய் இணைந்து அவனை விடுவித்தன. அவனது உதவியாளர்கள் எல்லோரும் உத்தம மானவர்களாகவும் அமைந்து விடவில்லை. முதலாளி ஒருவர் யாழ்ப்பாணத்தில் பெருமளவு வாக்குறுதிகள் தந்து சென்றவர். முதலாளி இங்கு நிற்கும் போது அவரைச் சந்திக்க இரவிரவாக, இரகசியமாக தொண்டமனாறு மற்றும் அச்சுவேலி நோக்கிப் போவோம். கொழும்பில் எல்லாம் செய்யலாம், வெல்லலாம் என்று அந்தமாதிரி வாக்குறுதி வழங்கினார் மனிசன்: நடவடிக்கைக்குத் தேவையான தவிர்க்க முடியாத உதவியைக்கேட்டு அவரது கடைவாசலில் தவமிருப்பான் சாள்ஸ்.

சந்திக்கும் வேளைகளில் மாலை அல்லது நாளை வாருங்கள் என்று சொன்னவர், நாளாக நாளாகச் சந்திப்பதையே தவிர்த்து காய்வெட்டித் திரியத் தொடங்கினார். நம்பிக்கை இழந்தாலும் வேறு வழியில்லாமல் கடைவாசலில் போய்க் குந்தியிருப்பான் இவன். தினமும் இவன் காத்திருப்பதைக் கண்ட பக்கத்துக்கடை



முஸ்லீம் ஐயா, “இவனை நம்பி மினக்கெடாதீர்கள், அவன் சரியான சுத்துமாத்துப் பேர்வழி” என்று சொல்ல இறுதியாய் நம்பிக்கையிழந்து சோர்ந்துபோய் நின்றான்.

பணம் பறிப்பதிலேயே குறியாக இருக்கும் இன்னும் சில உதவியாளர்கள் 300 ரூபா பொருளை 3000 ரூபா விலை சொல்லி பணம் கேட்கும்போது எல்லாம் தெரிந்தும் தெரியாததுபோல் பணத்தை எடுத்து கொடுப்பான் சாள்ஸ் பணம் கேட்பவருக்குச் சிங்களக் காவற்துறை, படையினரின் தொடர்பு உள்ளது சாள்சிற்குத் தெரியும். தனது பாதுகாப்பான செயற்பாட்டுத் தேவைக்கு அவரது நட்பு அவசியம் என்று உணர்ந்ததால் அதற்குக் கொடுக்கும்விலை அந்தப் பணமென்பது சாள்சினது கருத்து. ஆனால் பாவம் அந்த உதவியாளரோ வலு கெட்டித்தனமாக சாள்சை ஏமாற்றி அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதான நினைப்பு அவருக்குள்.

கொஞ்சம் கொஞ்சமாய் சாள்சிற்கு இடமும், ஆட்களும் பிடிபட இரகசியச் செயற்பாட்டில் முதிர்ந்தவனாகி விட்டான். யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் இருந்த அவனது தோழர்கள் தொடர்புகளை தொட்டெடுத்துக் கொடுக்க இடங்களும் ஆட்களும் நெளிவு சுழிவுகளும் கொஞ்சம் கொஞ்சமாக பிடிபட கொழும்பில் அகலச் சிறகு விரிக்கத் தொடங்கிவிட்டான் சாள்ஸ்.

கொழும்புத் தெருவெங்கும், அங்குள்ள ஒழுங்கையெங்கும், சிங்களத்துச் சேரிப்புறமெங்கும் சடசடத்து, சீறிப்பறக்கும் அவனது உந்துருளி. வீதிக்காவலர் மறிக்க நின்று கதைசொல்வதும் நிற்காமல் இழுத்து ஓடி மறைவதுமாக மாறி மாறி நடக்கும் அவனது பயணங்கள்.

கொழும்பில் நின்ற சாள்சிற்கான முகவர் ஒழுங்கு, பொருள் வழங்கல் என பின்னணிப் பணிகளைக் கவனித்தான் சுருளி. தாக்குதலிற்கான வெடிமருந்து இணைப்பை பரிசீலிக்கும் வேளையில் தவறு நடந்துவிட வெடிவிபத்தில் சுருளி வீரச்சாவு. மேஜர் சுருளியின் வீரச்சாவால் மனம் சோர்ந்து போனாலும், பணி சோராமல் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார் மாதவன் மாஸ்ரர்.

கீதனின் அறிமுகத்தில் மாதவன் மாஸ்ரர் நகர்த்திய நற்குணத்தாரும், விடுதலைப் புலிகள் ரவி அறிமுகப்படுத்திய வரதனும் சாள்சுடன் இணைந்துகொள்ள இருள் விலகி நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படத் தொடங்கியது.

“வரதன்” சாள்சிற்குக் கிடைத்த அரிய துணை. நடவடிக்கை நகர்வின் தடைகளைப் புரட்டி ஓரம்தள்ளி பாதை அமைத்துக் கொடுத்த துணையானான். முன்பு வேறொரு பின்னணியில் கொழும்புப் பரீட்சயமும், ஆளணி அறிமுகமும் கொண்ட வரதனின் புதிய வேகத்துடன் காரியங்கள் முன்னகர்ந்தன.

அதைவிட சாள்சின் தனித்த முயற்சியாலும் கணிசமான வெற்றி இலக்கு அடையாளம் காணப்பட்டு விட்டது. அதுவும் துல்லியமாய் இனித் திட்டமிட வேண்டியதும் செயற்படுத்த வேண்டியதும்தான் பாக்கி.

திட்டமிடல்கள்..., நகர்வுகள்..., கரும்புலிகள்..., பயிற்சிகள்..., என்று புலனாய்வுச் சக்கரமும் - செயற்திட்டத்திற்கான சக்கரமும் - முன்னோக்கி நகர்ந்தன. நடவடிக்கையாளர்கள், மற்றும் கரும்புலிகள் சென்றனர்.

எங்களுக்கும் அது பட்டறிவுக்குறைவான காலம். நடவடிக்கைக்கென தெரிவு செய்யப்பட்ட ஆள் சறுக்கிப் பின்வாங்கிவிட, குழப்பமான நிலைமை. முன்னோக்கிய நகர்வு கீழிறங்கிவிட்ட நிலவரம். புதிய கரும்புலிக்கு அவசர அவசரமாக பயிற்சியும், தேவையான நகர்வுகளுமாக திட்டம் முன்னகர்ந்தது. புதிய ஏற்பாடுகளுடன் விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கிய முயற்சியில், கிடைத்தது வெற்றி! அந்த அரிய வெற்றி!

கொழும்பை உலகெல்லாம் திரும்பிப் பார்க்க மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது தமிழர் தேசம். விடுதலைப் போராட்டத்திற்கு ஆப்பு வைக்க முற்பட்ட சிங்களத்தின் கொழும்பில், அவர்களது தலைநகர் கொழும்பில் வைக்கப்பட்டது வெடி, அவர்களுக்கு அது மரண அடி.

“வீழ்ந்தான் எதிரி, - வென்றான் சாள்ஸ்” என்று இங்கு அவனது தோழர்கள் ஆளையாள் கட்டித்தழுவிக் கொண்டாடி மகிழ்ந்தது தனிக் கதை.

வெற்றி தந்த மகிழ்ச்சியில், வெற்றி தந்த ஊக்கத்தில் அடுத்தடுத்த நகர்வுகள். சாள்சின் எண்ணத்திற்கு ஈடுகொடுக்க வரதனின் ஏற்பாட்டில் குவேந்தி, ரவியர், இந்திராக்கா என நல்ல பொருத்தமான உதவியாளர் வட்டம் அமைந்து விட்டது. சாள்சின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தளத்தில் இருந்த ஏற்பாடுகளும் அந்த மாதிரி அமைந்துவிட “அடுத்ததும் கிடைத்தது அற்புதமான வெற்றி”.

முதலாவது சம்பவத்தைப்போல் இம்முறையும் நடவடிக்கையாளர்கள் சறுக்கிப் பின்வாங்கிவிட்ட நிலை. முன்னைய பட்டறிவு தந்த பாடத்தால் அகிலாவின் ஏற்பாட்டில் முன்கூட்டியே நகர்ந்து காத்திருந்த இரண்டாவது கரும்புலி சந்திரன் முன்வந்தான். “மனிசனாய்ப் பிறந்தவனுக்கு கொஞ்சமாவது ரோசம் இருக்கவேணும்” என்று சொல்லி சந்திரன் முன்வர தாமதமில்லாமலேயே உடனடியாக நகர்ந்தது திட்டம். தேர்ச்சி பெறாத ஊர்தி ஓட்டுனரான கரும்புலி சந்திரனை அருகிருத்தி வெடிமருந்து ஊர்தியை ஓட்டிச்சென்றான் குவேந்தி. குவேந்தியை



அழைத்துவரப் பின்தொடர்ந்து சென்றது சாள்சின் உந்துருளி. இம்முறை சிறீலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் தகர்ந்தழிந்தது.



கூட்டுப்படைத் தலைமையகத்தின் வெற்றி. எல்லோரும் வெற்றி தந்த மகிழ்வில் திளைத்திருக்க, இந்தமுறை சறுக்கியது எங்களுக்கு. "ஆயிரம் கிலோ வெடிமருந்துடன் வெடிக்கும் ஊர்தியின் தடயம் எங்கே மிஞ்சப்போகின்றது" என நாம் நினைத்ததற்கு மாறாக எம் கரும்புலியின் ஊர்தியின் – இலக்கத்தகடு – "முழுத்தடயமாய்க் கிடைத்தது எதிரிக்கு". வரதன் தேடப்பட, வந்தது சிக்கல். மறைப்பிடங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்திராக்கா மட்டத்தில் கொஞ்சப்பேர் கைதாக, கூட்டுப்படைத் தலைமையக கரும்புலி நினைவாக போராளிப் பெயராய் சந்திரனின் பெயரை தனக்குச்சூட்டிய அப்போதைய குவேந்தியை "தப்பிப்போ" என்று அனுப்பிவிட்டு வரதன் சயனைற் அருந்தி வீரச்சாவு. புலனாய்வுச் சக்கரத்தின் மறுபக்கம், வீரச்சாவுகள்…, கைதுகள்…, சித்திரவதைகள்…, என துயரமும் வலியும் கலந்த வேதனையான மறுபக்கம். –குழம்பியது கட்டமைப்பு.

இளவயதுச் சாள்ஸ், நான்கு உடன்பிறப்புக்களைக் கொண்ட ஐந்தாவது கடைசிச் செல்லப்பிள்ளை. ஓரளவு வளர்ந்து பெரியவனாகும் வரையிலும் அம்மாவின் உடையைப் பற்றிப் பின்தொடர்ந்து செல்லும் செல்லம். குடும்பத்தில் மற்றவர்களைப் போலவே படிப்பில் படுசுட்டி ஆனால் மற்றவர்களைப்போல் படிப்பிற்கென நேரம் ஒதுக்கி மினக்கெடமாட்டான். செல்ல மகன் படிப்பில் பின்தங்கிவிடுவானோ என்று அம்மாவிற்குப் பயம்.

வயது ஏற ஏற எல்லாவற்றையும் அம்மாவிடம் கேட்டுச் செய்வது குறையத் தொடங்கிவிட்டது. அந்தக் காலத்தில் அவனது சொந்த இடமான பருத்தித்துறை சிறீலங்கா படைமுகாம் வடபகுதியின் பெரிய படை முகாம்களில் ஒன்று. முற்றுகைக்கு உள்ளான நிலையில் முகாமைச் சுற்றி புலிகளுடன் காவல் நின்றனர் ஊரில் உள்ள இளைஞர்கள். தனது பள்ளிப் பருவத்தின் இளைய காலத்திலேயே படை முகாம் காவலரண் இளைஞர் அணியுடன் தொடர்பு ஏற்பட, படிப்புப் பாழாகின்றதே என்று அம்மாவிற்கு படபடப்பு. படிப்பிற்கென்று நேரம் ஒதுக்கி மினக்கெடுவது கிட்டத்தட்ட நின்றே போய்விட்டது. "நீ இப்படியிருந்தால் அக்காமார் உத்தியோகத்திற்குப் போக நீ அவர்களுக்கு ரைவராகத்தான் போகப் போகின்றாய்" என அம்மா செல்லமும் கண்டிப்புமாய் பகிடி பண்ணுவா. அவனது க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் நல்ல பெறுபேறு வந்தபோது குடும்பத்தில் எல்லோருக்கும் பெருமைதான். அம்மாவிற்கு மட்டும் "இன்னும் கொஞ்சம் கவனம் எடுத்திருந்தால்" என்ற வழமையான ஆதங்கம். க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிந்து ஒரு வாரம்கூட ஆகியிருக்கவில்லை. "குஞ்சு கூட்டைவிட்டுப் பறந்து விட்டது." ஆம் சாள்ஸ் இயக்கத்தில் இணைந்துவிட்டான்.

சாள்ஸ்சின் தமையனார் தனது காலத்தில் 1980களில் இயக்கத்தில் இணையவென பள்ளி நண்பனான ஜொனியுடன் சேர்ந்து பெயர் கொடுத்திருந்ததும், அம்மாவிற்குச் சொல்லாமல் போக மனமில்லாமல் கடைசியாய் ஒருமுறை அம்மாவிடம் சொல்லி விட்டுப் போக வந்ததும், அம்மா எல்லா அம்மாமாரையும்போல அழுது மன்றாடி மகனை மறித்ததுமான நிலை சாள்சிற்கு வரவில்லை. பதினைந்து, இருபது ஆண்டுகள் கழிந்த பின்னரும் தமையனை நக்கலடிப்பான். "இயக்கத்திற்கு போறதுக்கும் அம்மாட்டைச் சொல்லிவிட்டுப் போகவந்த ஆளிவர்" என்று.

குடும்பத்தினருடன் இவனுக்கான உறவு அதுவொரு அபூர்வமான உறவுநிலைப் பிணைப்பு. தந்தை, தாய், மகன், உறவு நிலைக்கு அப்பால் குடும்பத்தில் உள்ள அனைவரும் சாள்சின் ஆளமை வீச்சுக்குள் கட்டுப்பட்டிருந்தனர்.

இன்னும் சொல்வதானால் இவனொரு பெரிய பொறுப்பாளராகவும், அம்மா, அப்பா மற்றும் இவனது மூத்த சகோதரர்கள் அனைவரும் இயக்கத்தில் அப்போதுதான் சேர்ந்த புதிய போராளிகள் போல் ஒடுப்பட்டும், கட்டுப்பட்டும் நடப்பதைப் பார்க்க எங்களுக்கு வியப்பும், சிரிப்புமாய் இருக்கும்.

வளர்ந்து பெரியவனாகி, இயக்க முதிர்ச்சியும் சேர்ந்துவிட, சாள்ஸ் குடும்பத்தின் தலைமகனாய் ஆகிவிட்டான். குடும்பத்தினர் எல்லோரும் எதற்காகவும் அவனது ஆலோசனையைப் பெறுவது என்ற நிலைவந்து விட்டது. சாள்ஸ் தனது பெற்றோருடன், உடன்பிறப்புக்களுடன் பழகுவதைப் பார்க்க அலாதியாய் இருக்கும். பெற்றோர், உடன்பிறப்பு உறவு என்ற நிலை அல்லாது நல்ல நட்பு வட்டம் ஒன்று ஒன்றாய்க் கூடியிருந்து பம்பலடிப்பது போலிருக்கும்.

சாள்சின் பணிகளில் இணைந்தும் சேர்ந்தும் அவனது பெற்றோர் குடும்பத்தினர் ஆற்றிய விடுதலைப் பணியும் பங்களிப்பும் இன்னொரு பக்க வரலாறாய் விரியும்…. சாள்சின் நண்பர்கள் அனைவரையும் தம் பிள்ளைகளாய், உடன்பிறப்புக்களாய் கொண்டாடி இன்பத்திலும் துன்பத்திலும் கூடி வாழ்ந்திருந்த குடும்பமது.

எம்முடன் ஒன்றாயிருந்து வீரச்சாவடைந்த எம் தோழர்கள் நினைவாக நாம் அமைதியாய் உணர்வின் மௌனமாய் இருக்கும் நாள், இயல்பில் சாள்சின் பிறந்த நாளாயும் அமைந்தது. சாள்சின் பிறந்த நாளும் எம்மோடு அமைதியாய்க் கழியும். பிறந்த நாளன்று பிள்ளைக்கு உணவூட்டி மகிழ நினைக்கும் தாயின், குடும்பத்தின் உணர்வுகளும்கூட எம் நிலை கருதி இன்னொருநாளாய் அமையும்.

விடுதலைப் போராட்டப் பற்றுணர்வை எந்தவொரு கட்டத்திலும் எதற்காகவும் விட்டுக்கொடுக்காமல் வாழ்ந்தவன் சாள்ஸ். அவனது இள வயதுக்காதலி, உறவு முறைச் சொந்தக்காரியும் தான். இயக்க முகாமில் போராளிகளிடையே நடந்த இயல்பான விவாதம் ஒன்றில், போராளிகள் போராளிகளையே திருமணம் செய்தல் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட, அக்கருத்தின் தாக்கத்துடன் சாள்ஸ் தன் காதலியிடம் சென்றான். அப்பெண்ணைப் போராளியாக்கும் முயற்சியில் சாள்சும், சாள்சை போராட்டத்தில் இருந்து விலத்தி எடுக்கும் முயற்சியில் அப்பெண்ணுமாக உரையாடல் நடந்தது. அங்கு காதல் தோற்றது. இல்லையில்லை… சாள்சின் போராட்டப்பற்று வென்றது. காதற் பயணம் நின்றது. சாள்ஸ்சின் விடுதலைப் பயணம் தொடர்ந்தது.

அதன்பின் அவன் கடமைக்குள்ளேயே ஆழமாய் மூழ்கிவிட்டான். குறித்த காலம் வரை தனிப்பட்ட தனது வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படவோ, காதலிக்கவோ நேரமிருக்கவில்லை அவனுக்கு.

காலம் ஓடியது. மட்டக்களப்பு சென்றுவந்து வெற்றிகரமான நடவடிக்கையாளன் என்ற வகையில் அவனது பரிமாணம் வளர்ந்திருந்த வேளையில், அவனது திருமணம் கனிந்தது.

முன்னைய அனுபவத்தாலோ அல்லது தொடர்ச்சியான பணி சார்ந்து அவனுள் உருவாக்கியிருந்த இயல்பினாலோ என்னவோ பேச்சுத் திருமணம் என்றே நின்று கொண்டான். மருத்துவப் போராளியை மனையாட்டியாய்க் கொண்டு இனிதான வாழ்க்கையில் அழகான மூன்று பிள்ளைகள். துணையைச் சமமாய் மதித்து, வாழ்வையும் பொறுப்பையும் பகிர்ந்துகொள்ளும் நல்ல குடும்பத் தலைவனாயிருந்தான்.

வாழ்க்கைத்துணை மருத்துவக் கல்விக்காய் தூர இடம் சென்றிருந்த வேளையில் பல மாதங்களாக குழந்தையைப் பராமரிக்கும் நல்ல தந்தையாக, மிக நல்ல கணவனாக விளங்கினான். பணியால் இல்வாழ்விற்கும், வாழ்வினால் பணிக்கும் இடையூறின்றி இனிதாய் நகர்ந்தது அவனது வாழ்வு.

புலனாய்வுத் தளத்தில் சாள்ஸ் ஒரு பொறுப்பாளர். எமது துறையின் வெளிக்களப் புலனாய்வின் ஒருபகுதிப் பொறுப்பாளனாய்ச் செயற்படத் தொடங்கிவிட்டான். கொழும்பில் பெற்ற வெற்றிகள் தந்த பட்டறிவும், தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் தந்த ஊக்கமும் அவனது செயற்பாட்டில் துணை நின்றன.

உறுப்பினர்களைப் பயிற்றுவித்தல், மற்றும் எதிரியின் பகுதியில் தளங்களை உருவாக்குதல் என்ற வகையில் தொடங்கி சாள்சின்தொடக்ககாலப் புலனாய்வுப் பணிகள். கொழும்பு அதிகார வர்க்கமும் எமது செயற்பாடுகளைத் தடுப்பதற்கான முறியடிப்புப் புலனாய்வு அமைப்பும் முன்புபோல் இல்லை. அவர்களது செயற்பாடுகளும் விரிவடைந்து செல்லத் தொடங்கிவிட்டது.

எமது செயற்பாட்டாளர்களுக்கு முன்புபோல் அல்லாமல் இப்போது தீவிரமான பயிற்சியும் பெருமளவான அறிவுறுத்தல்களும் தேவைப்படுகின்ற நிலைமை. பயிற்சிகள்…, புலனாய்வு வகுப்புகள்…, புதிய தந்திரோபாயங்கள்… என்று சாள்சின் ஆளுமை விரிந்து சென்றது.

கரும்புலி நடவடிக்கையாளர்களையும், உறுப்பினர்களையும் பயிற்றுவிப்பதிலும், பழகி ஊக்குவிப்பதிலும் சாள்சின் தனித்துவம் சக பொறுப்பாளர்கள் அனைவருக்கும் ஒரு பாடமாய் இருக்கும். பம்பலடித்து விளையாடியும், கண்டித்து அறிவுறுத்தியும் உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பான்.

விளையாட்டுத் திடலிலும் உடற்பயிற்சிக் கூடத்திலும் அவர்களுடன் கூடி ஒன்றாய்ப்பழகி அவர்களை வென்றெடுப்பான்.

சாள்சின் முதன்மைப் பயிற்சி ஆசிரியர் பிறேம்நாத்தின் பயிற்சித்திடலில், சூட்டுக் களங்களிலுமாக கழியும் அவனது பொழுதுகள். அப் பொழுதுகளிலேயே கரும்புலிகளுடனான உறவும், மதிப்பீடுமாய் அவனது வேலை நகர்ந்திருக்கும்.

நீந்தத் தெரியாத ஒருவருக்கு இடுப்பில் கயிறு கட்டிக் கடலில் இறக்கி விடுவதாகட்டும், இளைய போராளிகளுடன் உடற்தகைமையிலும், ஆயுதத்திறனிலும் போட்டி போடுவதிலாகட்டும், ஒன்றாய் கூடி உண்டு மகிழ்வதிலாகட்டும் அவர்களுடன் பழகி அவர்களுடனேயே ஒன்றித்து விடுவான் சாள்ஸ்.



படையத் திட்டமிடலிலும் கூட அவர்களது நிலையறிந்து, தகைமையறிந்து, திட்டம் வகுப்பதிலும், ஆயுத வெடிபொருளைத் தெரிவு செய்வதிலும், மொத்தமாய்க் கவனமெடுப்பான் சாள்ஸ். குறித்த ஆயுதத்தை, குறித்த முறையில், குறித்த போராளி இயக்குவானா? என்று பார்ப்பானே அல்லாமல் பொதுவான ஆயுதம்



ஒன்றையெடுத்து ஆட்களிடம் கொடுத்தனுப்பி விடமாட்டான்.

அது - அதனால் - அவனுக்குப் பொருத்தம் - என்பதாய் அமையும் சாள்சின் திட்டமும் பொருட்களும். அதற்கேற்ப இருந்திருக்கும் போராளிகளுடனான அவனது பழக்கமும் மதிப்பீடும்.

சாள்சுடன் ஒன்றாயிருந்து, ஒன்றாய்ப் பயணித்து, அவனுடனேயே வீரச்சாவடைந்துவிட்ட லெப். காவலன், லெப். சுகந்தன், லெப். வீரமறவன் ஆகியோரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் அறிவும், ஆற்றலும் கொண்ட எதிர்காலச் சாதனையாளர்களாய் இருந்திருப்பர். ஏனெனில், சாள்சின் தெரிவு அப்படி இருந்திருக்கும்.

1997 நாம் யாழ்ப்பாணத்தில் இருந்து பின்வாங்கி வன்னியில் தளம் அமைத்திருந்த காலம். ஜெயசிக்குறு படைநகர்வையும் எதிரி ஆரம்பித்திருந்தான்.

கொழும்பிற்கான திட்ட நகர்வுகளைச் செய்வதற்கான களச்சூழல் வன்னியில் தடங்கல்களைச் சந்தித்தது. இதேவேளை இந்நகர்வுகளைச் செயற்படுத்தச் சாதகமான களச்சூழல் மட்டக்களப்பில் உருவாகியிருந்த நேரமது. எம்மில் ஒரு பொறுப்பாளர் மட்டக்களப்பிற்குச் சென்று அங்கிருந்து செயற்படுவதென முடிவெடுத்தோம். மட்டக்களப்பு களப்பரீட்சயம் இல்லாத சாள்சை அனுப்ப நாம் தயங்கியபோது “என்னால் முடியும்” என்று முன்நின்றான் சாள்ஸ். வெளியக வேலைகளிற்காகவும், புலனாய்வுப் பொறுப்பாளனாகவும் சாள்ஸ் மட்டக்களப்பிற்குப் பயணித்தான்.

மட்டக்களப்பில் நிக்சனின் ஆரம்பத் தொடர்புகளில் இருந்து காந்தி உருவாக்கி வைத்த புலனாய்வுக் கட்டமைப்புத் தளத்தில் நின்று சாள்ஸ் செயற்படத் தொடங்கினான்.

மட்டக்களப்பில் இருந்த கள நிலவரத்தை தனது ஆளுமை வீச்சிற்குள் எடுத்துக்கொண்டான் சாள்ஸ். விடுதலைப் புலிகளை முற்றுகைக்குட்படுத்திய பெருமிதத்துடன் நடந்த எதிரியின் படைய நடவடிக்கைகளுக்கு பதிலடியாக சிங்களத்தின் நகரங்களில் வெடித்தன குண்டுகள் ஒன்றல்ல, இரண்டல்ல, தொடர்ச்சியாக் வீழ்ந்தன இலக்குகள்.

காந்தியும் சின்னவனுமாய் கொழும்பையும் மட்டக்களப்பையும் இணைத்ததாய் உருவாக்கிய புலனாய்வுத் தளத்தில் சாள்சின் வெற்றிப்பயணம் நடந்தது. காந்தியால் உருவாக்கப்பட்ட அந்தக் கட்டமைப்பை வெற்றியென்ற மகுடத்தில் ஏற்றி ஒளிர வைத்தது சாள்சின் ஆளுமையும், படையத் திட்டமிடல்களும்.

கரடியனாற்றில் இருந்து பழுகாமம் வரை நேரகாலமின்றி ஓடித்திரியும் அவனது உந்துருளி. இளங்கோ, மதன், அருள்ராஜ், தூயமணி மாஸ்ரர் என அவனது பொறுப்பாளர்களை உசுப்பிவிடும் சாள்ஸ்சின் கேள்விகளும், கட்டளைகளும் சாள்சின் நேரடி வழிநடத்தலில் மட்டக்களப்பில் புலனாய்வுக் கட்டமைப்பு மெருகுபெற்று வளர்ந்தது. எதிரிகளுக்கும் துரொகிகளுக்கும் தக்க அடி கொடுத்தும் ஊடுருவியும் உருவாக்கியிருந்தான் தனது கட்டமைப்பை.

புலனாய்வின் கட்டமைப்புகள், நகர்வுகள் எவ்விதத்தில் நடந்தாலும் வெற்றிகரமான நடவடிக்கையாய் அவற்றைப் பொருத்தி நடாத்தி முடிப்பதுதான் மகுடம். இந்த மகுட வெற்றிமாலையை தொடுத்து முடிப்பதில் சாள்ஸ் ஒரு சமர்த்தன்.

“எல்லாப் பாதைகளும் ரோமுக்கே” என்பதைப்போல் எல்லா வளங்களும் வெற்றியை நோக்கியே திரும்பும். நியூட்டனின் கட்டமைப்பு திட்ட வேவு முடித்து பொருள்நகர்வு வழிதேடிக் காத்திருக்கும். பயிற்சி கொடுத்து அணியைத் தயாராக வைத்திருப்பான் அன்பு. பொருள் நகர்வின் நோக்கமாய் அமைந்த காந்தியின் கட்டமைப்பு தனக்கான பணிமுடிக்கத் தயாராக நின்றிருக்கும். தடை தாண்டி கரும்புலியை இலக்குநோக்கி நகர்த்த வழியொன்றை கைவசமாய் வைத்திருப்பார் கபிலம்மான்.

அனைத்தையும் ஒருங்கிணைத்து நடவடிக்கையை நோக்கி நகர்த்த வேண்டும். என்னமாதிரி? செய்வாயா? என்று கேட்டால் “என்னால் முடியும்” என்றுகூறி அந்த இடத்தில் பொறுப்பேற்பான் சாள்ஸ். வேவை, - பொருள் நகர்வை, - ஆளணிப் பயணத்தை, - ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து திட்டத்தின் வெற்றிவரை ஓயமாட்டான். தொடர்புபட்ட மற்றையோரை ஓய விடவும் மாட்டான். சொன்னவர் சொன்ன பணியைச் செய்து தரும் வரை மென்மையாகவும், கடுமையாகவும் நின்று அவர்களை அப்பணியைச் செய்விக்கும் ஆற்றல் சாள்சின் தனித்துவம்.

சாள்ஸ் பெற்ற வெற்றிகளும் அவனது ஆளுமை வீச்சுமாக புலனாய்வுத்துறையினுள்ளே அவன் தனித்துவமாய் ஒளிர்ந்தான். அந்த ஒளியை நோக்கி ஆளணி மற்றும் பிற வளங்களும் இணைந்துகொண்டன. புலனாய்வின் முதன்மை வளங்கள் அனைத்தையும் தன்வசம் ஈர்த்து “என்னால் முடியும்” என்று கூறி வெற்றிக்கான உத்தரவாதத்தை வழங்கும் ஆற்றல் சாள்சிடம் இருந்தது.

நீர்கொழும்பைச் சூழ கட்டமைப்பு உருவாகி வேவு, பொருள் மற்றும் ஆளணி நகர்வு என எல்லாம் பொருந்தி வந்துவிட்ட வேளையிலும் கூட தளத்திலும், புலத்திலுமாக விநாயகத்தின் தோளில் அழுத்திக்கொண்டிருந்தது கட்டுநாயக்கா நடவடிக்கை.

மன்னார் அரிப்பிற்கும், முல்லைத்தீவு - அன்புவின் பயிற்சி முகாமிற்குமாக இராணுவ வேலி தாண்டி மாறிமாறி அலைந்து திரிந்தார் விநாயகத்தார்.

சுற்றிவளைப்புகளில் கூடச்சென்றோர் வீரச்சாவடைகின்றபோதும் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளாமல் தனியே தானே சுமக்கும் விநாயகத்திற்கு கடிவாளம் போட்டு நட்புடன் கட்டி மேய்க்க பொருத்தமான நேரத்தில் மட்டக்களப்பில் இருந்து சாள்ஸ் வந்து சேர்ந்தான். “நீங்கள் ஏன் ஓடித்திரிகின்றீர்கள் நான் பார்க்கின்றேன் அம்மான்” என்று தாங்கினான் சாள்ஸ்.

சாள்சின் வேகமான திட்டமிடலும், விநாயகத்துடனான நட்புரிமையான உறவும் சேர்ந்து வேலை முன்நகர்ந்தது.

அந்நேரம் பார்த்து திட்டத்தின் களப் பொறுப்பாளராக விநாயகம் நியமித்த செட்டி வீரச்சாவடைந்தபோதும் கூட, “என்னால் முடியும் அம்மான்” என்று சாள்ஸ் முன்வந்தான். அவனது பொறுப்பின் கீழிருந்த முத்தப்பன் பொறுப்பேற்க, திட்டம் தொடர்ந்தது.

தலைவர் அவர்களது ஆலோசனைகளுடனான திட்டத்துடன், தூர வீச்சிற்கான கனரக ஆயுதப் பயன்பாடு... இரவுச் சூட்டிற்கான தந்திரோபாயங்கள்...., பொருத்தமான வெடிமருந்துத் தெரிவுகள்.... என எங்கள் எண்ணங்கள் எல்லாவற்றையும் செயல்வடிவப் பொறுப்பேற்றான் சாள்ஸ்.

சாள்சின் கையாள்கையினால் திட்டம் புதுவேகம் பெற்றது. நடவடிக்கையென்று வந்துவிட்டால் வழமையாகச் செய்வது போல பொருளாதாரம், ஆவணம், தொழில் நுட்பம் என எல்லாக் கட்டமைப்பும் “எள் என்று கேட்க எண்ணெய் ஆக” கை கொடுக்க நகர்வு வசமானது. தாக்குதல் அணி புது மெருகுபெற்றதும், கட்டுநாயக்காவில் எமது கரும்புலி வீரர்கள் களமாடி வென்றதும் வரலாறு.

புலனாய்வின் அடிப்படையான “இரகசியம் காப்பாற்றுவதில்” புலியாய் இருப்பான் சாள்ஸ். அவன் பெற்ற வெற்றிகள் போலவே அவனது கோபமும் புகழ்பெற்றது. “ரௌத்திரம் பழகு” என்றார் பாரதியார் இரகசியப் பாதுகாப்பிலோ புலனாய்வு மற்றும் இராணுவ முன்நகர்விலோ தவறுகள் விடுவோருடன் மென்மையாக நடந்துகொண்டு சமாளித்துப் போக நினைப்பவர்கள் - சாள்சிடம் படித்துக்கொள்ள வேண்டியது இந்த “ரௌத்திரம் பழகுதல்.”

இரகசியமான செய்தி ஒன்றை தொலைத்தொடர்புச் சாதனத்தில் பாதுகாப்பில்லாமல் அறிவித்துவிடுவார் யாரோ ஒருவர். உலுக்குகின்ற உலுக்கில் அவர் கொஞ்சம் எரிபொருள் தேவை என்றோ அல்லது மழைவரப்போகின்றது குடை தேவை என்றோ இருக்கக்கூடிய சாதாரண செய்திக்கே பாதுகாப்பான சங்கேதத்தாள் தேடித்தான் திரிவார்.

சிலவேளைகளில் ஒருவரையொருவர் அடையாளம் கண்டிருப்பர் அல்லது அடையாளம் காண வாய்ப்பு அங்கு இருந்திருக்கும். வெடித்துத் துளைப்பான் சாள்ஸ். குறித்த முகாமிற்குப் பொறுப்பாக இருந்தவர் “பொறுப்பு வேண்டாம் ஆளை” விடு என்பார். அல்லது அடுத்த சந்திப்பு நேரத்தில் அன்னம், தண்ணீர் இல்லாமல் ஆளையாள் காணாதபடி காவல் காத்து நிற்பார்.

சமைக்கும்போது அவ்வப்போது கொஞ்சம் உப் புப்புளி கூடி விடுவது போல சாள்சின் கோபமும் அவ்வப்போது கொஞ்சம் எல்லை மீறிவிடுவதுமுண்டு.

குறித்த திகதியில் தரப்படவேண்டிய ஏதாவது ஓர் அறிக்கை தரப்படவில்லையா? சம்மந்தப்பட்டவர் யாரென்று பாராமலும், முன்னுள்ளவர் எவரென்று நோக்காமலும் வார்த்தைகள் வெடிக்கும் கோவைகள் பறக்கும். பின்னர் சமாதானம் செய்ய பொட்டம்மான்தான் தேவைப்படுவார்.

தோல்விகளைச் சந்திக்க மறுத்து, வெற்றிகளுக்காக முயன்று முன்நகர்வது சாள்சின் இரத்தத்தில் ஊறிய இயல்பு. சாதாரண நீச்சலிலோ அல்லது பந்து விளையாட்டிலோகூட அவன் தோல்விகளை ஏற்கமறுத்து முயல்வான். இந்த இயல்பே அவனது பல வெற்றிகளுக்கு அடிப்படையானதென்றாலும், நண்பர்களிடை



யேயும் கூட அவனது பிடிவாதம் வெளிப்பட்டு வெடித்து விடுவதுமுண்டு.

கலந்தாலோசித்து முடிவெடுப்பதற்கும், முன்கூட்டியே முடிவெடுத்து அதனைக் கட்டளையாக வழங்குவதற்கும் இடையேயான தெரிவில் அவ்வப்போது சிக்கல் வரும் சாள்சிற்கு.

1991 இல் கூட்டுப்படைத் தலைமையக நடவடிக்கைக்கு வீடு ஒன்றை எடுத்து வைத்திருந்தார் வரதன். அந்த வீட்டில் யார் யார் தங்குவதென வரதனுடன் ஆலோசிக்காது சாள்ஸ் கட்டளையாக வழங்க வந்தது உறவுச்சிக்கல். அது போலவே, 2001 இல் கட்டுநாயக்கா நடவடிக்கை அணிக்கு பிரதான பொறுப்பாளர் கண்ணனின் கருத்தின்றி இரண்டாவது பொறுப்பாளராக இருந்த கானகனை நீக்கி, முகிலனை நியமிக்க, வந்தது சிக்கல்.

விடுதலையை விரைவுபடுத்த வெற்றியின் தேவை பற்றிய தெளிவூட்டலும், மனிதர்களைவிட நாடு வணங்க வைத்தும் நகரும் திட்டங்கள்.

இராணுவ ரீதியான திட்டங்களில் சாள்ஸ் புதிய எண்ணங்களை முதன்மைப் படுத்துவான். வழமையான வழிகளில் அல்லாது வித்தியாசமான வழியில் சிந்தித்து நடைமுறைப்படுத்துதலும் சாள்சின் இயல்பு. அவனது அந்த இயல்பு எமக்குப் பல இடங்களில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது.

கட்டுநாயக்கா திட்டமிடல்; சிறு வேவு அணி விமானத்தளத்திற்குள் வெற்றிகரமாக உள்ளே சென்று வந்துவிட்டது. பெரிய அணியை உள்நகர்த்துவதிலும் பிரச்சினை இருக்காதென்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இந்நிலையில் கங்கர் எனப்படும் விமானக்கொட்டகைக்குள்ளும், வெளித்திடலிலும் நிற்கும் விமானங்களை அழிப்பதற்கான சிறந்த வழி எது என்ற விவாதம் விமானங்களை நெருங்கிச் சென்று நேரக்கணிப்புக் குண்டுகளைப் பொருத்தலாம் என்றும், தவிர்க்கமுடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டால் உடலில் பொருத்தியிருக்கும் வெடிகுண்டின் மூலமாக விமானத்தை ஒட்டியபடி வெடிக்கவைத்து விமானத்தைத் தகர்க்கலாம் என்றும் கருத்துக் கூறப்பட்டது.

தூரத்தில் இருந்தே விமானங்களை P.K, G.P.M.G மற்றும் R.P.Gகளால் அடிப்பதே பொருத்தமானதாய் இருக்கும் என்பது சாள்ஸ்சின் வாதம். “என்னால் முடியும்”. P.K, R.P.G பயிற்சியை என்னிடமே விட்டுவிடுங்கள். என்று நின்றுகொண்டான் சாள்ஸ். நான் சாள்சின் பக்கமே நின்று கொண்டேன். சாள்சின் கருத்தே சரியானது என்பதை கட்டுநாயக்காவின் முடிவு நிரூபித்தது.

“பலமானதொரு பாதுகாப்பிற்குள்ளும் பலவீனமான நிலையிருக்கும்” என்பதை உணர்ந்த முன்னகர்த்தல்கள் பணிசார்ந்த நகர்வுகளுக்காக தன்னுடன் தொடர்புபடும் மானிடர்களை முடுக்கி, இறுக்கி நகர்த்துவதில் சாள்சின் திறமை வெளிப்படும். ராஜகிரிய வழிநடத்தல் இதனை வெளிப்படுத்தும்.

கண்ணிவெடி ஒன்றை நிலைப்படுத்த ராஜகிரியவில் இடம் பார்த்து அறிவிக்கின்றான் முத்தப்பன். சாள்சின் மூளையில் திட்டம் மாற்றம். அணியொன்று நிலையெடுக்கப் பொருத்தமான இடம் பார்… மறைந்திருக்க வீடு பார்…, என்று பின்னர் சாள்சிடமிருந்து முத்தப்பனுக்கு யோசனைகளும், அழுத்தமான கட்டளைகளும் சென்றன. அது கடினம் என்றும், சாத்தியமில்லை என்றும் முத்தப்பனிடமிருந்து பதில். அப்படியானால் வேறு ஆளை அனுப்பி அதனைப் பார்க்க “என்னால் முடியும்”. என்று சாள்ஸ் கறாராக, பதில் அனுப்ப, முத்தப்பன் மீண்டும் முயற்சித்தான். சாள்சின் எதிர்பார்ப்பு சரியென்பதை நிரூபித்தன அடுத்து வந்த நாட்களும், வகுக்கப்பட்ட திட்டமும்.

சிக்கலான இராணுவத் திட்டத்தில் இக்கட்டான நிலைமைகள் தோன்றும். அவ்வேளையில் பின் விளைவுகள் தொடர்பாக எதிர்மறை எண்ணம் தென்படும்போதும் அவற்றை எதிர்கொள்ளும் துணிவுடன் நேர்மறைச் சிந்தனையை முன்நிறுத்தி திட்டத்தை நகர்த்த ஒரு இரும்பு மனம் வேண்டும். வைரம் பாய்ந்த அந்த இரும்புமனம் சாள்சிற்கு வாய்த்திருந்தது. இது சாள்சின் பல வெற்றிகளின் சூட்சுமம்.

இப்படித்தான் ஒரு சந்தர்ப்பம். 1998. சிறீலங்கா ஜெயசிக்குறு படைகள் கிளிநொச்சியை நெருங்கிவிடலாம் என்ற வகையில் முன்நகர்வில் நின்றன. அதனை ஒரு அரசியல் வெற்றியுமாக்கி சிறீலங்காவின் 50 ஆவது சுதந்திர தினத்தைத் தமிழரை வெற்றிகொண்ட எழுச்சி நாளாக்க கங்கணம் கட்டி நின்றது கண்டிச் சிங்களத்தின் தலைமை.

கண்டிச் சிங்களத்திற்கு பாடம் படிப்பிக்கத் தமிழரை அடிமை கொள்ளும் சிங்களத்தின் அதிகார மையத்திற்கு நல்லதொரு அடி கொடுக்கத் திட்டம் தயாரானது. குறுகிய அவகாசத்தில் குறுகிய நாட்களில் அது சாத்தியமா? என்று நாம் கேட்க “என்னால் முடியும்” என்ற சாள்சின் பதிலுடன் வேகவேகமாக வகுக்கப்பட்டது திட்டம்.

முழுமையாக பயிற்சிபெற்ற கரும்புலி அணிகூட தயாராக இல்லாத நிலவரம். சாள்சின் நேரடி உதவியாளர்களும், வேறு பணி நிலைக்கு உரியோராகவும் நின்றிருந்த போராளிகளும் ஒன்றாக்கப்பட்டு அவசரக் கரும்புலி அணியும் தயாராகி விட்டது.

திட்டம் உருவம்பெற்று வெடிமருந்து வாகனம் புறப்படச் சில மணிநேர அவகாசமே இருந்த ஒரு பகற்பொழுது. சிறீலங்கா வானொலியில் மதியச் செய்தியறிக்கை சொன்னது “மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் வாகனத்தில் வெடிமருந்து பொருத்துகின்றார்கள்… இப் புலனாய்வுத் தகவலின்படி வாகனத்தைப் பிடிக்க எல்லாப் படை நிலைகளும் உசார்படுத்தப்பட்டுள்ளன”. இது செய்தியின் சாராம்சம். இப்போது இக்கட்டான நிலைமை. செய்தியிற் சொன்னதுபோல் அதே மட்டக்களப்பு பழுகாமத்தில் நின்றே வெடிமருந்து பொருத்திய வாகனத்தில் இறுதிச் சரிபார்த்தலில் ஈடுபட்டிருந்தனர் சாள்சும் அவனது நண்பர்களும்.

எம்மைக் கலங்கடித்துத் எம்மிடம் உள்ள திட்டங்களைக் கைவிடச் செய்யும் பொதுவான தந்திரோபாயமாகவும் இருக்கலாம். அல்லது உண்மையான புலனாய்வு அறிக்கை தவறுதலாக செய்தி நிறுவனத்திற்கு கசிய, அங்கு அது வெளிப்படுத்தப்பட்டு விட்டதாகவும் இருக்கலாம்.

நகர்ந்த கரும்புலிப் போராளியொருவர் எதிரிகளிடம் கைதாகி விட்டார். இலக்குப் பிரதேசத்தில் நடவடிக்கைப் பொறுப்பாளரும், மேற்படி கரும்புலியும் சந்திக்க ஓரிடத்திற்குச் சென்றிருந்தனர். தனது சந்திப்பு நேரத்திற்கு சற்று முன் - பின்னாக குறித்த போராளி கைதானதை தானே நேரில் உறுதிப்படுத்தியதாக நடவடிக்கைப் பொறுப்பாளர், சாள்சிற்கு அறிவிக்கின்றார்.







இதே விடயத்தையொட்டிய புலனாய்வு அறிக்கையொன்றும் வேறொரு இரகசியத் தகவல் மூலத்திலிருந்தும் அதே சமநேரத்தில் கிடைத்தது. ஆக எமது திட்டத்தை முன்னறிந்து முறியடிக்க எதிரி தயாராகிவிட்டான் என்பது தெளிவாகிவிட்டது.

இதற்கிடையில் இன்னுமொரு புதிய சிக்கலாக இலக்கு நோக்கி

கைதானவருக்கு பொறுப்பாளரையும், அணியில் மற்றையோரையும் தெரியும் என்பதும், இலக்கு, திட்டம் என்பனவும் தெரியுமென்பதுமான நிலவரம். நெருக்கடியான ஆபத்தும் நிலவர அழுத்தமும் உச்சத்தில் இருந்த நேரமது.

சாதாரண மனிதர்களுக்கு திட்டத்தை இடைநிறுத்தி, பிற்போட்டு விட பொருத்தமான நிலவரம். ஆனால் சாள்ஸ் சாதாரண



மானவன் அல்ல. அவன் பின் விளைவுகளை எதிர்மறையாக அல்லாது நேர்மறையாக சிந்திக்கும் ஆற்றல் கொண்டவன். விளைவுகளுக்கு அஞ்சாத இரும்பு மனம் கொண்ட மனிதன்.

“அவசர அவசரமாகச் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றுடன்” திட்டம் நகர்ந்தது. எதிரி வானொலியில் கூறிய அதே கிராமத்தில் இருந்து, எதிரி எதிர்பார்த்த அதே பாதையால், அதே நாளில், அதே திட்டம் நகர்ந்தது. – வெற்றி எமதானது.

புலனாய்வின் நீண்டகால இரகசிய நடவடிக்கையாளனும், சாள்சின் அருகிருந்து அவனையுணர்ந்த கரும்புலிகளும் இணைந்த அர்ப்பணிப்பின் வெற்றி சாள்சின் அயராத உழைப்பிற்கும், அசராத மனத்துணிவிற்கும் கிடைத்த வெற்றி ஆனது. சாள்சின் வழிநடத்தலின் பெறுபேறாய், அவனது ஆளுமையின் அடையாளமாய் ஆனது அந்த வெற்றி!

புலனாய்வுத்துறையில் முக்கிய பொறுப்பாளராக விளங்கியவன் சாள்ஸ். நிர்வாக ரீதியாக அல்லாவிட்டாலும் நடைமுறை ரீதியாக எனக்கு அடுத்த பொறுப்புநிலையில் செயற்பட்டு, திட்டங்களை வீச்சுடனும், மூச்சுடனும் முன் நகர்த்தியவன்.

அவன் புலனாய்வுத்துறையில் இருந்து துறை மாறிச் சென்ற நினைவு பாரமாய்க் கனக்கும்.

தனிப்பட்ட உறவுகளுக்கு மேலாக, கட்டமைப்பின் மீதான பொறுப்புணர்வு மேலெழுந்தவேளை அது. எங்கள் நாட்டை சுனாமி தாக்கிய காலத்தில் எங்கள் உறவினுள்ளும் சோகம் சூழ்ந்தது.

சாள்ஸ் தீவிரமான முன் முயல்வின் அடையாளமாய் தலைவர் அவர்களின் மதிப்பைப் பெற்றிருந்தவன். ஒரு இராணுவத் திட்டம் எவ்வாறு வகுக்கப்பட வேண்டும் எனத் தலைவர் அவர்களின் மனதில் உதிக்கும் எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கும் சிந்தனைத் திறனும், செயலூக்கம் கொண்டவனுமாக சாள்ஸ் வளர்ந்திருந்தான்.

தனியானதொரு நிர்வாக அலகை இயக்குவதற்குத் தேவையான ஆற்றலும், அறிவும், திறனும் கொண்டிருந்த சாள்சிற்கு தனியானதொரு பணி வழங்க தலைவர் அவர்கள் முடிவு செய்தார்.

2002. சமாதான காலத்தின் ஒருநாள் கொழும்பில் இருந்து முதலாளி ஒருவர் பெரிய வெற்றிகளைப் பெறலாம், கொஞ்சம் காசுதான் வேண்டும் என்று கூறி வந்திருந்தார். – அவரது மொழியில் கொஞ்சக்காசு. அவர் கேட்ட தொகை மூன்று கோடிரூபா – அவர் வேறு யாருமல்ல 1991 இல் உதவி செய்யலாம் என்று எம்மை இழுத்தடித்து, கொழும்பில் சாள்சை பல தடவை சந்தித்து, அலைக்களித்து ஏமாற்றிய அதே தொண்டமனாற்று முதலாளி. இப்போது கிளிநொச்சியில் தன்னை நேரில் சந்திக்க வந்த சாள்சிடமே சொன்னார். “என்னைப்பற்றியும், கூட்டுப்படைத் தலைமையக தாக்குதலில் எனது பங்களிப்புப்பற்றியும் அவருக்கு நான் செய்த உதவி பற்றியும் சாள்சிடம் போய்க் கேட்டுப்பாருங்கள்” என்று.

இந்த நகைச்சுவையின் பின்னே மறைந்திருந்தது நாம் சந்தித்த மனிதர்களின் ஏமாற்றுத்தனம் மட்டுமல்ல நீண்ட, நெடிய புலனாய்வு வாழ்வில் சாள்சின் அனுபவமும், வரலாறும்.



தாக்குதல்கள், இராணுவ நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு அப்பாலான ஊடுருவல், மனம் மாற்றுதல் சார்ந்த ஆழமான புலனாய்வும், அதன் தளமும் சாள்சிற்கு அந்நியமானதல்ல.

ஆழமான புலனாய்வுத் தளத்தில் செயற்படுவதற்கான அவகாசம் இல்லாதபடி இராணுவ நடவடிக்கை சார்ந்த தொடர்ச்சியான அழுத்தத்திற்குள் சாள்ஸ் ஆழ்ந்திருந்தான் என்பதே இன்னொரு உண்மையாகும்.

“வெட்டொன்று துண்டு இரண்டாய்” பேசும் அவனது இயல்பும், “”உன்னால் முடியுமா? முடியாதா? இப்போதே சொல்” என்று உரையாடும் அவனது பாங்கும், இதுபோன்ற ஆழமான புலனாய்வுகளில் அவன் நேரடியாய் இறங்கி நின்று செய்வதில் இடைஞ்சலாய் இருந்ததையும் மறுப்பதற்கில்லைத்தான்.

ஆனால் தனது ஆளுகையின் கீழிருந்த பொறுப்பு நிலைப் புலனாய்வாளர்களுக்கு ஆழமான புலனாய்வு பற்றிய நுட்பங்களை விளங்கவைத்து, நகர்வுகளை திட்டமிட்டு, முன்நகர்த்தி, வெற்றிமிகு பெறுபேற்றை எட்டுவதில் சாள்ஸ் கணிசமாகவே சாதித்திருந்தான்.

எதிரியின் இராணுவத் தலைமையகத்திற்குள்ளும், எதிரியின் புலனாய்வுக் கட்டமைப்பிற்குள்ளும் பயனுள்ள மனிதர்களை கண்டறிந்தோம். அவர்களை மனம்மாற்றி, விடுதலைக்கு வலுச்சேர்க்கும் பெரும் வெற்றிகளை ஈட்டியதில் சாள்சின் வழிநடத்தலும், புலனாய்வின் முன்நகர்த்தல்களும் அவனது புலனாய்வு வரலாற்றின் பொன்னான பக்கங்கள்.

புலனாய்வில் வழமையான பணிகளில் உள்ள அழுத்தத்தின் அளவும்கூடக் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல என்ற போதிலும், கூட புலனாய்வு நகர்வுகள் நடந்துகொண்டிருக்கும் போது பின்னணி நிலை அழுத்தங்கள் உச்ச நிலையில் இருக்கும்.

எதிரியின் முழுச் சுற்றிவளைப்பிலும், தேர்ந்த கண்காணிப்பாளர்களால் அமைக்கப்பட்ட நெருக்கடிக்குள்ளும், ஆயுதங்கள், வெடிபொருட்களுடனோ அல்லது வேறு திட்டங்களுடனோ நகர வேண்டியிருக்கும். அந்த நகர்வுகளின் நிலைபற்றி இங்கிருந்து சிந்தித்துக்கொண்டிருந்தால் தூக்கம் வருவதே அரிதாக இருக்



கும். அதுவும் சில வேளைகளில் குறித்த கரும்புலி உறுப்பினர்கள் நகர வாழ்விற்கு அவ்வளவாக தேர்ச்சிபெறாத கிராமியத் தன்மையுடையவர்களாகவும் இருந்து விட்டாலோ சொல்லவேண்டியதில்லை.

நாம் சந்தித்த அழுத்தங்களை விபரிக்க முற்பட்டால் அவை பெரும் விவரணமாய் நீளும். இவ்வகை அழுத்தம் எப்போதாவது என்பதாக அல்லாமல், எப்போதுமே என்பதாகும்போது அவ் அழுத்தங்களின் தாங்குசக்தித் துணையொன்றை நாடும் எனது மனம். அவ் அழுத்தங்களின் தாங்குசக்தித் துணையாகச் செயற்பட்டான் சாள்ஸ்.

சாள்ஸ் நல்ல அழகியல் உணர்வு கொண்டவன். பூங்கன்றுகள் வளர்ப்பதிலும், செல்லப்பிராணிகளைப் பராமரிப்பதிலும் ஆர்வம் கொண்டவன். அதேபோல் இயல்பான ஆற்றலுடன் முகாம்கள், வீடுகள் மற்றும் கட்டடங்களை வடிவமைக்கும் திறனையும் பெற்றிருந்தான். அவனது பணி சார்ந்த இறுக்கங்கள் முன்நின்று இவற்றில் பொழுதுபோக்க விடாமல் வைத்திருந்தபோதும் கூட, கிடைக்கும் வாய்ப்புகளில் தனது அழகியல் ஆர்வத்தை வெளிப்படுத்துவான்.

தேர்ந்த வாசிப்பு ஆர்வத்தையும், சிறந்த எழுத்தாற்றலையும் கொண்டிருந்த சாள்சின் எழுத்தாக்கங்கள் எமது இளைய போராளிகளுக்கு புலனாய்வுச் செயற்பாட்டிலும், நிர்வாகவியல் ஒழுங்கமைப்பிலும் நல்ல பாடங்களாய் அமைந்திருந்தன. எமது



தேசியத்தலைவர் அவர்களது 50 ஆவது அகவை மலரில் “தலைவரது கோட்பாடு” என்ற பெயரில் சாள்ஸ் எழுதிய கட்டுரையானது இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது. தலைவர் அவர்கள் பற்றிய சாள்சின் புரிந்துணர்வின் அடிப்படையிலும், சாள்சின் காத்திரமான எழுத்தாற்றலை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது மேற்படி ஆக்கம்.

தன்னோடு பணிபுரிவோருக்குக் கட்டளைகளை வழங்கும் போது குறிக்கோளை நோக்கியே முழுதாய் வழி நடத்துவான் சாள்ஸ். மனித உணர்வுகளுக்கு ஆட்பட்டு வேறு தெரிவுகளுக்கு இடம்கொடுக்க வாய்ப்பளிக்காமல் கோடுபோட்டது போல் துல்லியமாய் அமைந்திருக்கும் சாள்சின் கட்டளைகள்.

தன்கீழ் பணிபுரிவோருக்கு போராட்டத்தை முதன்மைப்படுத்தி கட்டளைகளை வழங்குவதைப்போலவே அவன் தனது வாழ்விலும் போராட்டத்தை முதன்மைப்படுத்தியே வாழ்ந்தான். சிந்தித்தான்.

நேரடிக் களச் செயற்பாட்டாளனாகவும், பின்னணி இயக்குனராகவும் அவன் பெற்ற பட்டறிவுகள் எண்ணற்றவை. தமிழீழப் புலனாய்வுப் பட்டறிவினதும், இராணுவச் செயற்பாட்டுப் பட்டறிவினதும் களஞ்சியமான அவன் வாழ்ந்த காலம் முழுவதும் தேசியம் பற்றியும், தேச விடுதலை பற்றியுமே சிந்தித்தான்.

புலனாய்வு வழிமுறையில் எதிரிகளைச் செயலிழக்கச் செய்வது பற்றியே அவனது சிந்தனை சுழலும். அவனுடைய எண்ணம் முழுவதும் கரும்புலிகளும், அவர்களது வெற்றிக்குத் தேவையான திட்ட நகர்வுகளுமே நிறைந்திருந்தன.

அவன் இன்னமும் வாழ்ந்து சாதித்திருக்க வேண்டியவன். தமிழீழத்தின் திறவுகோல்களாய் அமைந்திருக்கக்கூடிய இராணுவ வெற்றிகளை நோக்கியே அவனது படையப்புலனாய்வுச் செயற்பாட்டுக்காலச் சிந்தனைகள் இருந்திருக்கும். அதற்கான அறிவும், ஆற்றலும், பட்டறிவும் அவனிடம் இருந்தது.

மன்னாருக்கான முதன்மைச் சாலையில் எதிரியின் தாக்குதல் நடைபெறலாம், என்ற கணிப்பை முன்கூட்டியே அறிக்கையாகக் கொடுத்த சாள்ஸ் அதே சாலையில் எதிரியின் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டான். ஆபத்திருப்பது தெரிந்தும் அவ்விடத்தை நோக்கி அவனை பயணிக்க வைத்த சக்தி எது? அது விதியின் கொடிய கரமா?

இல்லை. அவனால் வழிநடத்தப்பட்ட போராளிகள் தொடர்புபட்ட பணி. தாயக மண்ணிலிருந்து வெகுதூரம் சென்று எதிரியின் கோட்டைக்குள் நிலைபெற்று நின்றார்கள் அவர்கள். அவர்களது நிலையை அவன் அறிவான். அவர்களது துடிப்பை…, அவர்களுக்கான நெருக்கடியை…, அவர்களைச் சுற்றி எதிரிகளின் வியூகத்தை…, அவன் அறிவான். – நெருக்கடி ஒன்றின் பின்னால் அவர்களுக்கு தனது வழிநடத்தலின் தேவையை – அவன் அறிவான்.

எதிரியின் தலைமை மையத்தினுள் நெருக்கடிக்குள் உறைந்திருக்கும் இளைய போராளி ஒருவனுக்கு – தனது பொறுப்பாளரின் குரல் – எப்படி இருக்கின்றாய்? என்ற விசாரிப்பு – உனக்கு ஏதாவது தேவையா? என்ற கனிவான கேள்வி – எப்படியாவது செய்யத்தான் வேண்டும் என்ற கறாரான அறிவுறுத்தல் – என்பன அவனை முடுக்கி, இயக்கி விடும் மந்திரங்கள் என்பதை அவன் அறிவான்.

அந்தத் தேவை – அந்தக் கட்டாயக் கடமை – அவனை மன்னாரை நோக்கிப் பயணிக்க வைத்தது. காலம் அவனுக்கிட்ட கடமை பாதுகாப்பு நோக்கிய சிந்தனையைப் புறந்தள்ளி, அவனை மன்னாரை நோக்கிப் பயணிக்க வைத்தது.

சாள்ஸ் ஒரு இளம் செயற்பாட்டுக்கள வீரனாக கொழும்பில் நின்ற காலத்தில் திட்டத்திற்குத் தெரிவுசெய்த கரும்புலி பிசகிய போது தானே கரும்புலியாய்ச் செல்லும் தயார் நிலையில் நின்றான். தனது பணிமுடிக்க உச்ச அர்ப்பணிப்பின் தயாரான நிலை அது. அந்த நிலையிலேயே இப்போதும் தன் பணிமுடிக்க ஆபத்தைப் புறம்தள்ளி முன்நகர்ந்தான்.

வெடிமருந்து வாகனத்தில் கரும்புலியுடன் தயாராகப் போகையில் எதிர்பாராமல் இலக்குவர, “வெடிக்கவை” என்ற சாள்சின் கட்டளையைப் புறக்கணித்து அன்று அந்தக் கரும்புலி சாள்சை எம்மிடம் அனுப்பி வைத்தான். “இந்த வேலை தொடர்ந்து நடக்கவேணும்” என்ற அந்தக் கரும்புலியின் வார்த்தையை மெய்யாக்கி அதற்காக வாழ்ந்தான். மாவீரனாகி அவர்களோடு கலந்துவிட்டான்.

கரும்புலியாய் வாழ்ந்து… … …., கரும்புலியால் வாழ்ந்து… … …., கரும்புலிகளோடு வாழ்ந்து… … …, கரும்புலிகளுக்காக வாழ்ந்து… … …, இறுதிவரை கரும்புலிகளோடு கலந்திருந்தான். கரும்புலிகள் கண்ட தமிழீழ தேசத்தின் விடுதலைக் கனவு நனவாகி சரித்திரத்தின் நாயகனாக வாழ்வான் சாள்ஸ்.

ச. பொட்டு
பொறுப்பாளர்,
புலனாய்வுத்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்.




# அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியினை மீளாய்வுக்குட்படுத்தி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்

ஜனவரி 02, 2023

அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியினை மீளாய்வு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை செய்யவேண்டும் என முன்னாள் வடமாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இதை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

புதுவருடம் தொடங்கி புதுவருட அன்றே புதுவரவு மக்களுக்கு இலங்கை அரசாங்கம் பேரதிச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முதலாம், இரண்டாம் வாசிப்பிலே சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் உண்மைகளை முடிமறைத்து 97 பொருட்களின் விலைவாசி உயர்த்தியிருக்கின்றது.

இவ்வருடத்திலே இலங்கை வாழ்மக்கள் மீது பெரும் வரிச்சுமையினை அரசு செலுத்தியுள்ளது.

குறிப்பாக வரிக்குள்ளே மதுபானம், புகைத்தல், ஆடம்பர, இலத்திரனியல் பொருட்களுக்காக பொருட்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய பொருட்களுக்கு விலை உயர்வடைந்திருப்பது பேரதிர்ச்சியினை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த 30வருடம் யுத்த நடந்தபோதிலும் கூட இப்படியான வரி அதிகரிக்கப்படவில்லை. விலைவாசியும் அதிகரிக்கப்படவில்லை. பொருட்தட்டுப்பாடு ஏற்படவில்லை.

30 வருட யுத்தத்திலும் கூட பல்லாயிரம் ரூபாக்களை செலவளித்த இவ்வரசாங்கம் 30 வருட யுத்தம் முடிந்த பிற்பாடு 2024 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இவ்வளவு வற்வரியிலான சுமையினை மக்கள் மீது சுமத்தியுள்ளது.

எற்கனவே இருந்த அரசாங்கங்களும் ஊழலுக்கு, மோசடிக்கு, துஸ்பிரயோகத்திற்கு பெயர்போன அரசாங்களுக்கு இருந்தது. மக்களால் விரட்டப்பட்ட அரசாங்கமாக காணப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆதரவு பெறமால் நாடாளுமன்ற பெரும்பாண்மையினை பெற்றுக் கொண்டு வந்து ஜனநாயக விரோத பாதீட்டினை நிறைவேற்றியுள்ளார்.

குறிப்பாக அத்தியாவசிய பொருட்கள் மீதான வரி அதிகரிப்பானது ஏழை மக்கள், அன்றாடம் கூலித்தொழிலை செய்வர்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், மலையக மக்களது வயிற்றில் பேரிடியாக காணப்படுகின்றது.

இவ் பாதீட்டினை சமர்ப்பித்து, மக்களுக்கு எந்த பயனும் இல்லாது வாட்டிவதைக்கின்ற அரசாங்கமாக மாறியுள்ளது. பாதீடு தொடர்பாக குரல்கொடுக்கின்றார்கள்.

நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய விடயங்களை பேசாமல், தடுத்து நிறுத்தவேண்டிய விடயங்களை தடுத்து நிறுத்தாமல், பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்காமலும் இருந்து கொண்டு தற்போது வெளியில்வந்து மக்கள் மீது பாதீடு தொடர்பாக குரல் கொடுக்கின்றார்கள்.




அரசாங்கம் வரிசலுகை தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டும். உடனடியாக அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியினை மீளாய்வு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை செய்யவேண்டும்.

இப்போது அத்தியாவசிய பொருட்களில் வெங்காயம் 530 ரூபா விற்கின்றது. மேலும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் விண்ணை தொட்டுக்கொண்டு இருக்கின்றது.

திரைமறைவிலே திட்டமிட்டு கபடமாக கொண்டுவந்து மக்கள் மீது சுமத்தப்பட்ட வரியினை நீக்கவேண்டும். நீக்கதவறும் பட்சத்தில் தென்னிலங்கை மக்களும், நாடு பூராக வசிக்கும் மக்களும் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள். அது மக்கள் போராட்டமாக வெடிக்கும் என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மூலம் தமிழர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும்!

## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்

ஜனவரி 01, 2024

பொது வேட்பாளர் ஒருவரை நிறுவத்துவதன் மூலம் தமிழர்கள் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமது அரசியல் நிலைபாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் புதிய ஆண்டில் நடைபெறுவதற்கான வாய்ப்பு அதிகளவில் உள்ளது. இதில் தமிழர் தரப்பு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி வெவ்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பற்றிப்பேசி அதில் இணக்கம் காண்பவரை ஆதரிப்பது, தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது, தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஸ்கரிப்பது என்று மூன்று விதமான அபிப்பிராயங்கள் உள்ளன. இதில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுவத்துவதன் மூலம் தமிழர்கள் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் தமது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும் என்று அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு அதன் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (31.12.2023) கோண்டாவிலில் நடைபெற்றது. இவ்வுரையரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே நிலாந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தரப்பு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுடன் பேசினாலும் எவரும் வெளிப்படையாகத் தமது வாக்குறுதிகளைத் தரப்போவதில்லை. தமிழர் தரப்புக்கு ஆதரவாகக் காட்டிச் சிங்கள மக்களின் வாக்குகளை இழப்பதற்கு அவர்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள். வெளிப்படையாகத் தராத எந்தவொரு உத்தரவாதமும் தேர்தலின் பின்னர் கண்டுகொள்ளப்படாது .

என்பதே கடந்த கால வரலாறு.

சரத் பொன்சேகாவைத் தமிழர்கள் ஆதரித்ததன் மூலம் மஹிந்த ராஜபக்சவையே இறுதியில் வெல்ல வைக்க முடிந்தது என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

ஒப்பீட்டளவில் தமிழ்த் தரப்பின் முன்னால் உள்ள தெரிவு பொது வேட்பாளர்தான். இதில் ஒருபோதும் தமிழ் வேட்பாளர் வெற்றி பெறப் போவதில்லை. ஆனால், தாம் விரும்பும் அரசியல் தீர்வை வெளிப்படையாக முன்வைத்துத் திரளான தமிழ் வாக்குகளைப் பெறுவதன் மூலம் தமது அபிலாசையை வெளிப்படுத்த முடியும். இது சமஸ்டியாகவும் இருக்கலாம் தனிநாடாகவும் இருக்கலாம்.



ஒருவகையில் இதனைத் தமிழ் மக்களிடையே நடாத்தப்படும் பொது வாக்கெடுப்பாகக்கூடக் கருதலாம். ஆனால், இதன் வெற்றி என்பது ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வாக்குகளைத் திரட்டக்கூடிய ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதிலேயே தங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# நட்டாற்றில் தமிழ் மக்கள்!

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம்

ஜனவரி 02, 2023

கடந்த வருடம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முதலாம், இரண்டாம் வாசிப்பிலே சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் உண்மைகளை மூடிமறைத்து 97 பொருட்களின் விலைவாசியை அரசு உயர்த்தியிருக்கின்றதென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே விந்தன் கனகரட்ணம் குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார்.

வடகிழக்கு தமிழர் தாயகத்தில் மக்கள் ஏற்கனவே யுத்த அவலத்தினால் அனைத்தினையும் இழந்து வீதியில் விடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் புதிய பொருளாதார நெருக்க தமிழ் மக்களை மேலும் மோசமாக பாதித்துள்ளதாகவும் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் வரி எண்களை பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரு வருடத்தின் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையிலான காலம் மதிப்பீட்டு ஆண்டாகக் கருதப்படுகிறது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. பதிவு செய்துக்கொள்ளாதவர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதிவு செய்யும் எனவும் இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# 02.01.2007 அன்று தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு கிபீர் விமானம் மூலம் குண்டு வீச்சு நடத்தி தமிழினப்படுகொலை செய்த நினைவு நாள்!

ஜனவரி 02, 2023

மன்னார் படகுத்துறைப் படுகொலை :

வட தமிழீழம் , மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வட கிழக்கே சுமார் 20மைல்களுக்கு அப்பாலுள்ளது படகுத்துறைக் கிராமம். 1995ம் ஆண்டு யாழ்ப்பாணம் மீது சிங்கள இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ். நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்து 35 வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதார மாகக் கொண்டமையால் இக்கரையோரக் கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்த்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று உள்ளது. தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.

2007 ஜனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக இலங்கை வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9.30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த இலங்கை வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும்



விமானங்களிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்பு பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததால் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந் தன. பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந் தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற் பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வை யிட்டுள்ளது. இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப் பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடூரத்தையே வெளிப்படுத்துகின்றது.

இச்சம்வத்தின் போது படுகொலை செய்யப்பட்டவர்கள்:

01. அ.ஆனந்தி (வயது 32)
02. அ. விதுசன் (வயது 04)
03. அ.இராஜகுமாரி (வயது 57)
04. அ.சத்தியப்பிள்ளை (வயது 26)
06. கு.தயாழன் (வயது 02)
07. கு.வலஸ்தீனா (வயது 30)
08. ப.ஜமேசன் (வயது 12)
09. ச.மதுசன் (வயது 01)
10. உதயகுமார் (வயது 55)
11. உ.மாலினி (வயது 27)
12. உ.தர்சிகா (வயது 01)
13. வி.வினோயன் (வயது 04)
14. வி.தர்சினி (வயது 08)
15. வி.விஜிதா (வயது 35)







# 02.01.2006 அன்று இனப்படுகொலையாளி இராஜபக்ச அரசால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் நினைவு நாள் !

ஜனவரி 02, 2023

திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியி லுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தினமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01. 2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் பலர் அவ்



விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளை ஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.

கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனித ஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந் தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படை யினர் அங்கு சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங் கினர். இதற்கிடையில் காயமடைந்த மாண வர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாண வர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறிய போதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து கண் மூடித் தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டு மிராண்டித்



தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படு கொலை



03. மனோகரன் வஜீகர் (வயது 21)







செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாய மடைந்திருந்தனர்.

இச்சம்பவத்திற் படுகொலை செய்யப்பட்டவர்கள்:

01. லோகிதராசா றொகான் (வயது 20)
02. சண்முகராஜா சஜீந்திரன் (வயது 19)

04. தங்கத்துரை சிவானந்தன் (வயது 20)
05. யோகராஜா கேமச்சந்திரன் (வயது 22)

இச்சம்பவத்திற் காயமடைந்தவர்கள் விபரம்:

01. பரராஜசிங்கம் கோகிலராஜா (வயது 21)
02. யோகராஜா பூங்குழலோன் (வயது 20)

# வட்டுக்கோட்டை இளைஞனின் மரணம் மனித ஆட்கொலை – 21 சாட்சியங்கள், வைத்திய அறிக்கையின் அடிப்படையில் கட்டளை!

ஜனவரி 03, 2024

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திர வதைக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணம் “மனித ஆட்கொலை” என யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம்



செவ்வாய்க்கிழமை கட்டளை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளன நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந் துள்ளார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றிற்கு கிடைக் கப்பெற்றது. அதில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞனின் உடலில் காணப்பட்டதாகவும் இதனால் உயி ரிழப்பு நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அத்துடன் குறித்த வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில் முக தோற்றள வில் இளைஞனின் உயிரிழப்பு, மனித ஆட்கொலை என நீதவான் மரண விசாரணை கட்டளையின் போது குறிப்பிட்டார்.

மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்ததாக தெரிவித்த நிலையில், இது வரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றைய சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப் படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணை பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.




அத்துடன் குறித்த குற்றத்தில் பொலிசார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறு மன்று கட்டளையிட்டது.

மேலும் , குறித்த வழக்கு விசாரணை ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பாரப்படுத்துமாறு நீதிமன்ற பதி வாளருக்கு நீதவான் அறிவுறுத்தினார்.

அதனை தொடர்ந்து கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்துள்ளார்.

# யாழ். உடுப்பிட்டி மதுபான சாலையை அகற்ற கோரி போராட்டம்!

ஜனவரி 03, 2023

யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபான சாலையை அகற்ற கோரி இன்றைய தினம் புதன்கிழமை காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் பெரு மளவானவர்கள் கலந்துகொண்டனர். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம்பெற்றது.

போராட்டத்தின் இறுதியில் பிரதேச செயலகத்திற்கு பேரணியாக சென்று ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளதுடன் அதன் பிரதிகள் பல்வேறு தரப்புகளுக்கும் அனுப்பி வைக் கப்படவுள்ளது.







# திருமலை 5 மாணவர் படுகொலை விவகாரம் 18 வருடங்கள் கடந்தும் நீதி நிலை நாட்டப்படவில்லை!

## சர்வதேச மன்னிப்புச்சபை

ஜனவரி 04, 2023

திருகோணமலை 5 மாணவர் படுகொலைச் சம்பவம் இடம் பெற்று 18 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அது குறித்து உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப் படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சர்வ தேச மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டுள்ளது.

செவ்வாய்கிழமையுடன் (2) ‘திருகோணமலை 5 மாணவர் படுகொலை’ இடம்பெற்று 18 வருடங்கள் பூர்த்தியடைந் துள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை நகரில் 5 தமிழ் மாணவர்கள் பாதுகாப் புப்படையினரால் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, திருகோணமலை 5 மாணவர் படுகொலைச் சம்பவம் இடம் பெற்று 18 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அதுகுறித்து உண்மை, நீதி நிலைநாட்டப்படுவதையும், இழப்பீடு வழங்கப் படுவதையும் உறுதிசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் தவறி யிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது. அதுமாத்திரமன்றி முக்கிய ஆதாரங்கள் இருந்தபோதிலும், அது மூடிமறைக்கப் பட்டிருப்பதாகவும் மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

AMNESTY INTERNATIONAL



# வெளியேறு வெளியேறு ரணிலே வெளியேறு யாழில் கிளர்ந்தெழுந்த மக்கள்!

ஜனவரி 04, 2023

யாழ்ப்பாணத்திற்கு பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவுக்கு எதிராக போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டது.

இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பழைய பூங்கா அருகில் இப் போராட்டம் இடம்பெற்றது.

பழைய பூங்கா அருகில் காவல்துறையினர் வீதித் தடைகளை அமைத்து போராட்டகாரர்களைத் தடுத்தனர்.

இதேவேளை ரணிலின் யாழ் பயணத்தை முன்னிட்டு பாது காப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ். மாவட்ட செயலக வளாகம் சுற்றியுள்ள பகுதிகள் வீதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டுள்ளதோடு, அப்பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் கலகமடக்கும் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ் மாவட்ட செயலகத்துக்கு அருகே ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட மூவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தியும் வெளியாகி யுள்ளது.








# பூநகரி குளத்தில் சூரியசக்தி மின் உற்பத்தி, அவுஸ்ரேலியாவின் நிறுவனத்துக்கு வழங்கல்; தமிழர் நிலம் இயற்கைச் சூழல் அழிப்பு...!

ஜனவரி 04, 2023

கேள்வி விலை மனு (Tender) நடைமுறைகளின்றி பூநகரி குளத்தில் 1,727 மில்லியன் பெறுமதியான சூரியசக்தி மின் உற்பத்தியில் ஈடுபட முன் அனுபவமற்ற அவுஸ்திரேலியாவின் United Solar Group நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி இருக்கின்றார்கள்.



Hindenburg Research ஆய்வு நிறுவனத்தால் நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக அடையாளம் காட்டப்பட்டு இருக்கும் இந்தியாவின் அதானி குழுமத்திற்கு மன்னாரிலும் பூநகரியிலும் இரண்டு எரிசக்தி திட்டங்களுக்கு அனுமதி வழங்கி இருக்கின்றார்கள்.

சுற்று சூழல் அனுமதியின்றி பூநகரி பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவில் 1,200 ஹெக்டேயர் பரப்பளவில் சுண்ணக் கல் அகழ டோக்கியோ நிறுவனத்திற்கு அனுமதி வழங்க முயற்சிக்கின்றார்கள்.

தீவகத்தில் சூரிய மின் உற்பத்தி திட்டத்திற்கு இந்தியா நிறு வனஙக்ளுக்கு மட்டும் அழைப்பு விடுத்தது கேள்வி விலை மனு கோரலிருந்து விலகியிருந்த U solar Clean Energy Solutions (PVT) LTD என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி இருக் கின்றார்கள்.

பொன்னாலை .மருதேங்கேணி , தனங்கிளப்பு கரையோர பகுதிகளில் Musalpetti Wind Power (PVT) Ltd என்கிற தனியார் நிறுவனம் ஊடக காற்றாலைகளை நிறுவ முயற்சிக்கின்றார்கள் காங்கேசந்துறையுள்ள தனியார் காணிகளில் முறையான அனு மதிகள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாமல் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை சுவீகரித்து நடைமுறைகளை பின்பற் றாமல் தனியார் பல்கலைக் கழகம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்க முயற்சிக்கின்றார்கள்.

இயற்கையாகவே மேய்ச்சலுக்காகவும், இருப்புக்காகவும், விருத்திக்காகவும் மீன்கள் நடமாடும் பகுதிகளில் 150 இற்கு மேற்பட்ட சட்டவிரோத கடலட்டை பண்ணைகள் உருவாக்கி இருக்கின்றார்கள்.

பளையில் தென்னை பயிர்ச்செய்கை ஆராய்ச்சிக்கென சுமார் மூவாயிரம் ஏக்கர் அரச காணியை சீனாவிற்கு வழங்க முயற் சிகின்றார்கள் (உறுதிப்படுத்த முடியவில்லை).

மேற்படி நடைமுறைகளுக்கு மாறான முயற்சிகள் குறித்து தமிழ் அரசியல் தரப்புகள் முதல் தமிழ் ஊடகங்கள் சகலரும் அமைதியாக இருக்கின்றார்கள்.

குறிப்பாக United Solar Group குறித்து பல்வேறு விடயங்களை அம்பலப்படுத்த பட்டு இருக்கின்றது. அதானியின் முதலீடுகள் குறித்து பல தரவுகள் வெளியாகி இருக்கிறது.

நாங்கள் இப்போதாவது விழித்து கொள்ள வேண்டும். அறிவுபூர்வமாக நீண்டகால நோக்கில் சிந்தித்து மேற்படி முயற்சிகளை எதிர்கொள்ள தவறினால் இந்த நிலம் நாங்கள் வாழ முடியாத தேசமாகி விடும்.



**தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**
**தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!**

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய தமிழர் திருநாளாம் தைப்பொங்கல்*
*நல்வாழ்த்துகள். – சங்கத்தமிழ்*

# பூநகரியிலும் ரணில் வருகைக்கு எதிர்ப்பும், தடையும்!

ஜனவரி 05, 2023

கிளிநொச்சி - பூநகரியில் ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் போது முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்திற்கு தடை விதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலகத்தில் சிறீலங்கா ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடல்கள் இன்று (05) மாலை இடம்பெற்றது. இந்நிலையில் பொன்னாவெளி பகுதியில் சீமெந்து நிறுவனமொன்றுக்கு அகழ்வு பணிகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது.

இந்நிலையில், ஆர்பாட்டத்தில் பங்கேற்பது தொடர்பில் 10 பேருக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறு காவல்துறையால் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்ருந்தது. எனினும் சட்டத்திற்கு விரோதமாக ஆர்பாட்டத்தில் ஈடுபடும் பட்சத்தில், கைது செய்ய முடியுமென நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து போராட்டம் மக்களால் தொடர்ந்து நூறு நாட்களை தாண்யும் போராட்டம் முன்னெடுக்கப்படும் பொன்னாவெளியிலேயே மாலை முன்னெடுக்கப்பட்ருந்தது அதே வேளை ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் போதே வவுனியா விமானப்படை தளத்தை புகைப்படம் எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று வவுனியா விமானப்படை தளத்தில் ஜனாதிபதி விசேட விமானத்தில் வருகை தந்து வன்னி அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்தார். இந்நிலையில் பாதுகாப்பு வாகனத்தொடரணி சென்றுகொண்டிருந்த நிலையில் அதனை இளைஞரொருவர் புகைப்படம் எடுத்தமையை அவதானித்த இளைஞனை கைதுசெய்துள்ளனர். கைதான இளைஞன்



பூனாவ பகுதியை சேர்ந்த பைரூஸ் பவாஹிர் எனும் முஸ்லீம் ஆவார்.

# ரணில் வருகைக்கு எதிராக வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்!

ஜனவரி 05, 2023

வவுனியாவிற்கு இன்று காலை வருகை தந்த சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாநகரசபை கலாச்சார மண்டபத்தில் அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுடான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.



இந்நிலையில் மாநகரசபை கலாச்சார மண்டபத்திற்கு ஜனாதிபதி வருகை தந்த சமயத்தில் ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்கு செல்லும் பாதையில் வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தடுக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தமையுடன் பல மணிநேரமாக





இரு தரப்பினருக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டிருந்தமையுடன் வடகிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்திற்குள் செல்ல முற்பட்டனர்.

அவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனைவருக்கும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஒருவருக்கு மாத்திரம் அனுமதி வழங்கமுடியும் என்றும் தெரிவித்தனர். இதனை மறுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரையும் அனுமதிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரன்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா மற்றும் போராட்டத்தினை காணொளி எடுத்த மீரா ஜாஸ்மின் சார்ல்ஸ்நையஸ் ஆகிய பெண்ணும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவ் கைது நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட இருவருக்கும் பொலிஸாருக்கிடையே தர்க்கமும் ஏற்பட்டிருந்தது. பெண் பொலிஸாரினால் இருவரும் பேருந்தில் ஏற்றப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கைதுசெய்யப்பட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவுக்கு இன்றைய தினம் போராட்டம் எதனையும் முன்னெடுப்பதற்கு நீதவான் நீதிமன்றம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

மேலும் கைது செய்யப்பட்ட இருவர் மீதும் நீதிமன்ற கட்டளையினை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்கு பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருவர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் திடீரென அமைக்கப்பட்ட புதிய இராணுவ முகாம்!

ஜனவரி 06, 2023

வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக திடீரென நிரந்தர இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டுள்ளது. குறித்த இராணுவ முகாமானது நேற்று இரவு (05.01.2024) கனரக வாகனங்கள் சகிதம் சென்ற இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெற்றபோது இராணுவ காவலரனொன்று அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தது.

அதன் பின்னரும் அந்த காவலரண் அகற்றப்படாத நிலையில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டதால் பயணிகளும் குறித்த பகுதியில் உள்ள பொதுமக்களும் அச்சத்துக்குள்ளாகியுள்ள நிலையில், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.











# தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகிறதா பூநகரி அபிவிருத்தித்திட்டம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

ஜனவர் 07, 2023

பூநகரி அபிவிருத்தி திட்டம் தொடர்பில் அப் பகுதி மக்களுடன் கலந்துரையாடப்படவில்லை. மாறாக ரணில் அரசின் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக மாற்றப்படுகிறதா என்ற கேள்வி எழுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் சனிக்கிழமை (06) இடம்பெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர்



இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கு விஜயம் செய்து பெரிய ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார். பூநகரியில் அபிவிருத்தி திட்டம் செய்யப் போவதாக அங்கு கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார். 500 மில்லியன் ரூபாய் அவசர அவசரமாக ஒதுக்கபடபட்டு பூநகரி அபிவிருத்தி என்ற பெயரில் அது அரங்கேற்றப்படுகின்றது. அந்த அபிவிருத்தி தொடர்டபான கலந்துரையாடல் அந்த பிரதேசத்து மக்களுடன் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த 2 ஆம் திகதி பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட அக் கூட்டத்தில் வடமாகாண அதிகாரிகள் கலந்து கொண்டனர். அத் திட்டத்தை அப்போது விளங்கப்படுத்த முற்பட்டிருந்தார்கள். அந்த திட்டம் தயாரித்து அவர்கள் கொண்டு வந்திருந்தார்கள். அந்த திட்டம் தயாரிப்பதற்கு முன்னதாக அந்த பிரதேசத்து மக்களுடன் எந்த விதமான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்தக் கூட்டம் சிவில் அமைப்புக்களுடன் என கூறப்பட்டாலும் வெறும் ஈபிடிபி ஆதரவாளர்கள் 8- 10 பேருடன் தான் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஏனையவர்கள் அனைவரும் திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாக இருந்தார்கள். அந்த அபிவிருத்தி அந்த பிரதேசத்திற்கு பொருமத்தமானதா இல்லை என கருத்துச் சொல்லக் கூடிய எவரும் அங்கு கலந்து கொண்டிருக்கவில்லை. பூநகரி, பொன்னாவெளி என்ற இடத்தில் ஒரு சில வருடங்களாக சீமெந்துக்காக சுண்ணக்கல் அகழ்தல் தொடர்பான பிரச்சனை போய் கொண்டு இருகின்றது. அகழ்வுக்கு எதிராக மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களும் அந்த பூநகரிப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள். அந்த பிரதேசத்தை சேர்ந்த கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பாலாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த எவரும் அந்தக் கூட்டத்தில் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல் பல கிராமங்களில் உள்ள பொது அமைப்புக்களைச் சார்ந்தோர் அழைக்கப்படவில்லை.

முன்னர் பூநகரி பிரதேச சபை தவிசாளராக இருந்தவர் கூட அழைக்கப்படவில்லை. ஆனால் 2023 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தேர்தலில் ஈபிடிபி சார்பில் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்களே அழைக்கப்பட்டிருந்தார்கள். அவ்வாறானவர்களே பல அபிவிருத்தி கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டு அவர்கள் மூலம் குழப்பங்களும் அச்சறுத்தல்களும் ஏற்படுத்தப்படுகின்றது. எதிர் கருத்துக்களை சொல்ல முடியாத நிலை ஏற்படுத்தப்படுகிறது.

ஆகவே 500 மில்லியன் ரூபா அபிவிருத்தி என்பது வெறுமனே வாடியடியை மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. 30 ஆண்டுகள் யுத்தம் நடந்துள்ளது. அபிவிருத்தியில் 50 ஆண்டுகள் பின்னோக்கி நின்கிறோம். அப்படிபட்ட நிலையில பூநகரியை அபிவிருத்தி செய்வதாக இருந்தால் வெளியில் உள்ள மக்கள் அங்கு வந்து மீள்குடியேறுவதற்கான உட்கட்டுமான வசதிகள் தேவை. அது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

கடற்கரையோரமாக காற்றாளைகள் அமைக்கப்படுகிறது. காற்றாளை அமைப்பதில் பொது மக்களுக்கு உடன்பாடில்லை. அவர்களது நிலம் பாதிக்கபடுவதாக மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். கடற்கரையோரமாக அட்டைப் பண்ணைகள் வழங்கப் பட்டு வருகிறது. அட்டை பண்ணை வழங்குவதால் கரையோர மீன்பிடி பாதிக்கப்படுகிறது. மீன்பிடி இறக்கு துறைகள் புனரமைக்கப்படுவதாக கூறப்படுகிறது. ஒரு புறம் கடற்தொழில் அழிக்கப்பட்டு கடல் அட்டை பண்ணைகள வழங்கப்படுகிறது. மறுபுறம் இறங்கு துறைகள் அமைக்கப்படுகின்றன என்றால் பூநகரி மக்களின் பொருளாதாரத்திற்காக திட்டங்கள் போடப்படுகிறதா அல்லது ரணில் அரசின் தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கான முதலீட்டு தளமாக இது மாற்றப்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது.



பூநகரி அல்லது கிளிநொச்சி அல்லது வடக்கைச் சேர்ந்தவர்களுக்கு அங்கு முதலீடுகளை செய்வதற்கும், வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டயங்கள் இருகின்றதா என்றால் இல்லை. விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாக அந்த திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த விடுதிகளுக்குரிய காணிகள் யாருக்கு வழங்கப்பட போகிறது. அதன் முதலீட்டாளர்கள் யார் என்பது வெளிப்படுத்தவில்லை. அங்கே பாரிய சந்தேகம் இருக்கிறது. ஒரு விவசாய பிரதேசம் எப்படி நகர அபிவிருத்தி பிரதேசமாக தெரிவு செயயப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது. பூநகரி பிரதேசம் முழுமையாக அதில் உள்வாங்கப்படவில்லை. அந்த பிரதேசத்திற்கான ஒரு முழுமையான திட்டமாக அது வகுக்கப்பட்டிருந்தால் அது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் அப்படியல்ல.

ஏற்கனவே இவ்வாறான கவர்சிகரமான அபிவிருத்தி திட்டங்களை பற்றி எமக்கு தெரியும். யாழ்ப்பாணம், மயிலிட்டி திட்டம் இலங்கை மீன் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கை வழங்கியிருந்தது. அந்த மயிலிட்டி துறைமுகம் 2017 ஆம் ஆண்டு இதே ரணில் பிரதமராக இருந்த போது முன்னுரிமை காட்டி அந்த துறைமுகம் அபிவிருத்தி செய்வதாக கூறி மக்களிடம் இருந்த துறைமுகம், மத்திய துறைமுக அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது. முதல் கட்ட அபிவிருத்தி பிற்பாடு அந்த மக்கள் தொழில் செய்த நிலங்களை இழக்க வேண்டி வந்தது. அது போல தான் பூநகரி அபிவிருத்தி திட்டமும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு தின நிகழ்வில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வவுனியா மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சுண்ணக்கல் அகழ்வு, சீமெந்துத் தொழிச்சாலையும் வேண்டாம்! 155 நாளாக தொடரும் கிராஞ்சி பொன்வெளி கிராம மக்கள் போராட்டம்! 05.01.2024











# திருகோணமலை 64ஆம் கட்டை இராஜவந்தான்மலையில் நிர்மாணிக்கப்படும் விகாரை மற்றும் புத்தர் சிலை முழுமை பெற்று தமிழ் நிலம் ஆக்கிரமிப்பு!

ஜனவரி 05, 2023

திருகோணமலை 64 ஆம் கட்டை ராஜவந்தான்மலையில் நிர்மாணிக்கப்படும் விகாரை மற்றும் புத்தர் சிலை முழுமை பெற்று தமிழ் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

200 வருடங்கள் பழமையான பிள்ளையார் ஆலயமிருந்த மேற்படி சூழலை தொல்லியல் நிலமாக தொல்லியல் திணைக்களம் அடையாளபடுத்தி இருந்தது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் தொல்லியல் சட்டங்களையும் மீறி பௌத்த சாசன அமைச்சு மற்றும் இராணுவத தினர் மற்றும் கடற்படை உதவியுடன் புதிய பௌத்த மத கட்டுமானங்களை நிறுவி இருக்கின்றார்கள்.

இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத பௌத்த விகாரைக்கு Kottiyarama Sri Pathra Dhathu Raja Maha Viharaya பெயரிட்டு இருக்கின்றார்கள்.

இது மாத்திரமின்றி விகாரை சூழலில் பிரமாண்ட புத்தர் சிலை ஒன்றையும் கூட நிறுவி இருக்கின்றார்கள்.

சம்பூரில் கண்டெடுக்கப்பட்ட சுடு மண் சிற்பங்கள் சம்பூரை உள்ளடக்கிய மேற்படி பிரதேசம் தமிழ் மக்களின் பல்லாயிரம் வருட பழமையான வரலாற்றுக்கு ஆதாரமாக இருக்கின்றன.

ஆனால் வெறும் ஒரு சில வருடங்களில் மத்திய தொல்லியல் திணைக்களம் ஊடக ஆக்கிரமித்து பௌத்த மத நிலமாக அடையாளபடுத்தி இருக்கின்றார்கள்.

குறிப்பாக இப் பகுதியில் மேற்படி விகாரையின் பயன்பாட்டுக்கென்று 300 ஏக்கர் நிலப்பகுதியும் ஆக்கிரமிக்கபட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா பௌத்த சாசன அமைச்சின் செயலராகவிருந்த பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த ஆக்கிரமிப்புக்களுக்கு Balalle Ratanasara என்கிற பிக்கு தலைமை தாங்குகின்றார்.

2,500 வருசங்களுக்கு முன் தோன்றிய ஒரு நாகரிகத்தின் நிலப்பரப்பு எங்கள் கண் முன்னே சிதைக்கப்பட்டு ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது.

ஆனால் ரணில் விக்ரமசிங்கே எண்ணிக்கையில் சிறிய இனங்களுக்கு பாதுகாப்பானவர் என எங்களுக்கு நல்லிணக்க பாடம்



நடத்துகின்றார்கள்.

# தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க இயலாத அரசதலைவர்; தமிழர் பகுதிகளுக்கு எதற்கு விஜயம் செய்கிறார்!

**முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

ஜனவரி 08, 2023




தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க இயலாத விக்கிரமசிங்க புகைப்படம் எடுப்பதற்காகத்தான் யாழிற்கும், வன்னிக்கும் வருகைதருகின்றாரா என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க தமிழர் பகுதிகளுக்கு வந்து சிரித்தபடி புகைப்படம் எடுபதை மாத்திரம் செய்யாமல், நாட்டின் பொறுப்பு வாய்ந்த அரச தலைவராக தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்க முன்வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி ஜெனிற்ரா கைதுசெய்யப் பட்டமையைக் கண்டித்து 08.01.2024இன்று முல்லைத்தீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தபோது, கடந்த 05.01.2024அன்று வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

இந் நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமக்கான நீதியைக் கோரி, அந்தந்த மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.



அந்தவகையில் வவுனியாவில் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது, வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி ஜெனிற்றா உள்ளிட்டவர்கள் மீது பொலிசார் தாக்குதல் மேற்கொண்டனர்.

அத்தோடு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி பலவந்தமாக இழுத்துச்செல்லப் பட்டு கைதுசெய்யப்பட்டதுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இது மிகவும் மோசமான செயற்பாடாகும்.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விடயம், நில அபகரிப்பு, மதத்திணிப்புகள், கடலில் இடம்பெறும் அத்துமீறிய மற்றும் சட்டவிரோத கடற்றொழில்நடவடிக்கைகள், சிறையில் வாடும் அரசியல் கைதிகள் விடயம், தீர்வுத்திட்ட விடயம் என்பவற்றிற்கு இன்னும் உரிய தீர்வுகள் இல்லாத நிலை தொடர்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைப் பொறுத்தவரை அவர்கள் 2500நாட்களுக்குமேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கான தீர்வுகளை வழங்க இயலாத ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புகைப்படம் எடுப்பதற்குத்தான் யாழிற்கும், வன்னிக்கும் வருகைதருகின்றாரா என கேள்வி எழுப்ப விரும்புகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தல் ஒன்றிற்கான பிரச்சார நடவடிக்கைக்காகவே இங்கு வருகைதந்து சென்றிருப்பதாகவே பார்க்கமுடிகின்றது.

இவ்வாறான சூழலில் ரணில் தற்போது நாட்டை எவ்வாறு வழிநடத்திச் செல்கின்றார் என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது, மக்கள் அன்றாட உணவிற்கே இடர்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரை தசாப்பகாலம் கடந்துவிட்ட நிலையிலும், தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையே தொடர்ந்தும் நீடிக்கின்றது.

முதலில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வழங்கிவிட்டு, இந்த நாட்டின் அரசுத் தலைவராக வடகிழக்கிற்கு வாருங்கள்.

இங்கு வந்து சிரித்தபடி புகைப்படம் எடுபதை மாத்திரம் செய்யாமல், நாட்டின் பொறுப்புவாய்ந்த அரச தலைவராக தமிழ் மக்களுக்குரிய தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அத்தோடு கைதுசெய்யப்பட்ட வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

அதேவேளை பொலிசாரின் அடக்குமுறைச் செயற்பாட்டிற்கு வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பாக அரசதலைவர் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் பீடங்களில் இருப்பவர்கள் பொலிஸ் உள்ளிட்ட அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி தற்போது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான அடக்குமுறைச் செயற்பாடுகள் இருந்ததில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விடுதலைப்புலிகள் எமது கடல்வளம், நிலவளம் என்பவற்றைப் பாதுகாத்ததுடன், தமிழர்களின் தீர்வுவிற்காக அவர்கள் போராடினார்கள்.

இந் நிலையில் தற்போது அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மிக மோசமான அடக்குமுறைகளை இனங்கண்டு, தமிழர்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு சர்வதேசம் தலையீடுசெய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவியை விடுதலை செய்யக்கோரி முல்லைத்தீவில் போராட்டம்!

ஜனவரி 08, 2023

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும், வவுனியா மாவட்ட தலைவி ஜெனிற்றா விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரியும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளால் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி இன்று (08) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில் ஜனாதிபதி வருகையின்போது நியாயம் கேட்கச் சென்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப் பட்டுள்ளார்.

அவரை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு புனித இராஜப்பர் தேவாலயத்துக்கு முன்பாக ஆரம்பமானது.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செய லகத்துக்கு முன்பாக சென்று நிறைவு பெற்றிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'பொலிஸ் அராஜகம் ஒழிக', 'விடுதலை செய் விடுதலை செய் ஜெனிற்றாவை விடுதலை செய்', 'சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு', 'ரணில் அரசே நட்ட ஈடு வழங்கி எமது பேராட்டத்தை நிறுத்தக் கனவு காணாதே', 'பாதிக்கப்பட்ட உறவான ஜெனிற்றாவை உடன் விடுதலை செய்', 'ஜனநாயக வழியில் போராடுபவர்களை கைது செய்வதுதான் ரணில் அரசின் நல்லிணக்கமா?', 'சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.




முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப் பினை வெளிப்படுத்தி கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இப்போராட்டத்தில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள், காணாமலாக் கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.











# மட்டு மண்ணில் ஊடகவியலாளர் லசந்தவின் நினைவுநாளும், கவனயீர்பபு போராட்டமும்!

ஜனவரி 08, 2023

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரமதுங்கவின் 15வது ஆண்டு நினைவு நாள் இன்று திங்கட்கிழமை (8) காலை 10 மணிக்கு மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வினை நடத்தி யிருந்தது.

மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடக வியலாளர்கள் நினைவுத்தூபியில் மலர் வணக்கம் செலுத் தப்பட்டு, அதனைத் தொடர்ந்து கடத்தப்பட்ட, படுகொலை செய் யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.




# கப்டன் பண்டிதரின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 09, 2024

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதியில், தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான கப்டன் பண்டிதரின் 39ஆம் ஆண்டு நனைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன் போது, பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.





இந்த நினைவேந்தலில் பண்டிதரின் குடும்பத்தினர், யாழ் மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டு அக வணக்கம் செலுத்தினர்.

# பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்தினை முடக்க முயற்சி!

ஜனவரி 10, 2024

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து மக்கள் ஒன்றியத்தின் தலைவரின் வீடு சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா காவல்துறையினரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை (09) சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரியவருகின்றது.

பூநகரி ஜெயபுரம் காவல்நிலையத்தை சேர்ந்த காவல்துறையினரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் சோதனைக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

பொன்னாவெளியில் முருகைக்கற்களை அகழ இலங்கை அரசு டோக்கியோ சீமெந்து எனும் யப்பானிய நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எனினும் அதற்கெதிராக பொன்னாவெளி, வேரவில் மற்றும் வலைப்பாடு உள்ளிட்ட ஐந்து கிராமங்களை சேர்ந்த அப்பகுதி மக்கள் அனைத்து மக்கள் ஒன்றியம் எனும் பேரில் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர்

இந்நிலையில் போராட்டக்குழுவின் தலைவரான வல்லிபுரம் பாஸ்கரன் வீட்டிலேயே சோதனை நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக நடைபெறுகின்ற போராட்டத்தினை இலக்காக கொண்டு போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் இச்சோதனை நடவடிக்கை இடம் பெற்றிருக்கலாம் என வல்லிபுரம் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

சீமெந்து தொழிற்சாலையை பொன்னாவெளியில் அமைப்பது தொடர்பில் பின்னணியில் அரச அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு




வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மலையக ஈகையர்களின் நினைவேந்தல் நாள்!

ஜனவரி 10, 2023

மலையக ஈகையர்களின் நினைவுநாள் புதன்கிழமை (10) யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுத் தூபியில் நடைபெற்றது.

மலையகத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவைகளையும், உரிமைக்காக போராடி உயிர்நீத்த உறவைகளையும் நினைவு கூர்ந்து இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதன்போது பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களால் உரைகள் ஆற்றப்பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.










# நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையில் 50ஆவது ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 10, 2024

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் சிங்களப் பொலிஸாருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில், மின்சார கம்பி பொது மக்களின் கூட்டத்தில் அறுந்து விழுந்ததில் ஒன்பது பேர் சம்பவ இடத்திலையே உயிரிழந்தனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசாங்கம் பல தடைகளை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப்படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரம்சோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)



6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)








# 3,400 ஆண்டு பழமையான நாக மனித எச்சங்கள் யாழ். வேலணையில் கண்டுபிடிப்பு!

ஜனவரி 10, 2023

யாழ். குடா நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட தொன்மையான வரலாற்றுக்கு முற்பட்ட மனித எச்சங்களில் இதுவும் ஒன்றாகும் என தெரிவிக்கப்படுகிறது. இத் தரவுகளைக் கொண்ட தொல்லியல் மையம் வேலணை தீவின் சுற்றுலாத் தலமான கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தெற்கே அமைந்துள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.







இவ் ஆய்வுத் தொடர்ச்சி 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கரையோர வளங்களின் வரலாற்றுப் பயன்பாடு மற்றும் குறிப்பாக கடல் ஓடுகள் தொடர்பான பயன்பாட்டுப் போக்குகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ் அகழ்வாய்வில் வேட்டையாடி உணவாக உட்கொள்ளப்பட்ட விலங்குகளின் எச்சங்கள், கருவிகள் மற்றும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டதற்கான சான்றுகள் மற்றும் ஏராளமான தொல்பொருட்கள் காணப்படுகின்றன. இத்தகைய எச்சங்கள் இலங்கையில் தெற்கு கடற்கரையிலும் கண்டறியப்பட்டுள்ளது.



இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மிக அண்மித்த சான்று மாந்தையில் கி.மு.1600க்கு முற்பட்டவை கிடைக்கப்பெற்றிருந்தது. தற்போது நடைபெற்று முடிந்த இவ் அகழ்வாராய்ச்சியில் இருந்து கிடைத்த தொல்பொருள் சான்றுகளின் காலப் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய காலகட்டத்தை இன்னும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்நோக்கி நகர்த்தியுள்ளது.

இவ்வகழ்வாய்வினை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் மற்றும் பாரம்பரிய முகாமைத்துவத் துறையின் மூத்த விரிவுரையாளர் திலங்க சிறிவர்தன அவர்களுடன் இணைந்து Groningen Institute of Archaeology of the University of Groningen in the Netherlands நிறுவனத்துடன் இணைந்து இந்திகா ஜெயசேகர, ஜனினா நோனிஸ் அத்துடன் தொல்லியல் மற்றும் பாரம்பரிய கற்கைகள் நிறுவகத்தின் நதீரா திஸாநாயக்க மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தொல்லியல் துறை மாணவர்களான டக்சினி, கனுஸ்டன், சுசாந்தி ஆகியோர் இவ் ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

# வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவினர் சங்கத் தலைவியை உடனடியாக விடுவிக்க வேண்டும்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு

ஜனவரி 12, 2024

நீதி கோரிக் குரலுயர்த்திய வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி சி.ஜெனிற்றா காவல் துறையால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை உடனடியாக விடுவிக்கச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் வியாழக்கிழமை(11.01.2024) பிற்பகல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாணத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அதன் ஒரு கட்டமாக 05.01. 2023 அன்று வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். அதன் போது வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து “ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் செய்யப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது?” என்பதற்கான பதிலைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுப்பதற்காக அங்கு சென்றிருந்தனர்.

எனினும், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள் காவல் துறையினரால் வழிமறிக்கப்பட்டார்கள். இதன்போது ஜனநாயக நாட்டில் தமக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமையை ஆட்சேபித்து, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவ்விடத்தில் நின்றவாறு அகிம்சை வழியில் தமது எதிர்ப்பைப் பதிவுசெய்ய முற்பட்டிருந்தனர்.

அச் சந்தர்ப்பத்தில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட தாய்மாரை சினம் கொள்ளச் செய்து அங்கு வலிந்ததொரு அமைதியின்மையைத் தோற்றுவித்த காவல்துறையினர் கைகளில் ஒப்படைத்த தம் உறவுகளுக்கு நீதி கேட்டு தெருப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாக அடக்கி ஒடுக்கி பேருந்துக்குள் இழுத்துச் சென்று அடாவடியாக கைது செய்துள்ளனர். இது மிக மோசமானதொரு உரிமை மறுப்பாகும். இதுபோன்ற ஜனநாயக விரோதங்கள், நாட்டினுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தவல்லன.

ஜனநாயகப் பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை தேசத்தினுடைய ஆளுகைத் தரப்பின் ஒற்றை வாக்குறுதிக்கு மதிப்பளித்துத் தமது உற்றச் சொந்தங்களை உயிர்ப்புடன் கையளித்த உறவுகள், தம் அன்பிற்குரியவர்களை மீளத் தருமாறு அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? எனக் கேட்டு 14 ஆண்டுகாலமாக தொடர் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள். அந்தப் போராட்டங்களில் பங்கெடுத்த வயோதிபப் பெற்றோர்களில் பலர் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டு உயிர்நீத்துள்ளார்களே தவிர இவர்களுக்கு இதுவரை நீதி கிட்டவில்லை.

குரலற்றவர்களின் குரல
The Voice of the Voiceless
හඬ නැති අයගේ හඬ

இதுபோன்று போரின் பெயரில் படுகாயப்படுத்தப்பட்ட பல்வேறு மனக் காயங்களுக்கு மருந்திட வேண்டிய ஆட்சியாளர்கள் அதனைச் செய்ய முயற்சிக்காது மென்மேலும் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு உதட்டளவில் நல்லிணக்கம் பற்றிப் பேசுவது முரண் நகையானது. பாதிக்கப்பட்ட குழுமக்களது நீதி நியாயத்திற்கான குரல்களை காவல்துறை கரம்கொண்டு அடக்கி தீர்வினைக் காண்பதனூடாக நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச் செல்வதாக அமையும்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து கருத்துச் சுதந்திரத்திற்கு செவிசாய்த்து ஜனநாயக பண்புடைய உணர்வு வெளிப்பாடுகளுக்கான தடைகளை அகற்றி நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரண காரியங்களைக் கண்டடைந்து அவற்றுக்குத் தாமதமற்ற தீர்வினை காண்பதன் மூலமே நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்ய முடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம் எனவும் குறித்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கைதுகள் மூலம் அப்பட்டமான ஜனநாயக படுகொலைகளை இலங்கை அரசு நிகழ்த்துவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது!

ஜனவரி 11, 2024

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்,

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான சனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது.

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் சனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கை அரச படைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகாரநீதியையும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில் போராடும் உறவுகளின் போராடும் உரிமையினையும் கருத்துரிமையினையும் அடக்கியொடுக்கும் செயற்பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றாவின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் கொடுத்துவரும் இன்னபிற செயற்பாட்டாளர்கள், உறவினர்களை புலனாய்வுப்பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சுறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இதுபோன்ற அப்பட்டமான சனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறீலங்கா அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச் சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு முயல வேண்டும். தமிழ் மக்களை ஓரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை மேற்கொள்வதென்பது 21ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும் - என்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கு.துவாரகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் சோ.சிந்துஜன் ஆகியோரின் கையொப்பத்துடன் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

ஊடக வெளியீடு | Press Release

11.01.2024

கைதுகள் மூலம் அப்பட்டமான சனநாயகப் படுகொலைகளை தொடர்ந்தும் நிகழ்த்தும் சிறிலங்கா அரசு!

கடந்த வாரம் சிறிலங்கா அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையினை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான சனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது.

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் சனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த சிறிலங்கா அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

சிறிலங்கா அரச படைகளினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகாரநீதியையும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில் போராடும் உறவுகளின் போராடும் உரிமையினையும் கருத்துரிமையினையும் அடக்கியொடுக்கும் செயற்பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா அவர்களின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக குரல் கொடுத்துவரும் இன்னபிற செயற்பாட்டாளர்கள், உறவினர்களை புலனாய்வுப்பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சுறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இதுபோன்ற அப்பட்டமான சனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சிறிலங்கா அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தினை எட்டுவதற்கு முயல வேண்டும். தமிழ் மக்களை ஓரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை மேற்கொள்வதென்பது 21ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும்.

நன்றி

(ஒப்பம்)
1. திரு.கு.துவாரகன், தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
2. திரு.சோ.சிந்துஜன், செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவி பிணையில் விடுதலை!

ஜனவரி 10, 2023

வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா இன்று வெள்ளிக்கிழமை (12) பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்ததுடன் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வன்னிமாவட்டங்களிற்கான ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது வடகிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் நீதிமன்ற கட்டளையினை மீறியதாக தெரிவித்து வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா இன்று (12) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார் . மற்றைய பெண் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கானது இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் சங்கத்தின்தலைவியை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றா,

நாங்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கே அனுமதி கேட்டிருந்தோம். மாறாக எந்தவிதமான வன்முறைகளையும் நாம் மேற்கொள்ளவில்லை.

அரச சொத்துக்களை சேதப்படுத்தவில்லை வீதியினை மறிக்கவில்லை. ஆனால் பொலிஸார் எங்களை பெண்கள் என்றும் பார்க்காது அநாகரிகமான முறையிலேயே கைதுசெய்தனர்.

கொலைக்குற்றங்களை செய்தவர்களை கூட இப்படி நடாத்தியிருக்கமாட்டார்கள். இது எமக்கு மனவருத்தமாக உள்ளது.



நீதிக்கான குரல்களை நசுக்கும் வன்மையான செயற்பாடாகவே நாம் இதனை பார்க்கின்றோம். என்றார்.

# வடக்கு, கிழக்கு தொழிலாளர்களை இலக்கு வைத்து புதிய வரி விதிப்பு!

ஜனவரி 14, 2024

வடகிழக்கு கள் உற்பத்தியாளர்களை இலக்கு வைத்து இலங்கை அரசு புதிய வரிகளை விதிக்க தொடங்கியுள்ளது.



வருடாந்த மதுவரி அனுமதி பத்திரக் கட்டணம் அதிகரிக்கப பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. ஜனவரி மாதம் 12ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் வருடாந்த மதுவரி அனுமதி பத்திர கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, பனை சாராயம் தவிர்ந்த மதுபான உற்பத்தி நிலையங்களுக் கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 25 மில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பனை சாரய மதுபான உற்பத்தி நிலை யங்களுக்கான அனுமதி கட்டணம் 5 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. போத் தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப் பத்திர கட்டணம் 10 மில்லியன் ரூபாவாக அதிகரிக் கப்பட்டுள்ளது. அத்துடன், வினாகிரி தொழிற்சாலைக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 2.5 மில்லியன் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மதுவரி கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக மேலும் பல விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, புதிய அனுமதி பத்திரம் கோரல், அனுமதி பத்திரம் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல் மற்றும் அனுமதிப் பத்திரத்தை உரிமை மாற்றல் போன்ற சந்தர்ப்பங்களின் போது, விண்ணப்ப கோரல் கட்டணமாக 25 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டும்.

இந்தநிலையில், அனுமதி பத்திர உரிமையை மாற்றுவதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்ற தொகை நிர்ணயிக்கப் பட்டுள்ள நிலையில், சட்டபூர்வமாக வாரிசு அல்லாத ஒரு வருக்கு மதுவரி உரிமை மாற்றப்படுமானால் 15 மில்லியன் ரூபாவை கட்டணமாக செலுத்த வேண்டும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது



# கனடிய செய்திகள்

## கனடாவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் 40 ஆண்டுகளின் பின்னர் குற்றமற்றவர்கள் என தீர்ப்பு!

ஜனவரி 04. 2024

கனடாவில் கொலைக் குற்றச்சாட்டின் அடிப்படையில் தண்டிக் கப்பட்ட இரண்டு பேர் 40 ஆண்டுகளின் பின்னர் குற்றமற் றவர்கள் என விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



1983ம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் 1984ம் ஆண்டில் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

76 வயதான ரொபர்ட் மெயில்மேன் மற்றும் 81 வயதான வோல்டர் ஜிலெஸ்பி ஆகிய இருவருமே இவ்வாறு தண்டிக்கப் பட்டு 40 ஆண்டுகளின் பின்னர் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

செயின்ட் ஜோன் பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் கில்மேன் லீமேன் என்ற நபரை படுகொலை செய்ததாக குற்றம் சுமத்தி தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

தண்டனைக்கு எதிராக 1988ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த மாதம் இந்த வழக்கு மீளவும் விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது விசாரணைகளில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இருவரும் குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜிலெஸ்பி 21 வருடங்களும், மெயில்



மென் 18 வருடங்களும் சிறைத்தண்டனை அனுபவித்ததன் பின்னர், பரோலில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## ஒன்ராரியோ பகுதியில் வீடுகளின் விலைகளில் வீழ்ச்சி!

ஜனவரி 08, 2023

ஒன்ராரியோ மாகாணத்தில் அநேக பகுதிகளில் வீடுகளின் விலைகள் குறவைடைந்துள்ளன.

கிட்சனர்-வோட்டர்லூவில் குறிப்பிடத்தக்களவு விலை குறைப்பு பதிவாகியுள்ளது.

றொறன்ரோ பிராந்தியத்திலும் வீடுகளின் விலைகள் குறை வடைந்துள்ளதாக சூகாசா வீட்டு மனை நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கனடாவின் பிரதான வீட்டுச் சந்தைகள் குறித்த தகவல்களின் அடிப்படையில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது கிட்சனர் வாட்டலூவில் வீடுகளின் விலைகள் 8.9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.




## கனடாவின் நோவா ஸ்கோட்சியா தம்பதி வீட்டு பிரச்சனைக்கு நூதன முறையில் தீர்வு!

ஜனவரி 09, 2023

கனடாவின் கரையோர மாகாணமான நோவா ஸ்கோட்சியா பகுதியைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் தங்களது வீட்டு பிரச் சனைக்கு வித்தியாசமான முறையில் தீர்வு கண்டுள்ளனர்.

நோவா ஸ்கோசியா வின்டாட் மவுத் பகுதியில் 1500 டாலர்கள் மாதத்திற்கு செலவிட்டு ஒரு படுக்கை அறையைக் கொண்ட வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி இருந்தனர்.

எனினும் பொருளாதார பிரச்சனை காரணமாக கூடுதல் தொகை வாடகையை செலுத்த அவர்களினால் முடியவில்லை.

அதனை தொடர்ந்து இந்த தம்பதியினர் பழைய பாடசாலை பஸ் ஒன்றை நடமாடும் குடியிருப்பாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

வாடகைக்கு செலவிட்ட பணத்தை தற்பொழுது இந்த தம்பதி யினர் சேமித்து வருகின்றனர்.

இந்த பஸ் வீட்டை அமைப்பதற்கு கடின உழைப்பினை வெளிப் படுத்தியதாக குறித்த தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.

இதனை வீடாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் பயணங்களை மேற்கொள்ளவும் முடியும் எனவும் தெரிவிக் கின்றனர்.



## கனடாவின் அல்பேர்ட்டாவில் மின்சாரம் தடைப்படும் அபாயம்!

ஜனவரி 14, 2023

கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் மின்சாரம் தடைப்படும் ஏற்பட்டுள்ளது.

மாகாணத்தில் நிலவி வரும் கடுமையான குளிருடனான காலநிலையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

எனவே மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் மின்சாரத்தை பயன் படுத்துமாறு மின் பயனர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

அனைத்து மின் பயனர்களுக்கும் தொலைபேசி ஊடாக இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரம் தடைப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும் இதனால் சிக்கமான மின்சாரத்தை பயன்படுத்துமாறும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

கடுமையான குளிருடானான வானிலை காரணமாக மின் சாரத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளது.

மின்சாரத்திற்கான கேள்வியை நிரம்பல் செய்ய முடியாத நிலை யில் மின்சாரம் தடைப்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரையில் மின்சாரம் தடைப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# ரொரான்ரோவின் வீட்டு உரிமையாளர்கள் மீதான வரி உயர்வு பற்றிய அறிவிப்பு!

ஜனவர் 10, 2023

ரொரான்ரோவில் உரிமையாளர்கள் மீதான வரி அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.






சொத்து வரித் தொகை முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு 10.5 வீதமாக உயர்த்தப்பட உள்ளது. ரொரான்ரோ நகர மேயர் ஒலிவியா சோவ் இந்த திட்டத்தை முன்னெடுக்க உள்ளார்.

மேயராக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முதல் வரவு செலவுத் திட்டத்தில், இவ்வாறு வரி அதிகரிப்பு அறிவிக்கப்பட உள்ளது.

நீண்ட இடைவெளியின் பின்னர் கூடுதல் தொகையில் வரி உயர்வு அறிவிக்கப்பட உள்ளது.

ரொரான்ரோ நகர நிர்வாகம் பெருந்தொகை பாதீட்டுப் பற்றாக் குறையை எதிர்நோக்கி வரும் நிலையில் வரி அதிகரிப்பு குறித்து அறிவிக்கப்பட உள்ளது.

வீடற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், பாதைகளை அபிவிருத்தி செய்யவும், பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக ஒலிவியா சோவ் தெரிவித்துள்ளார்.

நகர நிர்வாகம் எதிர்நோக்கி வரும் நிதி நெருக்கடி நிலைமை களுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சொத்து வரி ஒன்பது வீதமாகவும், நகர கட்டிட நிதியக் கட்டணம் ஒன்று தசம் ஐந்து வீதமாகவும் மொத்தமாக 10.5 வீதத்தினால் வரி அதிகரிக்கப்பட உள்ளது.

பல ஆண்டுகளின் பின்னர் சொத்து வரி இரட்டை இலக்க சதவீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்காலிக குடியிருப்பு அனுமதிகைள தடுத்தால் கனடாவின் பொருளாதார நிலைமை 2024 இல் மோசமாகும்!

## Desjardins கனேடிய நிதி அமைப்பு

ஜனவரி 11, 2023

தற்காலிக குடியிருப்பு அனுமதி திட்டங்களின் கீழ் கனடாவுக்கு வருபவர்களைத் தடுத்தால், 2024இல் கனடாவின் பொருளா தார மந்தநிலை மேலும் மோசமாகும் என நிதி அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாண வர்களின் வருகையால் கனடாவின் மக்கள்தொகை கடந்த ஆண்டில் உயர்ந்துள்ளது. ஆகவே, அத்தகைய நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களை கட்டுப்படுத்த கனடா திட்டமிட்டு வருகிறது.

ஆனால் நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களை (non-permanent resident) பெடரல் அரசு கட்டுப்படுத்தினால், 2024இல் கனடா வின் பொருளாதார மந்தநிலை மேலும் மோசமாகும் என Desjardins என்னும் கனேடிய நிதி அமைப்பின் சமீபத்திய அறிக்கை தெரிவித்துள்ளது.

நேற்று, அதாவது, புதன்கிழமை அந்த அமைப்பின் மூத்த இயக் குநரான Randall Bartlett வெளியிட்ட அந்த அறிக்கை, பொருளா தார வளர்ச்சி மெதுவாக இருப்பதால் நிரந்தரமற்ற குடியிருப் பாளர்களின் எண்ணிக்கை இயல்பாகவே குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது. தற்போதைய கணிப் புகளின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, 2024 இல், 0.1 சதவீதமாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படியிருக்கும் நிலையில், நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களின் அனுமதியை முற்றிலுமாக நிறுத்தும் வகையில் புதிய கொள் கைகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தினால், 2024 இல், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, 0.7 சதவிகிதமாக சுருங்கக்கூடும் என்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், அத்தகைய நடவடிக்கை, நாடு மந்த நிலையிலிருந்து மீண்டெழுவதையும் பாதிக்கும் என்றும், அதன் பின்னரும் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படுவதற்கு அது வழிவகுக்கும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ஆக, கனடா இப்போதை விட, நிரந்தரமற்ற குடியிருப்பாளர் களின் அனுமதியை இரட்டிப்பாக்கினால், இந்த ஆண்டில், கனடாவின் பொருளாதாரம் ஒரு சதவிகிதம் வளர்ச்சியடையும் என்றும், வரவிருக்கும் ஆண்டுகளில் மிகவும் வலுவான வளர்ச் சியைக் கொண்டிருக்கும் என்றும் சுயனெயடட டீயசவடநவவ கூறுகிறார்.

அதே நேரத்தில், தொடர்ந்து நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களின் அனுமதியை அதிகரித்துக்கொண்டே இருந்தால், அதனால் சில பாதிப்புகளும் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை என்கிறது அந்த அறிக்கை. அதாவது, நிரந்தரமற்ற குடியிருப்பாளர்களின்




அனுமதிகளை அதிகப்படுத்திக்கொண்டே சென்றால், அது மக்களுக்கு தங்க வீடு கிடைக்கும் நிலைமையை பாதிக்கலாம் என்றும், அதனால் பணவீக்கம் மோசமாகலாம் என்றும், அதனால், கனடா வங்கி தனது வட்டி விகிதங்களை நீண்ட காலத்திற்கு உயர்த்தியே வைத்திருக்கும் கட்டாயம் ஏற்படும் என்றும் கூறுகிறது Randall Bartlett வெளியிட்டுள்ள அறிக்கை.

# இசுரவேல் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை! – கனடா

ஜனவரி 12, 2024

இசுரவேல் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதரவளிக்கப் போவ தில்லை என கனடிய அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித் துள்ளது.




குறிப்பாக இசுரவேலுக்கு எதிராக தென் ஆபிரிக்க அரசாங்கம் இன வழிப்பு குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை ஆதரவளிக்கப் போவதில்லை என கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இனவழிப்பில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி சர்வதேச நீதிமன்றில் தென் ஆபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு தற்பொழுது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நீதிமன்றின் செயற்பாடுகளுக்கு கனடா எப்போதும் ஆதரவளிப்பதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இதன் ஊடாக தென் ஆபிரிக்கா தொடர்ந்துள்ள வழக் கிற்கு ஆதரவளிப்பதாக அர்த்தப்படாது என தெரிவித்துள்ளார்.



சர்வதேச சட்டங்கள் மதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை கனடா கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக செய்திகள்



# திருச்சி சர்வதேச விமான நிலையம் திறப்பு!

ஜனவரி 02, 2023

இந்தியாவின் திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இந்திய ரூ.951 கோடியில் கட்டப்பட்ட பயணிகள் முனையம் இன்றைய தினம் (02) காலை பிரதமர் நரேந்திர மோடியினால் திறந்து வைக்கப்பட்டது.





இந்த முனையம் 60,723 சதுரமீட்டர் பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், ஒரே சமயத்தில் 4,000 சர்வ தேச பயணிகள், 1,500 உள்நாட்டு பயணிகளை கையாள முடியும்.

இந்த புதிய பயணிகள் முனையத்தின் சிறப்பாக இந்தியாவின் தமிழ் கலாச்சார, பண்பாடு மற்றும் திருவிழாக்களை மைய மாக கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சிறீரங்கம் ஆலயத்தின் ராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத்தின் முகப்பில் வண்ணமயமாக பார்ப்போர் கண்களை கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது . அத்துடன் உள் செல்லும் வெளியேறும் வாயில்களிலும் இந்து ஆலய கோபுர முகப்பு வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன .

உள்ளே சுவரில் நடராஜர் சிற்பங்கள், இந்து கடவுள்களின் படங்களும் வரையப்பட்டுள்ளதுடன் பிரமான்ட திரையில் ஆலய தேர் கலாசார நடனங்களும் உள்ளன.

இதேபோல, வருகை, புறப்பாடு, பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.



புதிய முனையத்தின் உள்ளே புறப்பாடு பகுதியில் 10 வாயில்கள், வருகை பகுதியில் 6 வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. 40 குடியேற்றப்பிரிவு மையங்கள், 48 செக்-இன் மையங்கள், 3 சுங்கப் பிரிவு மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 10 இடங்களில் ஏரோ ப்ரிட்ஜ், 3 இடங்களில் விஜபி காத்திருப்பு அறைகள், 26 இடங்களில் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர், 1,000 கார்களை நிறுத்தும் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இந்த முனையத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் விமானநிலையத்தின் மேற்கூரை அமைக்கப் பட்டுள்ளது.

# பெரியாற்றில் புதிய அணை கட்ட கேரளம் முயற்சி!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

ஜனவரி 02, 2024

தற்போதுள்ள பெரியாறு அணை பலவீனமாக இருப்பதாகவும், எனவே, புதிய அணை ஒன்றினைக் கட்டுவதற்கு அனுமதிக் கவேண்டும் என மத்திய நீர் மேலாண்மை ஆணையத்திடம் அனுமதி கேட்டு புதிய வரைவுத் திட்டம் ஒன்றினை கேரள அரசு அளித்துள்ளது.



ஏற்கெனவே கேரளம் இத்தகைய பொய்யான புகாரை எழுப்பிய போது, மத்திய நீர் மேலாண்மை ஆணையம், உச்சநீதிமன்றம் ஆகியவை அமைத்த நிபுணர் குழுக்கள் பெரியாறு அணையைப் பார்வையிட்டு முழுவதுமாக நுணுகி ஆராய்ந்து, “அணை வலிமையாக உள்ளது” என அறிவித்துவிட்டன. ஆனாலும், கேரளத்தின் அச்சத்தினைப் போக்கும் வகையில் பெரியாறு அணையை மேலும் வலிமைப்படுத்தும்படி உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க 12.5கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு அணையை வலுப்படுத்தியது. உச்சநீதிமன்றம் பெரியாறு நீர்மட்டத்தினை 145அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும், மேலும், சில பணிகளைச் செய்து முடித்த பிறகு 152அடி வரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் உச்சநீதி மன்றம் ஆணை பிறப்பித்தது.

பெரியாறு அணை வலிமையாக இருப்பதினால்தான் இத்தகைய ஆணையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது. ஆனால், மீண்டும் மீண்டும் அணை பலவீனமாக இருப்பதாகப் பொய்யான கூக்குரல் எழுப்பி, புதிய அணை கட்டவேண்டும் எனக் கேரளம் இடைவிடாது முயற்சி செய்யும் வகையில் இப்போது புதிய வரைவுத் திட்டத்தை அளித்துள்ளது. உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்புக்கு இது முற்றிலும் எதிரானதாகும்.

தற்போதுள்ள அணை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாண அரசினால் கட்டப்பட்டதாகும். இதன் கட்டுப்பாடு தற்போதைய தமிழக அரசிடம் உள்ளது. எனவே, புதிய அணை கட்டுவதின் மூலம் அந்த அணையைத் தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொள்ளக் கேரளம் திட்டமிடுகிறது. இந்திய அரசும், மத்திய நீர் மேலாண்மை ஆணையமும் கேரளத்தின் சூழ்ச்சிக்கு இரையாகக் கூடாது.

தமிழ்நாட்டில் உள்ள ஆனைமலையிலிருந்து பாலாறு, ஆழியாறு, உப்பாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆகிய ஆறுகள் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து கேரள மாநிலத்திற்குள் நுழைகின்றன. அமராவதி ஆறும் சிறிது தூரம் கேரள மாநிலத்திற்குள் ஓடி பின்னர் தமிழ்நாட்டிற்குள் நுழைகிறது. அந்தச் சிறிது தூரத்திற்குள் ஒரு அணையைக் கட்டி தமிழகத்திற்கு வரும் தண்ணீரைத் தடுக்கக் கேரளம் முயலுகிறது.

நீர்வளம் மிகுதியாக உள்ள மாநிலம் கேரளமாகும். இங்குள்ள




ஆறுகளிலிருந்து 2500 டி.எம்.சி.க்கு மேலான நீர்வளம் கிடைக்கிறது. ஆனால், அம்மாநிலத்தில் பாசனம், குடிநீர் போன்றவைக்கு 500 டி.எம்.சி. மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதற்குமேல் பயன்படுத்த அங்கு நிலவளம் இல்லை. எனவே 2000 டி.எம்.சி.க்கு மேற்பட்ட நீர் கடலில் பாய்ந்து வீணாகிறது.



வீணாகும் நீரில் 10இல் ஒரு பங்கான 200டி.எம்.சி. நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால், தமிழ்நாட்டின் வறட்சிப் பகுதிகள் வளம் பெறும், உணவு தானிய உற்பத்திக் கூடும். தமிழ்நாட்டிலிருந்துதான் இப்போதும் கேரளத்திற்குத் தேவையான உணவு தானியங்கள், காய்கறி, பழங்கள், ஆடு, மாடு, கோழி போன்றவை அனுப்பப்படுகின்றன. ஆனால், இவை குறித்து சிறிதும் எண்ணிப்பார்க்காமல், தமிழகத்தை வஞ்சிப்பதையே நோக்கமாகக் கொண்டு கேரள அரசியல் கட்சிகள் செயல்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

குறிப்பாக, கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னணி, காங்கிரசுக் கட்சியின் முன்னணி ஆகியவைதான் மாறிமாறி ஆட்சிக்கு வருகின்றன. பெரியாறு அணை நீரைத் தமிழகத்திற்கு அளிப்பதை இக்கட்சிகள் கடுமையாக எதிர்க்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் உள்ள இக்கட்சிகளின் தலைவர்கள் தங்களது அகில இந்தியத் தலைமைக்கு உண்மை நிலையை உணர்த்தி அவர்கள் மூலம் கேரள கட்சிகளைக் கண்டித்துத் திருத்துவதற்கு முன்வரவேண்டும். இல்லையேல் தேசிய ஒருமைப்பாடு என்பது கேலிக் கூத்தாகி விடும் என எச்சரிக்கிறேன். என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கடும் கண்டனம்.

# அரசுப் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வியை கட்டாயமாக்க மறுப்பது ஏன்?

## பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ்

ஜனவரி 02, 2024

அரசு பள்ளிகளில் தமிழ் மன்றங்களை மேம்படுத்த ரூ.5.59 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஆணையிட்டிருக் கிறது. ஆனால் தமிழ் மீது அக்கறை இருந்தால் தமிழ்வழிக் கல்வியை கட்டாயமாக்க மறுப்பது ஏன்? என பாமக தலைவர் அன்புமணி கேள்வி எழுப்பியுள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “தமிழ்நாட்டில் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன் றங்களை மேம்படுத்தவும், ஆண்டுக்கு மூன்று முறை தமிழ்க் கூடல் நிகழ்ச்சிகளை நடத்தவும் ஒரு பள்ளிக்கு ரூ.9,000/- வீதம் மொத்தம் ரூ. 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழக அரசு ஆணையிட்டிருக்கிறது. தமிழ்மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது மாணவர்களுக்கு ஆர்வம் ஏற் படுத்தும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர் களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

தமிழ் மொழியின் தொன்மை, இலக்கிய வளம், தமிழுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர்கள் குறித்து மாணவர்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதில் ஆர்வம் காட்டும் தமிழக அரசு, தமிழை மாணவர்களிடம் கொண்டு சென்று சேர்க்க ஆர்வம் காட்டவில்லை என்பது தான் வருத்தமளிக்கிறது. தமிழை ஒரு பாடமாக படிக்காமலேயே தமிழ்நாட்டில் பள்ளிப்படிப்பை முடிக்க முடியும் என்பது மட்டுமின்றி, பட்டமும் பெற முடியும் என்ற நிலை தான் இன்று வரை நீடிக்கிறது. தமிழைக் கட்டாயப் பாடம் ஆக்குவதற்கான சட்டம் கடந்த 2006-ஆம் ஆண்டே நிறை வேற்றப்பட்ட போதிலும் கூட அந்த சட்டம் இன்று வரை நடை முறைக்கு வராதது நல்வாய்ப்புக் கேடானது.

இந்தியாவின் பல மாநிலங்களில் அம்மாநிலத்தின் தாய்மொழி தான் கட்டாயப் பயிற்று மொழியாக உள்ளது. தமிழ்நாட்டில் தமிழை கட்டாயப் பயிற்றுமொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை 40 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத் தப்பட்டு வருகிறது. அதற்காக 101 தமிழறிஞர்கள் சென்னையில் சாகும்வரை உண்ணாநிலை போராட்டம் மேற்கொண்டனர். அதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டும் அதை செயல்படுத்த முடிய வில்லை. தனியார் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியை கட்டாய மாக்க வேண்டிய ஆட்சியாளர்கள், அரசு பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியை அறிமுகம் செய்த அவலம் தமிழ்நாட்டில்தான் நடந்தது.

தமிழ் பயிற்றுமொழி, தமிழ் கட்டாயப் பாடம் ஆகிய பெருங் குறைகளை சரி செய்யாமல், தமிழ் மன்றங்களை மேம்படுத் துவதாலோ, தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகளை நடத்துவதாலோ மாணவர்களிடம் தமிழ்ப்பற்றை ஏற்படுத்த முடியாது. தமிழில் பயிற்றுவிப்பதன் மூலமாகவும், தமிழை படிக்கச் செய்வதன் மூலமாகவும் மட்டும் தான் மாணவர்களையும், தமிழையும் இரண்டறக் கலக்கச் செய்ய முடியும். எனவே, உச்சமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைவாக நடத்தி தமிழ்க் கட்டாயப்பாடச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் அதே



போல், தமிழ்வழிக் கல்வியை கட்டாயமாக்க புதிய சட்டத்தை தமிழக அரசு இயற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# ஆந்திர மாநிலத்தில் வழங்குவது போல முதியோர் ஓய்வூதியத்தை ரூ.3 ஆயிரமாக்க வேண்டும்!

## பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி இரமதாஸ்

ஜனவரி 03, 2024

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-ஆந்திரத்தில் முதியோர், கைம்பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத்திற னாளிகள் ஆகியோருக்கான மாத ஓய்வூதியம் ரூ.3,000 ஆக உயர்த்தபட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கையும் 66.34 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை ஆந்திர முதல் மந்திரி ஜெகன்மோகன் ரெட்டி இன்று தொடங்கி வைத்திருக்கிறார்.

ஆந்திர மாநில மக்களுக்கு சமூக நீதியும், சமூகப் பாதுகாப்பும் வழங்குவதில் இந்தத் திட்டம் மிகப்பெரிய மைல்கல் ஆகும். ஆந்திர மாநிலத்தில் முந்தைய தெலுங்கு தேசம் ஆட்சியின் போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் வெறும் ரூ.1000 மட்டுமே. பயனாளிகளின் எண்ணிக்கையும் 39 லட்சமாக மட்டுமே இருந்தது. கடந்த ஐந்தாண்டுகளில் மாத ஓய்வூதியம் 3 மடங்கு அளவுக்கும், பயனாளிகளின் எண் ணிக்கை இரு மடங்காகவும் உயர்த்த பட்டிருக்கிறது. ஓய் வூதியத் திட்டத்திற்காக செலவிடப்படும் தொகை ஆண்டுக்கு ரூ.4800 கோடியிலிருந்து ரூ.23,000 கோடியாக, அதாவது நான்கரை மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் இது மிகச்சிறந்த நடவடிக்கை என்பதில் ஐய மில்லை. தமிழ்நாட்டில் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு கடந்த பல ஆண்டுகளாக மாதம் ரூ.1000 மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று தி.மு.க. அதன் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித் திருந்தது. ஆனால், கடந்த ஜூலை மாதத்தில் தான் மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம் ரூ.1500 ஆகவும், மற்ற பிரி வினருக்கான ஓய்வூதியம் ரூ.1200 ஆகவும் உயர்த்தப்பட்டது.

ஆந்திர அரசுடன் ஒப்பிடும் போது இது மிக மிக குறைவு ஆகும். ஆந்திரத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் 66 சதவீதத்தினருக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் நிலையில், தமிழ்நாட்டில் குறைந்தது 1.35 கோடி பேருக்கு ஓய் வூதியம் வழங்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் ஓய்வூதியத் திற்காக விண்ணப்பித்துக் காத்திருக்கும் 75 லட்சம் பேருக்கும் ஓய்வூதியம் வழங்கி, பயனாளிகளின் எண்ணிக்கையை 1.05 கோடியாக உயர்த்த வேண்டும்.



மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தின் அளவை மாதம் ரூ.5 ஆயிரமாகவும், மற்ற பிரிவினருக்கான ஓய்வூதியத்தை மாதம் ரூ.3 ஆயிரமாகவும் உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# அயலக தமிழர் நாள் விழா 2024 சென்னையில் ஆரம்பம்!

டிசம்பர் 27, 2023

அயலகத் தமிழர் நாள் விழா சென்னை வர்த்தக மையத்தில் 2 நாட்கள் நடைபெறுகிறது. விழாவை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். நாளை விருதுகள் வழங்கி முதல்வர் ஸ்டாலின் உரையாற்றவுள்ளார். தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை 3-ம் ஆண்டாக ‘தமிழ் வெல்லும்’ என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாபெரும் அயலகத் தமிழர் தின விழாவை சென்னையில் நடத்துகிறது.

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் இன் றும் நாளையும் (ஜன.11, 12) நடைபெறும் இந்த விழாவில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், துபாய், இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட 58 நாடுகளிலிருந்து தமிழ் வம்சாவளியினர், அமைச்சர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அயல்நாடுகளில் வாழும் 1400-க்கும் மேற்பட்டோர் இம் மாநாட்டில் 218 சர்வதேச தமிழ் சங்கங்கள், 48 பிற மாநில தமிழ் சங்கங்கள் பங்கேற்க பதிவு செய்துள்ளன. முதல் நாளான இன்று, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவைத் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். அத்துடன் இங்கு அமைக்கப் பட்டுள்ள 40-க்கும் மேற்பட்ட அயலகத் தமிழர் கண்காட்சி அரங்குகளைத் திறந்துவைக்கிறார்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சிறப்பு நேர்வாக அயலகத் தமிழர்களின் புத்தக வெளியீடு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இரண்டாம் நாளான நாளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப் புரை நிகழ்த்துவதுடன் ‘எனது கிராமம்’ என்னும் முன்னோடித் திட்டத்தையும் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் தாங்கள் பிறந்த கிராமத்தை மேம்படுத்த விரும்பும் அயலகத் தமிழர்கள் அதற்குரிய நிதியை அளித்து இத்திட்டத் தின் வாயிலாகச் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சிங்கப்பூர் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கா.சண்முகம் தலைமை விருந்தினராகப் பங்கேற் கிறார். விழாவின் முக்கிய நிகழ்வாக ‘வேர்களைத் தேடி’ திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா, கனடா, ஃபிஜி, இலங்கை உள் ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 57 அயலகத் தமிழ் மாணவர்கள் தாங்கள் பண்பாட்டுச் சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் நிகழ்ச்சி நடைபெறும்.




தமிழ் இலக்கியம், கல்வி, சமூகமேம்பாடு, மகளிர் நலன், வணிகம், தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் அயலகத் தமிழர்களுக்கு விருதுகளை முதல்வர் வழங்குகிறார். இரண்டு நாள் நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கலந்துரை யாடல்கள் நடைபெறவுள்ளன.

# திருச்சி சிறப்பு முகாம் அகதிகளை விடுதலை செய்ய வேண்டும்!

**செல்வம் அடைக்கலநாதன்**

ஜனவரி 12, 2024



தமிழக அரசு நடாத்தும் அயலக தமிழர் மாநாட்டில் உரையாற்றிய செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் சிறப்புமுகாம் அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என கோரியுள்ளார்..

ஈழத் தமிழ் தலைவர் ஒருவர் தமிழ்நாட்டில் வைத்து தமிழக முதல்வர் முன்னிலையில் சிறப்புமுகாம் அகதிகளை விடுதலை செய்யுமாறு கோரியிருப்பது இதுவே முதல்முறை.

செல்வம் அவர்கள் இவ்வாறு கோரியிருப்பது இனி மற்ற ஈழத் தமிழ்த் தலைவர்களும் கோரிக்கை வைப்பதற்கு வழி வகுத்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை!

**பாமக நிறுவனர் இராமதாஸ்**

ஜனவரி 14, 2023

“கர்நாடகாவில் பட்டப்படிப்பை முடித்து 6 மாதங்கள் வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.3000 உதவித்தொகை வழங்கும் திட்டத்தை கர்நாடக அரசு தொடங்கியிருக்கிறது. தமிழகத்திலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை இதேபோல் மாற்றியமைக்க வேண்டும்” என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கர்நாடகாவில் பட்டப்படிப்பை முடித்து 6 மாதங்கள் வேலையில்லாமல் இருக் கும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.3000 உதவித்தொகை வழங்கும் திட்டத்தை கர்நாடக அரசு தொடங்கியிருக்கிறது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மேம்படுத்தி, அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு இன்று வரை ஏற்றுக் கொள்ள மறுப்பது வருத்தமளிக்கிறது.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தல்களில் காங்கிரஸ் சார்பில் அளிக்கப்பட்ட 5 முதன்மை வாக்குறுதிகளில் மகளிர் நலன் சார்ந்த நான்கு வாக்குறுதிகளை ஏற்கெனவே நிறைவேற்றி விட்ட சித்தராமய்யா தலைமையிலான அரசு, இப்போது பட்டதாரி இளைஞர்களின் நலன் சார்ந்த ஐந்தாவது வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. படித்து பட்டம் பெற்று 6 மாதங்களாகியும் வேலை பெறாத இளைஞர்களுக்கு மாதம் ரூ.3,000 வீதமும், பட்டயப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.1,500 வீதமும் வழங்கும் திட்டம் தான் இதுவாகும். ஓர் இளைஞர் பட்டம் பெற்று 6 மாதங்களில் ஏதேனும் வேலைவாய்ப்போ, உயர் கல்வி பயிலும் வாய்ப்போ கிடைக்காதபோது அவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும். இது படித்த இளைஞர்களின் எதிர்காலத்தை சிறப்பாக்கும் நோக்குடன் சரியான நேரத்தில், சரியான முறையில் செய்யப்படும் உதவியாகும்.

படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் அடுத்த 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு போட்டித்தேர்வுகளையும், குடிமைப்பணி தேர்வுகளையும் எழுதுவதில் ஆர்வம் காட்டுவார்கள். அதைப் புரிந்து கொண்டு, அவர்கள் போட்டித்தேர்வுகளை எழுதுவதற்காக செய்யும் செலவில் ஒரு குறிப்பிட்டத் தொகையை ஈடுகட்டும் வகையில் பட்டம் பெற்றதிலிருந்து 6 மாதத்தில் தொடங்கி அடுத்த இரு ஆண்டுகளுக்கு இவ்வுதவியை கர்நாடக அரசு வழங்கவுள்ளது. கர்நாடக அரசின் இந்த தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது.

தமிழகத்திலும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தை இதேபோல் மாற்றியமைக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தி வருகிறது. ஆனால், தமிழக அரசோ யாருக்கும் பயனற்ற வகையில், 17 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தையும், கர்நாடகத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தையும் எந்த வகையிலும் ஒப்பிட முடியாது. தமிழக அரசின் திட்டம் பயனற்ற திட்டமாகும்.

கர்நாடகத்தில் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மாதம் ரூ.3000 வழங்கப்படும் நிலையில், தமிழகத்தில் மாதம் ரூ.600 மட்டுமே, அதாவது கர்நாடககத்தில் வழங்கப்படுவதில் ஐந்தில் ஒரு பங்கு மட்டும் தான் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு எந்த உதவியும் வழங்கப்படுவதில்லை. மாறாக பத்தாம் வகுப்பில் தோல்வியடைந்தவர்களுக்கு மாதம் ரூ.200, 12-ம் வகுப்பு தேறியவர்களுக்கு ரூ.400 வழங்கப்படுகிறது. தமிழக அரசு வழங்கும் தொகை பட்டதாரிகளுக்கு எவ்வகையிலும் உதவாது.

கர்நாடகத்தில் பட்டப்படிப்பை முடித்த 6 மாதங்களில் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. அந்த பருவம் தான் போட்டித் தேர்வுகளை முழுவீச்சில் எழுதுவதற்கான காலகட்டம் ஆகும். அவர்கள் போட்டித்தேர்வுகளை எழுதவும், தயாராகவும் இந்த உதவித்தொகை பயனுள்ளதாக இருக்கும். ஆனால், தமிழகத்தில் பட்டப்படிப்பை முடித்து 5 ஆண்டுகள் வேலையில்லாமல் இருந்ததை நிரூபித்த பிறகுதான் உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கவே முடியும். அவர்களுக்கு உதவித்தொகை கிடைக்கும் போது அவர்கள் படிப்பை முடித்து குறைந்தது 8 ஆண்டுகள் ஆகியிருக்கும். அதற்குள்ளாக வேலையில்லாத இளைஞர்கள், போட்டித்தேர்வு எழுதும் ஆர்வத்தையும், மன உறுதியையும் இழந்திருப்பார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையால் எந்த வகையிலும் பயனும் கிடைக்காது.

கர்நாடககத்தில் முதற்கட்டமாக நடப்பாண்டில் 70 ஆயிரம் பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இது விரைவில் ஒரு லட்சமாக உயர்த்தப்படவுள்ளது. மொத்தம் இரு ஆண்டுகளுக்கு உதவித்தொகை வழங்கப்படும் என்பதால், அடுத்த ஆண்டில் புதிதாக பட்டம் பெற்ற மேலும் ஒரு லட்சம் பேர் இந்தத் திட்டத்தில் சேருவார்கள். அப்போது பயனாளிகளின் எண்ணிக்கை 2 லட்சமாக உயரும். ஆனால், தமிழகத்தில் 17 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்படி மொத்தமாகவே 55 ஆயிரம் பேருக்கு மட்டுமே உதவித்தொகை வழங்கப்படுகிறது. இது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் 70 லட்சம் பேரில் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவு ஆகும்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 2006-ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. அதற்குப் பிந்தைய 17ஆண்டுகளில் உதவித்தொகை உயர்த்தப்படவில்லை. அப்போது அறிவிக்கப்பட்ட அதே ரூ.600 தான் இன்று வரை வழங்கப்பட்டு வருகிறது. அதுவும் கூட பல்வேறு காரணங்களைக் காட்டி கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டதாக தெரிகிறது.

படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவி என்பது அவர்களின் உயர்வுக்கும், வேலை வாய்ப்புக்கும் உதவுவதாக இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் கர்நாடககத்தில் இருப்பது போன்று இத்திட்டத்துக்கான நிபந்தனைகளை தளர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அத்துடன் பத்தாம் வகுப்பில் தோல்வியடைந்தோருக்கு ரூ.1,000, தேர்ச்சி பெற்றோருக்கு ரூ.2,000, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றோருக்கும், பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கும் தலா ரூ.3,000, பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.4,000, பட்டமேற்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.5,000 வீதம் உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் அதன்மூலம் படித்த இளைஞர்களின் வாழ்வில் தமிழக அரசு ஒளி விளக்கேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறேன்” என்று கூறியுள்ளார்.



# உலக செய்திகள்

## ஜப்பானை உலுக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

ஜனவரி 01, 2024

ஜப்பானின் இஷிகாவா பகுதியில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளதாக சர்வதேச தகவல்கள் கூறுகின்றன

குறித்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவாகியுள்ளது.



இதன் காரணமாக சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்த நிலையில் ஜப்பானில் சில கரையோர பிரதேசங்களை சுனாமி அலைகள் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



குறிப்பாக மேற்குக் கடலோரம் உள்ள அனைத்து ஜப்பானிய நகரங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜப்பான் மட்டுமல்லாது தென் கொரியா, செர்பியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடலுக்கு அடியில் நிலநடுக்கம் மையம் கொண்டுள்ள போது டெக்டானிக் தகடுகள் ஒன்றோடு மோதாமல் ஒன்றின் மீது ஒன்றாக எழுந்தால் சுனாமி அலைகளின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், இன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கத்தால் 5 முதல் 7 மீட்டர் அளவிலான சுனாமி அலைகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டது.



மேலும் அங்குள்ள மக்கள் உடனடியாக கடற்கரையோரங்களில் இருந்து வெளியேறி மிக உயரமான கட்டிடங்களில் உச்சிக்கு சென்றுவிடுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது..

## இசுரவேல் – ஹமாஸ் போரில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 23 ஆயிரத்தை கடந்தது!

ஜனவரி 02, 2024

இசுரவேல் மீது ஹமாஸ் படையினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி தாக்குதல் நடத்தினர்.

பாலஸ்தீனத்தின் காசா முனையில் செயல்பட்டுவரும் ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் போன்ற ஆயுதக்குழுக்கள் கடந்த ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் இசுரவேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும், இசுரவேலில் இருந்து 240 பேரை பணய கைதிகளாக காசாமுனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இந்த தாக்குதலை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இசுரவேல் போர் அறிவித்தது.

இதனிடையே, காசாமுனையில் உள்ள பணய கைதிகளில் 100க்கும் மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. ஆனாலும், இன்னும் 129 பேர் காசாவில் பணய கைதிகளாக உள்ளதாக இசுரவேல் தெரிவித்துள்ளது. பணய கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் இசுரவேல் ஈடுபட்டு வருகிறது. அதேவேளை, காசா முனையில் இசுரவேல்-ஹமாஸ் இடையேயான போர் இன்று 87வது நாளாக நீடித்து வருகிறது.

இந்நிலையில், இசுரவேல் - ஹமாஸ் போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 23 ஆயிரத்தை கடந்துள்ளது. அதன்படி, இசுரவேலில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் நடத்திய தாக்குதலில் 1,147 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக பாலஸ்தீனத்தின் காசாமுனையில் இசுரவேல் நடத்திய தாக்குதலில் 21 ஆயிரத்து 978 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, பாலஸ்தீனத்தின் மேற்குகரையில் நடந்த மோதலில் 319 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் இசுரவேல் - ஹமாஸ்



போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 23 ஆயிரத்து 436 ஆக அதிகரித்துள்ளது.

## ஈரானில் அடுத்தடுத்து குண்டு வெடிப்பு; 103 பேர் பலி!

ஜனவரி 04, 2023

ஈரானின் ஜெனரல் காசிம் சுலைமானி கொல்லப்பட்டதன் நினைவு நாளான இன்று அவரது கல்லறை அருகே குண்டுகள் வெடித்துள்ளன. இக்குண்டு வெடிப்பில் 103 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் 180 பேர் காயமடைந்தனர் என ஈரான் அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இரண்டு குண்டு வெடிப்புகளும், பிற்பகல் 3 மணியளவில் நடந்தன. மற்றும் 20 நிமிடங்களுக்குப் பிறகு, தெற்கு ஈரானில் உள்ள கெர்மானில் உள்ள சாஹேப் அல்-ஜமான் மசூதிக்கு அருகில் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

சுலைமானி இறந்த ஆண்டு நிறைவைக் குறிக்க ஆயிரக்கணக்கான மக்கள் கல்லறை நோக்கி கூடியிருந்தார்கள். இந்த நிலைமையில் குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. இரண்டு பைகளில் குண்டுகள் வைக்கப்பட்டு தானியங்கி மூலம் இயக்கி வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என முதல் கட்டம் தெரிய வந்துள்ளது.

1979 புரட்சிக்குப் பிறகு ஈரானிய மண்ணில் நடந்த மிகக் கொடிய தீவிரவாதத் தாக்குதல் என்று கூறப்படுகிறது. குண்டுவெடிப்புகளுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை. நாளை வியாழக்கிழமை நாடு முழுவதும் துக்கநாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.







# ‘உனக்காக மடிவேன்...ஆனாலும் உனக்காக நான் வாழவும் செய்வேன்’ என்ற யுத்தப் பாடலுடன் ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க், நியூசிலாந்து நாடாளுமன்ற எம்.பி!

ஜனவரி 07, 2023

‘நியூசிலாந்து நாட்டின் நாடாளுமன்றத்தில் தனது முதல் உரையின்போது பழங்குடியின போர் பாடல் பாடி அதிரவைத்து தனது இனத்தினர் பற்றி உணர்ச்சிகரமாக பேசிய இளம் பெண் எம்.பி. ஒருவரின் வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதன் பின்புலத்தைப் பார்ப்போம்.

நியூசிலாந்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த 54-வது நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தேசிய கட்சியினர் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தனர். இதனிடையே, அங்குள்ள டி பாடி மவோரி கட்சியைச் சேர்ந்த 6 பேர் எம்.பி.களாக தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்களில் ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க் ஒருவர். 21 வயதேயான இவர் கடந்த 1853-லிருந்து நியூசிலாந்து வரலாற்றில் மிக இளம் வயதில் எம்.பி. ஆனவர் என்ற பெருமையை பெற்றுள்ளார். இவர் கடந்த டிசம்பர் மாதம் அந்நாட்டில் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசிய முதல் உரைதான் இப்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

“எனது இந்த முதல் உரையை எனது தாத்தா, பாட்டிகளுக்கு அர்ப்பணித்திருந்தேன். என்றாலும் இன்று இந்தப் பேச்சு எங்கள் சமூகத்தின் அனைத்து குழந்தைகளுக்கும் அர்ப்பணிக் கப்படுகிறது” என்று தனது பேச்சினைத் தொடங்கிய ஹானா, “உனக்காக நான் மடிவேன்... ஆனாலும் உனக்காக நான் வாழவும் செய்வேன்!” என்று தனது பேச்சினுடே மவோரி இனத்தின் போர் பாடலைப் பாடி நாடாளுமன்றத்தை அதிர வைத்தார். இவர் உணர்ச்சிப் பொங்க ஆவேசமாகப் இந்தப் பேச்சு தற்போது நெட்டிசன்களை வெகுவாக ஈர்த்துள்ளது.

யார் இந்த ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க்? - நியூசிலாந்தின் ஆக்லாந்துக்கும் ஹாமில்டனுக்கும் இடையில் உள்ள சிறிய நகரமான ஹன்ட்லியைச் சேர்ந்தவர் ஹானா ரவ்ஹிடி மைபி க்ளார்க். 21 வயதேயான இந்த இளம் பெண்ணுக்கு அரசியல் ஒன்றும் புதில்லை. மவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இவரது குடும்பம் மூன்று தலைமுறைகளாக அரசியலில் உள் ளது. கடந்த 2018-ம் ஆண்டு இவரது தாத்தா டைதிமு மைபி, ஹாமில்டன்களின் காலனியாதிக்க மரபு மற்றும் மவோரிக ளுக்கு இழைக்கப்படும் அநீதிக்களுக்கு எதிராக போராடும் விதமாக ஹாமில்டன் நகரின் பெயருக்கு சொந்தக்காரரான கேப்டன் ஹமில்டனின் சிலையை உடைத்து தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளார்.

1996 முதல் எம்.பி.யாக இருந்தவரும், கடந்த 2008-ம் ஆண்டு முதல் ஹவுராகி வைகடோ தொகுதியில் வெற்றி பெற்று வந்தவருமான மூத்த அரசியல்வாதியான நனையா மஹுதவை ஹானா தோற்கடித்து முதல்முறையாக நாடாளுமன்றத்துக்குள்





நுழைந்துள்ளார்.

தொழில்முறையாக மவோரி கம்யூனிட்டி கார்டன் நடத்தி வரும் ஹானா, அரசியல் மற்றும் சமூக போராட்டாங்களைத் தவிர, பள்ளிக் குழந்தைகளுக்கு மவோரி கார்டனிங் குறித்து கற்பித்து வருகிறார். மேலும், நியூசிலாந்தின் பூர்வகுடி மக்களின் உரிமைகளுக்காக போராடியும் வருகிறார்.

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்க தலைவி கைது பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம்!

ஜனவரி 11, 2024

வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவி கைது செய்யப்பட்டுள்ளதை கண்டித்துள்ள பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் சிபான் மக்டொனாக் இது தொடர்பில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதமொன்றையும் எழுதியுள்ளார்.

இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவர் (சிவநந்தன் ஜெனிற்றா) கைதுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நான் உங்களிற்கு இந்த கடிதத்தை எழுதுகின்றேன் என தெரிவித்துள்ள அவர் இந்த கைதுகுறித்து பிரிட்டனின் கண்டனத்தை தெரிவிப்பதற்கான உடனடி நடவடிக் கைகளை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை தாக்கிய பொலிஸாரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இலங்கையிடம் கோரவேண்டும் நியாய மான விசாரணைகளை கோரவேண்டும் அதற்காக பிரிட் டனின் வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் சிபான் மக்டொனாக் தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை சந்திக்கமுயன்றவேளை அவர் கைது செய்யப்பட்டார் என சிபான் மக்டொனாக் தெரிவித்துள்ளார்.

துயரத்தில் சிக்குண்டுள்ள காணாமல் போனவர்களின் உறவுகள் அவர்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிய விரும்புகின்றனர் ஆனால் ஜனாதிபதி அவர்களை சந்தித்து அவர்களின் வேண்டுகோள்களை செவிமடுக்க மறுத்துள்ளார் அதேவேளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு படையினரால் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டார்கள் உலகில் அதிகளவானவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது என ஐநாவின் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான செயற்குழு தெரிவித்துள்ளது என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நீதிவழங்கப்படுவதற்கு பதில் பாதிக்கப்பட்டவர்கள் துஸ்பிரயோகத்திற்குள்ளாவது குறித்து பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சிபான் மக்டொனாக் இந்த கைதினை கண்டிப்பதற்கும் நீதிமன்ற நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் பிரதிநிதியை அனுப்பவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!
– கவிஞர் பாரதிதாசன் –

உறவுகள் அனைவருக்கும்
இனிய தமிழர் திருநாள் தைப்பொங்கல்
நல்வாழ்த்துகள். – உலகவணிகம்

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# யேமானின் ஹவுதி படைகள் மீது தாக்குதல்களைத் தொடங்கிய அமெரிக்கா மற்றும் பிரித்தானியா!

ஜனவரி 12, 2023

யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா மற்றும் பிரித்தானியா வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

யேமனில் உள்ள ஹவுதிகளுடன் தொடர்புடைய இலக் குகளுக்கு எதிராக அமெரிக்காவும் பிரித்தானியாவும் தாக் குதல்களை நடத்தத் தொடங்கிவிட்டன என்று நான்கு அமெரிக்க அதிகாரிகள் வியாழனன்று ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தனர்.

ஈரான் ஆதரவு குழுவிற்கு எதிராக செங்கடலில் சர்வதேச கப்பல் போக்குவரத்தை குறிவைத்துத் தாக்கிய மட்டுமல்லாமல் அமெரிக்கா மற்றும் பிரித்தானியக் கடற்படையினர் மீது டிரோன் தாக்குதல்களை நடத்தினர் தொடங்கிய ஹவுதி அமைப்பினர் ஆனால் அனைத்து டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்கா பிரித்தானயக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் இன்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக் குதல்களை அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஆரம்பித் துள்ளன.

எந்தவொரு அமெரிக்க தாக்குதலும் பதில் தாக்குதல்கள் இல்லாமல் போகாது ஹவுதியின் தலைவர் என்று கூறினார்.

வியாழன் அன்று ஹவுதிகள் ஏடன் வளைகுடாவில் உள்ள சர்வ தேச கப்பல் பாதைகளில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையை வீசிய தாக அமெரிக்க இராணுவம் கூறியது.

செங்கடலில் கப்பல் போக்குவரத்துக்கள் மீதான தாக்குதல்களை நடத்தும் யேமன் ஹவுதி போராளிகளுக்கான தாக்குதல்களை அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து நடத்தத் தொடங்கின.

இது பிராந்தியத்தில் மோதல்களை அதிகரிக்கும் என்ற அச் சத்தை எழுப்பியுள்ளது.

5 பிராந்தியங்களில் 73 தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஐந்து ஹவுதி அமைப்பின் இராணுவ செய்தித் தொடர்பாளர் Yahya Saree தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் பிரித்தானியாத் தாக்குதல்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர் மற்றும் ஆறு பேர் காயமடைந்தனர் அவர்கள் தெரிவித்தனர். கொல்லப்பட்டது யார் என்பதை அவர் விளக்க வில்லை.

எங்கள் யேமன் மக்களுக்கு எதிரான அதன் குற்றவியல் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் எதிரி முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறார். மேலும் அது பதிலளிக்கப் படாமலும் தண்டிக்கப்படாமலும் போகாது என்று சாரீ எச சரித்தார்.

ஹவுதிகளின் தலைமைப் பேச்சுவார்த்தையாளரும் செய்தித்



தொடர்பாளருமான முகமது அப்துல்-சலாம், அமெரிக்காவும் பிரிட்டனும் இந்த துரோக ஆக்கிரமிப்புடன் முட்டாள்தனத்தை செய்ததாக விவரித்தார்.

ஹவுதிகளால் நடத்தப்படும் செயற்கைக்கோள் செய்தி சேனலான அல் மசிரா, தலைநகர் சனாவிற்கு வடக்கே அல்-தைலாமி விமான தளத்தை தாக்கியது. மூலோபாய துறைமுக நகரமான ஹோடைடாவில் உள்ள விமான நிலையம், சாதா விற்கு கிழக்கே உள்ள முகாம், நகரத்தில் உள்ள விமான நிலையம் தைஸ் மற்றும் ஹஜ்ஜாவிற்கு அருகிலுள்ள விமான நிலையங்கள் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

# பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக சிறீலங்கா எடுத்துள்ள நடவடிக்கை மக்களின் உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன!

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

ஜனவரி 02, 2024

பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக சிறீலங்கா எடுத் துள்ள நடவடிக்கைகள் மக்களின் உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என சர்வதேச மனித உரிமை கண்காணிப் பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கொள்கைகளும் பலவீனமான சமூக பாதுகாப்பும் சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளால் பலர் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2024ம் ஆண்டின் உலக அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் கருத்துவெளிப் பாட்டு சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக்கிவருகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சிறுபான்மை சமூகத்தினருக்கு எதி ரான பாரபட்ச கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் பின்பற்றுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

மில்லியன் கணக்கானவர்கள் பொருளாதார நெருக்கடி லிருந்து தப்புவதற்காக போராடுகின்றனர் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகண்காணிப்பகத்தின் ஆசியாவிற் கான பிரதி இயக்குநர் மீனாக்சிகங்குலி இதற்கு ஊழலும் பொறுப்புக்கூறாத ஆட்சியும் காரணம்என தெரிவித்துள்ளார்.

வறியநிலையில் உள்ளவர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற் படுத்தும் நடவடிக்கைகள் மூலம் தற்போதைய அரசாங்கம் பதில் நடவடிக்கைகளை எடுக்கின்றது என குறிப்பிட்டுள்ள அவர் அதே வேளை பொறுப்புக்கூறல் ஜனநாயக அடிப்படையிலான தீர் மானங்களை எடுப்பதற்கு அவசியமான குரல்களை தற் போதைய அரசாங்கம் ஒடுக்குகின்றது எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேச நாணயநிதியத் தினதும் பொருளாதார நெருக்கடிக்கான பதில் நடவடிக்கைகள்

மனித உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

17 வீதமானமக்கள் ஓரளவு அல்லது கடும் உணவுப்பாதுகாப் பின்மையை எதிர்நோக்கும் நிலை இலங்கையில் காணப் படுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்




தெரிவித்துள்ளது.

இலங்கையின் வடக்குகிழக்கில் வலிந்து காணாமலாக் கப்பட்டோர் குடும்பத்தவர்கள் மனித உரிமை செயற்பாட் டாளர்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பினை மிரட்டல்களை தொடர்ந்தும் எதிர்நோக்குகின்றனர் எனவும் தெரிவித்துள்ள மனித உரிமை கண்காணிப்பகம் ஆலயங்கள் உட்பட தமிழ் முஸ்லீம் மக்களின் சொத்துக்களை இலக்கு வைக்கும் காணி அபகரிப்பு கொள்கையை அரசாங்க அமைப்புகள் முன்னெடுக் கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளது.

# இந்தோனேசியாவில் மீண்டும் மராபி மலையில் எரிமலை வெடிப்பு!

டிசம்பர் 23, 2023

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள மராபி மலை மீண்டும் வெடித்தது.



எரிமலையில் இருந்து தீக்குழம்பு வெளியேறியதால், அருகில் உள்ள கிராமங்கள் பாதிக்கப்பட்டது.

இதனால் அங்குள்ள 150 இற்கும் மேற்பட்ட மக்கள் வெளி யேற் றப்பட்டனர். நேற்று (14.01.2024) அதிகாலை 6.21 மணிக்கு எரிமலை வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் மராபி மலையில் வெடிப்பு ஏற்பட்ட போது,




எரிமலையில் நடைபயணம் மேற்கொண்ட 75 பேரில் பலர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 23 பேர் உயிரிழந்ததுக் குறிப்பிடத்தக்கது.

சுமத்ரா தீவின் மிகவும் ஆக்டிவான எரிமலை மட்டுமன்றி, இந்தோனேசிய தீவுக்கூட்டத்தின் விழித்திருக்கும் 130 எரி மலைகளில் ஒன்று என்ற வகையிலும் மராபி கவனம் பெற்றுள்ளது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinic canada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



AR GROUP

**ARASAN RAJADURAI**
*Real Estate & Developments Realtor*

C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca

RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

## சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக அமையவேண்டும்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



“நான் காலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன்.

...கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைபட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும். மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

...இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்துக்கு அமைய கலை, இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புக்களை சிருஷ்டிக்க வேண்டும். இந்த புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டுவதாக அவை அமையவேண்டும்.

... சமூகப் புரட்சி என்பது பண்பாட்டு மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புற நிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அக நிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமாகனது. பழைய முரண்பாடுகள் நிறைந்த சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளை கட்டியெழுப்பும்போது இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழவேண்டும். புதிய சமுதாயத்தில் புதிய உறவுகளைக் கொண்ட, புதிய வாழ்க்கையைத் கொண்ட, புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒரு புரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இங்குதான் பண்பாட்டு மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

... மிகத் தொண்மை வாய்ந்த நீண்ட வரலாறுடைய எந்தவொரு பண்பாட்டு அம்சங்களிலும், பழைமைவாத, கருத்துக்களும், வேரூன்றியிருப்பது இயல்பு. எமது பண்பாடும் இதற்கு விதி விலக்கல்ல. பண்பாடு என்ற கோலத்தில் எமது சமூக வாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்.”

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் முத்தமிழ் விழா வாழத்துச் செய்தியில் இருந்து தொகுக்கப்பட்டவை.



மரகதம் வைரம் முத்து
புஷ்பராகம் மாணிக்கம் பவளம்
வைடூரியம் நீலம் கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
ல்ஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




தேசத்தின் புயல்கள்
பொங்கும் பொங்கல்
தமிழீழ விடியலுக்கான பொங்கல்




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி





இரண்டாயிரம் ஆண்டுப் பொங்கலடி
தோன்றட்டும் ஆயிரம் மங்கலங்கள்
மண்ணாற்றல் யாயவுமே மேல்வரட்டும்
மாற்றலர் கெய்யிடர் போய்விடட்டும்

ஆடிய பச்சைக் கதிர்களெல்லாம்
அறுவடை முடிந்து அரிசியாகி
வாடிய வயிறை குளிரவைக்கும்
வளமான தைப்பொங்கல் நாளிதடி

முத்தான நெல்லின் மணிகளோடு
முந்திரிகை வற்றல் சேர்ந்தினிக்கும்
சத்தான பயறும் கலந்தவிந்த
சர்க்கரைப் பொங்கலாய்
வாழ்வினிக்கும்

பச்சை அரிசி பால் பொங்கிடட்டும்
பட்டினி துன்பங்கள் நீங்கிடட்டும்
அச்சங்கள் நீங்கிட ஆண்டு இதில்
ஆதார பொங்கலோ பொங்கிடட்டும்

ஓடிடும் காலங்கள் ஓடிடட்டும்
ஒன்றுமில்லா நிலை மாறிடட்டும்
தேடிய செல்வங்கள் சேர்ந்திடட்டும்
தமிழ் தேசம் மகிழ்வினில் ஆடிடட்டும்

ஆண்டுக்கொருமுறை வாற பொங்கல்
அடுத்த ஆண்டினில் வரும் பொழுது
மீண்டும் எம்மை நாங்கள் ஆளுகின்ற
மேன்மையுறு நாளாய் தோன்றிடட்டும்

வீட்டுக்கு வீடு நாம் பொங்கிடலாம்
வெற்றி விழாவாகப் பொங்கிடலாம்
நாட்டு விடுதலை கிட்டியதால்
நமக்கது சுதந்திரப் பொங்கலடி
-நாவண்ணன்




# ஒன்று திரண்ட தமிழர் எழுச்சிக்கு வித்திட்ட 'பொங்கு தமிழ் 17.01.2001

2001 ஜனவரி 17இல், மீண்டுமொருமுறை சிதைக்கப்பட்டிருக்கின்றது சிறீலங்கா அரசின் முகத்திரை. இம்முறை அதன் முகத்தில் ஓங்கி அறைந்திருப்பது, யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகமும், அவர்கள் பின்னே அணிதிரண்ட பொது மக்களுமே.



விடுதலை வேண்டிநிற்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்தக் குரலாய், யாழ். குடாநட்டின் மத்தியில் பொங்கி வெடித்திருக்கின்றது “பொங்குதமிழ்”. இவ் எழுச்சி நிகழ்வானது அது நடைபெற்ற இடம், காலம், சூழ்நிலை போன்ற காரணிகளினடிப்படையில் பார்க்கின்றபோது, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனிச் சிறப்பு மீக்கதாகத் திகழ்கின்ற அதேவேளை, விடுதலைப் போரானது மற்றுமோர் புதிய பரிமாணத்தை எட்டி நிற்பதனையும் வெளிக்காட்டி நிற்கின்றது.

காலம்காலமாக தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளையும், அதற்காக கிளிர்ந்தெழுந்த அவர்களது விடுதலைப் போராட்டத்தையும், அந்தக் காலம் முதல் இந்தக் காலம்வரை ஆயுத பலாத்காரத்தின் மூலம் அடக்கி ஒடுக்கிவிடலாம் எனக் கங்கணம் கட்டிநிற்கும் சிறீலங்கா அரசானது, ஆரம்பகாலங்களில் எவ்வாறு தமிழ் மக்களின் அமைதிவழி சாத்வீகப் போராட்டங்களுக்கெதிராகச் செயற்பட்டதோ, அதே போன்றே இப்பொழுதும் யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் ஏற்பாடு செய்த “பொங்குதமிழ்” எழுச்சி நிகழ்வினையும் குழப்பியடித்து இல்லாமற் செய்தவிடலாம் எனப் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இருப்பினும் மாணவர்களும், மக்களும் காட்டிய வியத்தகு உறுதியின் பயனாய், சிறீலங்கா அரச படைகளின் கையாலாகாத்தனம் கடந்த 17.01.2001 நண்பகல் 12:30 மணியுடன் வரலாற்றுப் பதிவாகிப்போனது.

இரு இனங்களுக்கிடையில் நடைபெறுகின்ற ஆயுதப் போராட்டத்தின் மத்தியில், ஓர் அந்நிய அதாவது, எதிரிப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்துகொண்டு, அதுவும் “சமாதானம் வேண்டாம் யுத்தம்தான் தீர்பு” என்கிற போர் வெறிபிடித்த ஓர்




அரச இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து கொண்டு, சமாதானம், பேச்சுவார்த்தை, யுத்தநிறுத்தம் என்று குரலெழுப்புவதென்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல.



அப்படி இருந்தும் வெற்றிகரமாக இவ் அதிசயம் நடந்தேறியிருப்பதானது, பல உண்மைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதனையும் எண்ணிப்பார்க்க வேண்டியது அவசியமே.

“சமாதானத்துக்காகவே யுத்தம் செய்கின்றோம்” என்று கூறிக்கொண்டு, யாழ்ப்பாண மண்ணையும், மக்களையும் “சூரியக் கதிர்” என்கிற படை நடவடிக்கையின் மூலம் ஆக்கிரமித்துக் கொண்ட சிறீலங்கா அரச படைகள், தமது கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாண மக்கள் சகல உரிமையுடனும், சுதந்திரமாக, சுபீட்சமாக வாழ்கின்றார்கள் என்றே இதுவரை வெளி உலகை நம்ப வைத்து வந்தது. இதனைப் பொடிப்பொடியாக்கிவிட்டது பொங்குதமிழ் நிகழ்வு.

பொங்குதமிழ் நிகழ்வானது யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் முன்னெடுப்பில், நீண்ட பல நாட்களைக் கொண்ட ஓர் நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டு, அதன் உச்சக்கட்டமாக “பொங்குதமிழ் எழுச்சி விழா” என்னும் நிகழ்வு கடந்த 17.01.2001 இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல்வேறு தடைகளையும், நெருக்குவாரங்களையும் உடைத்தெறிந்தே இந்த நிகழ்வானது திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டது.

ஆரம்பத்தில் இதற்குத் தடைவிதித்த சிங்கள இராணுவமும்,



பொலிசாரும் பின்னர் வெளிப்படையாகவே வன்முறைகளிலும், எதிர்ப் பரப்புரையிலும் இறங்கினர். பல்வேறுபட்ட மிரட்டல்களும், அச்சுறுத்தல்களும் மாணவர்கள் மீது விடுதக்கப்பட்டதுடன், ஒருசில மாணவர்களைக் கைதுசெய்யும் முயற்சியிலும் இறங்கியது அரச படைகள். பலாலிப் படைத்தளத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட ஓர் பத்திரிகையாளர் மாநாட்டில், யாழ். இராணுவத் தளபதியான அன்ரன் விஜேந்திரா அவர்கள், சமாதானம் கோரி ஆர்ப்பாட்டம், பேரணிகள் நடத்துவது குற்றமாகக்க கருதப்படும் என்றும், இதற்குத் தாம் ஒருபோதும் அனுமதி தரப்போவதில்லை என்றும் கூறியதோடு, இந்நிகழ்வுக்கு 5 சதவீதமானோரே ஆதரவுள்ளர்களாக இருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டார். இது தவிர பல்கலைக்கழக மாணவர்கள் பலர் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும், புலிகளாலேயே மாணவர்கள் தூண்டப்பட்டு இவ்வாறு தவறான வழியில் செல்கின்றார்கள் என்றும் கதையளந்தார். இதே போன்றே யாழ். மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகரும், பொங்குதமிழ் நிகழ்வைத் தடைசெய்வதாகக் கூறி, தேவையேற்படின், கண்ணீர் புகை, குண்டாந்தடிப் பிரயோகம் என்பவற்றுடன் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தவேண்டி வரலாம் என்றும் குறிப்பிட்டார். ஆனால், மாணவர்களோ, இதற்கு 99 சதவீதமானோர் ஆதரவு தருவதாகவும், இதை நடத்தியே தீருவோம் என்றும் அரச படைகளுக்கெதிராகச் சவால் விடுத்ததோடு, அதற்கான தயாரிப்பு வேலைகளிலும் மும்முரமாக ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் வீடு வீடாகச் சென்று பிரச்சாரங்களை மேற்கொண்ட மாணவர்கள், பாடசாலைகளுக்குச் சென்று தமது நிலைப்பாட்டைத் தெரிவித்து ஆதரவு கோரினர். அதேபோன்று, பல்வேறு அமைப்புக்களிடமும், ஏனைய மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களிடமும் ஆதரவு வேண்டினர். அத்தோடு நின்றுவிடாது, தமது நியாயப்பாட்டைத் தெரிவித்து வெளிநாட்டு பொது நிறுவனங்கள், அமைப்புக்களுக்கும் மகஜர்கள் அனுப்பினர். மும்மொழியில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை இராணுவத்தினருக்குக் கூட விநியோகித்தனர். இவ்வாறான மாபெரும் பிரச்சாரத்தின் மூலம் மிகப் பெரிய ஆதரவு அலை யாழ். பல்கலைக்கழக சமூகத்துக்குக் கிட்டியதுடன், அவர்களுக்கு ஆதரவாக, கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகமும், வவுனியா பல்கலைக்கழக மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும் எனப் பல்வேறு தரப்பிலிருந்தும் ஆதரவாக அவ்வப்பகுதிகளில் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

இவ்வாதரவானது அவுஸ்திரேலியா, கனடாவின் பல மாநிலங்கள் என வியாபித்து யாழ். மாணவர் சமூகத்தை மேலும் உற்சாகப் படுத்தியது.

இது இவ்வாறு இருக்க படைத்தரப்பும் தனது எதிர் நடவடிக்கையில் மிகத் தீவிரமாகவே செயற்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றிவர வீதியெங்கும் வீதித்தடைகள் போட்டும், பொலிசாரைக் குவித்தும் தீவிர கண்காணிப்புக்களை மேற்கொண்டதுடன், பல்கலைக்கழக மாணவர்ள் விரிவுரையாளர்கள் எனப் பலரையும், பரிசோதித்து முடிந்தவரை அவர்களுக்குச் சிரமத்தைக் கொடுத்தது. பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவர்களை வீதிகளில் மறித்து, தமது காவலரண்களில் பலமணிநேரம் தடுத்து வைத்திருந்தனர். பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களையும், அதிபர், ஆசிரியர்களையும், பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஆதரவு கொடுக்கவேண்டாம் என்று பிரச்சாரம் செய்ததுடன், மகளிர் பாடசாலைகளுக்குச் சென்று ஒழுங்கீனமாக நடந்து விட்டுப் பழியை பல்கலைக்கழக மாணவர்கள் மீது சுமத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டனர். இராணுவம் தவிர, அரசுக்கு முண்டுகொடுத்துச் செயற்படும் குழுக்களில் ஒன்றான ஈ.பி.டி.பி. கட்சியும் மாணவர் எழுச்சியை ஒடுக்கும் தீவிர செயற்பாடுகளில் பங்ககொண்டன. ஒலி பெருக்கி கட்டப்பட்ட வாகனம் மூலம் ஊரூராகச் சென்று மக்களை இதில் கலந்து கொள்ளவேண்டாம் என்று கூறியதுடன், இந்துக் கோவில் ஒன்றில் ஆலய ஒலிபெருக்கியின் மூலம் 17ஆம் திகதி மாணவர்களை பாடசாலைக்குச் செல்ல வேண்டாமென்றும், மீறிச் சென்றால் பல அசம்பாவிதங்கள் ஏற்படும் என்றும் அடிக்கடி அறிவித்துக் கொண்டிருந்தனர். வலிகாமப் பகுதிப் பிரதேசசபைத் தலைவர் ஒருவர் தனது அதிகார வரம்பை மீறிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களை அழைத்து நிகழ்வுக்கு ஆதரவு கொடுக்க வேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்தார்.

இவ்வாறு அரசம், அதன் படைகளும் முடிந்தவரை தம்மாலான முயற்சிகளையெல்லாம் பிரயோகித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியை முறியடிக்கப் போராடினர். இறுதியில் நடந்தது என்ன? எவ்வளவோ தடுத்தும் மக்கள் வெள்ளம் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு பொங்குதமிழை சிறப்பித்தது.

17.01.2001 காலை 10:30 மணிக்கு திட்டமிட்டபடி “பொங்கு தமிழ்” எழுச்சி நிகழ்வு சுதந்திர தீபமேற்றலுடன் ஆரம்பமானது. மாணவர்கள், பொதுமக்கள், மதத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் என யாழ். பல்கலைக்கழக மைதானமே நிரம்பி



வழிய பல்லாயிரக் கணக்கில் மக்கள் அணிதிரண்டு பொங்கு தமிழில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். மஞ்சள் சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மைதானத்தில் விசேட மேடை ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல எழுச்சி உரைகள் ஆற்றப்பட்டன. மைதானத்தின் நடுவே முட்கம்பி வேலியமைக்கப்பட்டு அதனுள்ளே எலும்புத் துண்டுகள் கட்டப்பட்டு, தொலைபேசி, தொலைக்காட்சி, குளிர் சாதனப் பெட்டி, போன்ற மின் உபகரணங்கள் வைக்கப்பட்டு, அதில் சுகம் காணும் மக்கள் இறுதியில் “சுதந்திரமாக வாழ்வோம்” எனக் கூறி முட்கப்பி வேலியினை அறுத்தெறிந்து, வெளியேறுவதான காட்சி அமைப்புடன், ஓர் குறியீட்டு நாடகம் நடாத்தப்பட்டது. இதன்மூலம், யாழ்ப்பாணம் ஓர் திறந்தவெளிச் சிறைச்சாலை என்றும், அவர்கள் உண்மையான சுதந்திரத்திற்காக ஏங்குகின்றார்கள் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமது வாயினை கறுப்புத் துணிகளால் கட்டியவாறு காணப்பட்டனா். இவ்வாறு எழுச்சிகரமாக நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்க, ஏராளமான மக்களையும், மணாவர்களையும் படைத்தரப்பு வீதித்தடைகளில் மறித்து பலவந்தமாகத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தனர். ஆயினும், அவர்களில் பலர் குறுக்கு வீதிகளால் வந்து மதில் பாய்ந்து நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். இவ்வாறு சென்றோரின் நூற்றுக்கணக்கான துவிச்சக்கர வண்டிகள் இராணவ “ட்ரக்” குகளில் ஏற்றிக் செல்லப்பட்டன.

திருப்பி அனுப்பப்பட்ட 47 ஒன்றியங்களின் பிரதிநிதிகளும், மதத்தலைவர்களும், அருட் சகோதரிகளும் இணைந்து ஒன்றிய வளாகத்தில் கூடி பிரார்த்தனைகளிலும், பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவாக கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டு நிகழ்விற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. மதியம் 12:00 மணிக்கு அனைத்து ஆலய மணிகளும் ஒலிக்க, மக்கள் எழுந்து நின்று தாயக விடுதலைக்கு உயிர் நீத்த மாவீரர்கள் நினைவாக அகவணக்கம் செலுத்தினர். விழாவின் அறுதியில் “பொங்குதமழ்ப் பிரகடனம்” பல்கலைக்கழக மாணவர்களால் வெளியிடப்பட்டது.

“இந்தப் பொழுதில் திரண்டிருக்கும் எங்கள் ஆத்மாவின் குரலை ஒரே சுருதியில் வெளிப்படுத்துகின்றோம். அரசு இக்கொடிய யுத்தத்தை நிறுத்தி, அர்த்தமும், நீதியுமான பேச்சுவார்த்தையினை விடுதலைப் புலிகளுடன் உடன் ஆரம்பிக்க வேண்டும். இதன் வழி தமிழரின் நீண்ட கால ஆத்ம வெளிப்பாட்டினை, பெருவிருப்பினை, அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை இவற்றினை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வினை நாம் காணவேண்டும்.

“சர்வதேச சமூகமே! நீண்டகால அடக்குமுறைக்குள் பயந்து உறைந்து போயுள்ள எமது மக்களின் உண்மையான மன உணர்வுகளை, அபிலாசைகளை, உரியவாறு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீதியான, அமைதியான எங்கள் வாழ்விற்காகன தீர்வினைக் காண்பதில் உங்கள் மனச்சாட்சிக்கு உரியவாறு பேசவேண்டும்.”

இவ்வாறு பொங்குதமிழ்ப் பிரகடனம் தமது பேரணிக்குரிய காரணத்தை தெழிவாகச் சுட்டிக்காட்டியதுடன், சர்வதேசத்திற்குத் தனது உணர்வலைகளை வெளிப்படுத்தி 12:30 மணியுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தது. நிகழ்வின்போது மைதானத்துக்குள் இருந்த மக்களை வீதியில் இரந்து வேலிகளுக்கூடாக வீடியோ படம் எடுக்கமுனைந்த இராணுவத்தினரது முயற்சி, மாணவர்களால் மறைப்புக்கள் போட்டு முறியடிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

படைத்தரப்பின் கைகளையும் மீறி, எப்படியொ பொங்குதமிழ் எழுச்சி விழா நடைபெற்றுவிட்டது. இது அடக்குமுறைக்குள் வாழும் குடாநாட்டு மக்களிற்கு மிகப்பெரிய வெற்றியே. ஆனால், படைத்தரப்பிற்கோ இதுவொரு கசப்பான அனுபவமே.

திருகோணமலையில் நடந்த நவம்பர் மாதம் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களின் நினைவாக படைத்தரப்பைக் கண்டித்து, அப்பகுதி மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்தினர். இது நடந்து சரியாக ஒரு மாத காலத்தின் பின்னர் டிசம்பரில் மேலும் இரு தமிழ் இளைஞர்களை, அப்பகுதியில் வைத்து கடற்படையினர் சுட்டுக்கொன்றனர். இவர்களை எதற்காகச் சுடப்பட்டார்கள் என்றால், அப்பகுதியில் நடைபெற்ற பேரணிக்கு முன்நின்று செயற்பட்டவர்கள் இந்த இரண்டு இளைஞர்களுமே. ஏற்கனவே நான்கு உயிர்களக்காக ஆட்சேபித்த மக்கள், அதற்காக மீண்டும் இரு உயிர்களை இழந்தார்கள். இதனால் மேலும் உயிரிழப்புக்கு














அவுஸ்திரேலியா
கடந்த 17.01.2001 அன்று அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மாணவர்கள் தாயகத்தில் தமது உறவுகள் நடத்தும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து அமைதிவழியில் திரண்டனர். மெல்பேர்ண், சிட்னி ஆகிய இருநகரங்களில் பொங்கு தமிழிற்கு ஆதரவாக நடத்திய போராட்டங்கள் நடந்தேறின.

அஞ்சி மக்கள் மௌனித்துப் போயினர். இவ்வாறு தனது ஆயுத பலத்தினால் அப்பகுதி மக்களின் எழுச்சியை கட்டுப்படுத்திவிட்ட சிங்களப் படைகளுக்கு யாழ்ப்பாணத்தில் "பொங்குதமிழை" அடக்க முடியாமற்போனது பெரும் ஏமாற்றமே.

எந்தக் காரணங்களிற்காக மாணவர் எழுச்சியை அடக்குவதற்கு படைத்தரப்பு முயன்றதோ, அதே காரணங்கள், படைத்தரப்பினாலேயே வெற்றியடைந்துள்ளது என்பதே உண்மை. ஏனெனில் மாணவர் எழுச்சிப் பேரணியை தம்பாட்டுக்குப் பேசாதுவிட்டிருந்தால், அதுபாட்டுக்கு யாழ்ப்பாணத்துக்குள்









கனடா
பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்விற்கு ஆதரவு தெரிவித்து கனடாவின் ரொறன்ரோ நகரிலும் ஒட்டோவா நகரிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மாணவர்கள் அமைதிப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

ளேயே அமைதியாக நடைபெற்றிருக்கும். சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டியின் நிலையே இப்போது சிங்களப் படைகளிற்கும்.

ஏற்கனவே பல்வேறு தோல்விகளால் விகாரித்துப்போயிருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் முகத்தில், "பொங்குதமிழ்" எழுச்சித் தீயானது மேலும் வடுக்களை ஏற்படுத்தியிருப்பது உண்மை.





இந்த வடுக்களுடனும், அதிலிருந்து வடிகின்ற ஊனங்களுடனும் சிங்களப் பேரினவாதம் சும்மா இருந்துவிடாது. ஏதோ ஒரு வழியிற் பழிதீர்க்கவே அது தருணம் பார்த்திருக்கும் என்பதனை யாழ். சமூகமும், சர்வதேச சமூகமும் விழித்திருந்து நோக்கவேண்டியது காலத்தின்தேவை. ஏனெனில், அதன் பழிதீர்க்கும் படலத்திற்கான ஏராளமான உதாரணங்களைச் சிங் களப் பேரினவாதத்தின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டுவதன் மூலம் பதில் கிடைக்கும்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியிலும், அரசியல்ரீதியிலும் வெற்றிவாகை சூடியிருக்கும் இவ்வேளையில், பொங்குதமிழும் வெற்றி பெற்றிருப்பதானது, விடியலிற்கான விடுதலைப்பாதை உரியமுறையில் செப்பனிடப்பட்டு வருகின்றது என்பது வரலாற்று நிதர்சனம்.

நன்றி: மொறில் தர்மபாலன்
- ஜனவரி 2001 எரிமலை



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# முல்லை முள்ளியவளைப் படுகொலை 16.01.1985



முள்ளியவளைக் கிராமம் முல்லை, மருத நிலங்கள் சூழ்ந்த வளங்கொழிக்கும் பிரதேசமாகவும் பாரம்பரிய கலை, பண்பாடு என்பன சிறப்பாகவுள்ள பிரதேசமாகவும் வவுனியா – முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த அரச படைகள் 16.01.1985 அன்று தைத்திருநாளின் மறுதினமான கால்நடைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துகின்ற (மாட்டுப் பொங்கல்) தினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் முள்ளியவளைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தன.

முள்ளியவளைப் பிரதேச மக்கள் வழமை போலவே அதிகாலைப் பொழுதில் தமது காலைக்கடன்களில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தான் தமது பிரதேசம் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஊடுருவி அங்கிருந்து ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆகிய இரண்டு பெண்கள் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன, இவர்களின் வாழ்விடங்கள் பலவற்றையும் தீக்கிரையாக்கிச் சென்றனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறாவினர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு பதினேழு பேரும் உயிரிழந்து விட்டார்கள் எனும் செய்தி பரவத்தொடங்கியது.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தன. உறவினர்கள் தமது உறவுகளை ஒவ்வொரு வாகனங்களாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒரு வாகனத்தில் மட்டும் சைக்கிள்கள், பொருட்கள் ஏற்றப்பட்டு இராணுவத்தினர் சென்றதைக் கண்ட உறவினரால் அதற்குள் உயிரிழந்தவர்கள் உடலங்கள் இருப்பதை அறியமுடியாமற் போனது.

அன்றையபொழுது மறைந்து மறுநாளும் தமது உறவினர்கள் வீடு திரும்பாத நிலையில் ஊரிலிருந்த் சமாதான நீதவான் திரு.தியாகராசா என்பவருடன் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த போது அங்கு இறந்தவர்களின் உடல்கள் வீசப்பட்டிருந்தன. அங்கே வீசப்பட்டிருந்த உடல்கள், உடைகள் அற்றும், கைகள், கால்கள், தலைகள் என்பன துண்டிக்கப்பட்டும், உடல்களில் காயங்கள் பல ஏற்படுத்திக் கொலை செய்யப்பட்டும் இருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. அவற்றுள் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பணிப் பெண்ணின் இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் குழந்தை சுமந்த வயிற்றுப் பகுதி எரிக்கப்பட்டு சிசு பரிதாபமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும் காண முடிந்தது.

மற்றைய பெண்ணின் உடல் சிகரட் சூட்டுக் காயங்களுடன், அடையாளம் தெரியாத வகையில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்ததையும் கண்ணுற்று அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். உறவினர்கள் அவ்உடல்களை இராணுவத்தினரிடமிருந்து தமக்கு தருமாறு கேட்ட வேளை கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளென கையொப்பமிட்டுத் தந்தால் மட்டுமே உடல்களை தருவோம் எனக்கூறி இராணுவம் மிரட்டியபோது மக்கள் அதனை ஏற்க மறுத்தனர். இதனால் இராணுவத்தினர் உடல்களை மக்களிடம் ஒப்படைக்காது தாமே அவ் உடல்களுக்குத் தீயிட்டனர்.

***இச்சம்பவத்தில் தனது கணவரையிழந்த தவரத்தினம் திலகவதி சம்பவம் பற்றிக் கூறியதாவது:***

“அதிகாலை 4.30 மணியளவில் வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் சில பெண்களோடு எனது கணவர், மகன் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன், சிலரது வீடுகளை எரித்து சொத்துக்களையும் சூறையாடினர். பின் கைது செய்தவர்களை அருகிலிருந்த காடு நோக்கிக் கொண்டு சென்றனர். பின் பல சூட்டுச் சத்தங்கள் கேட்டது. அதன்பின் இராணுவத்தினரின் வாகனங்கள் முல்லைத்தீவு நோக்கிச் சென்றன. அதில் கொல்லப்பட்டவர்களின் உடல்களையும் படுகாயமடைந்தவர்களின் உடல்களையும் அதன்மேல் சைக்கிள்கள் மற்றும் பொருட்களையும் ஏற்றி எடுத்துச் சென்றனர்.

அடுத்தநாள் சமாதான நீதவானுடன் முல்லைத்தீவு சென்று பார்த்தபோது எல்லோரும் படுகொலை செய்யப்பட்டு உடலில் ஒரு துணி இல்லாத சடலங்களாகக் கிடந்தது. அவர்களது உடலை எடுத்துச் செல்லக்கேட்டபோது அவர்களைக் கொட்டி (புலிகள்) என்று கையெழுத்திட்டாலே கொண்டு போகமுடியும் என்றனர். அவர்கள் எல்லோரும் பொதுமக்கள் தவறாக கையெழுத்திட்டு உடல்களை பெற விரும்பாததால், அங்கு விட்டுவிட்டு வந்தோம்.”

***16.01.1985 அன்று முள்ளியவளைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. நாகரெட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
02. குமாரசாமி விஜயகுமாரி (வீட்டுப் பணி)
03. பிலிப்பையா அன்ரன்யோகராசா (வயது 17 – கடற்தொழில்)
04. தம்பையா விவேகானந்தம் (மாணவன்)
05. மார்க்கண்டு தெட்சணாமூர்த்தி (வயது 19 – கடற்தொழில்)
06. செல்லத்துரை நவரட்ணம் (விவசாயம்)
07. செல்லத்துரை குமாரசாமி (விவசாயம்)
08. சுப்பன் சின்னன்
09. சின்னன் அன்னலட்சுமி (வீட்டுப் பணி)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.

# வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலை 17.01.1989

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேசசெயலர் பிரிவில் எல்லைப்புறக் கிராமமாகக் காத்தார் சின்னக்குளம் அமைந்துள்ளது. இங்கு வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கு அருகிற் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களால் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் நாள்தேறும் பல இன்னல்களை அனுபவித்து வந்தார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் 17.01.1989 அன்று காலை 9:00 மணியளவில் இந்திய இராணுவத்தினர் கிராமத்துக்குள் திடீரென நுழைந்ததை உணராத மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ் இந்திய இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காலை உணவு எண்டுகொண்டிருந்தவர்கள், விவசாய அறுவடையில் ஈடுபட்டிருந்தவர்கள், கார்ப்பிணித்தாய், சிறுவர்கள் என இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காயமடைந்தனர். பல வீடுகள் எரியூட்டப்பட்டன.

***17.01.1989 அன்று வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இராசைய மேகவர்ணன் (44)
02. இராமசாமி மருதமுத்து (-)
03. இராசலிங்கம் முத்தையா (75)
04. குப்பன் சின்னையா (75)
05. கறுப்பழகு சரஸ்வதி (32)
06. தர்மலிங்கம் சுந்தரலிங்கம் (14)
07. மாணிக்கம் செல்லம்மா (60)
08. மீனா சுப்பையா
09. அனுமந்து சுப்பிரமணியம்
10. அழகன் வீரையா
11. பொன்னுச்சாமி கறுப்பையா (36)
12. பெருமாள் மீனா (67)
13. பெருமாள் சின்னதம்பி (22)
14. சுப்பிரமணியம் (54)
15. சுப்பையா சின்னத்தம்பி (-)

காயமடைந்தவர்களின் விபரம்:

1. பஞ்சலிங்கம் நந்தினி
2. பஞுசலிங்கம் தவமணி
3. சின்னமுத்து ஆறுமுகம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



காத்தார் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989



# கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை – 25.01.1986




கிளிநொச்சி மாவட்டத்தின் மையமாக விளங்குவது கிளிநொச்சி நகரமாகும். இம்மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற் காகவும் நகருக்கு வருவதனால், கிளிநொச்சி நகரம் ஒரு முதன்மையான இடமாக இருந்தது. பாடசாலை, சந்தை, தொட ருந்து நிலையம், வைத்தியசாலை மற்றும் கச்சேரி என்பன நகரத்திலே அமைந்திருந்தன.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள விடு தியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நகருக்கு வரும் பொதுமக்களை விசாரித்தல், கைது செய்தல், அச்சுறுத்துதல் எனப் பல வழி களிலும் பொதுமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

1986 ஜனவரி இருபத்தைந்தாம் நாள் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத் தினர் கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கு அருகில் தெற்குப் புறமாக நின்ற பாலை மரங்களுள் ஒளிந்திருந் தார்கள்.

அதேநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த தொடருந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வந்து தரித்து நின்றது. பயணிகள் தொடருந்தில் ஏறிக்கொண்டிருந்த சமயம் மறைந்திருந்த படையினர் திடீரென பட பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண் டனர். மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினார்கள். ஏனையோர் தொடருந்து நிலையத்திற்குள்ளும், தொடருந்தின் இரு புறமும் படுத்துக் கொண்டார்கள். இச் சம் பவத்தில் நான்கு பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்கள்.



இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன், மனைவி யையும் மகனையும் இழந்த சின்னையன் நல்லையா என்பவர் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்:

நான் விவசாயம் செய்து வருகின்றேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இராணுவத்தின் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அக்கராயன் எட்டாம் கட்டையில் ஒரு தேவாலயத்திற் போய் இருந்தோம். அதன்பின்னர் கிடைத்த ஒரு வீட்டில் வசித்து வந்தோம். எனது மனைவி ஆசிரியையாக இருந்ததால் கல்வித் திணைக்களத்திலிருந்து அநுராதபுரம் வேலைமாற்றல் கடிதம் வந்தது தைப்பொங்கல் முடிந்த பின்னர், 1986 ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்கட்கிழமை பேருந்து ஒன்றும் கிடைக்காததால், தொடருந்தில் செல்ல அங்கு வந் தோம்.

அதேநேரம் அங்கு பல இடங்களிலிருந்தும் வந்த மக்களும் நின்றிருந்தார்கள். சரியாக பகல் 12.00 மணியிருக்கும் வாங் குகளில் நாங்கள் இருக்கும்போது சந்தைக்குப் பக்கத்தில் வந்த ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திருவேல் என்பவரை யும் அவரின் தகப்பனான கோழி வியாபாரியையும் சுட்டுவிட்டு தொடருந்துநிலைய வீதியால் வந்தார்கள். அந்த நேரம் நாங்கள் தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஏறும் இடத்தில் நின்றிருந்தோம். இராணுவத்தினர் அனைவரும் தோள்களில் துப்பாக்கியைக் கொழுவியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் பிரயாணம் செய்வதற்காக வந்தவர்கள் என்று பெரிதாகச் சொன் னோம். அப்போது அவர்கள் விரலைக் காட்டி உங்கள் எல்லோரையும் கொல்வோம் என்று சொல்லி முடிக்கு முன் னரே எம்மை நோக்கிப் திடீரென சரமாரியாகச் சுட்டார்கள். அந்த இடம் ஒரே வெளியாக இருந்ததால், நாங்கள் எங்கே செல் வதென்று தெரியாமல் தொடருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டோம். எல்லோரும் அதிலேயே காயப்பட்டார்கள்.

அதன் பின்னர் என்ன நடந்ததென்று எதுவும் தெரியாது. ஒரு மணித்தியாலத்தில் பின்னர் 1.30 மணியிருக்கும் சரியான தாகமாக இருந்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினேன். அந்த நேரம் எனக்கு மேல் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள். அதனால் கை மற்றும் கால்களை எடுக்க இயலாது இருந்தது. எல்லா இரத்தமும் ஓடியதால் காதுகள் எல்லாம் அடைத்திருந் தது. திரும்பவும் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தியபோது எனது ஐந்து வயது மகன் சுவர்க்கரையாக இருந்து எழும்பினார். அவருக்குக் கையில் துப்பாக்கிச் சன்னம் பட்டு கை சிதைந்து போயிருந்தது. மற்றைய பக்கம் திரும்பிப் பார்த்தபோது அந்த மூலைக்குள் என்னுடைய மூன்றாவது மகன் இறந்த ஒரு பெண்ணின் மேல் தொங்கிக்கொண்டிருந்தார். எனது மனைவி எனக்கு நேராக விழுந்து கிடந்தார். ஏனைய மக்கள் ஆங் காங்கே விழுந்து கிடந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. இன்னொரு பக்கத்தில் சாந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவர் காலிற் காயம் பட்டுக் கத்திக் கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன்தான் பானைக் குள்ளிருந்த தண்ணீரை எடுத்துத் தர அதைக் குடித்தேன். அதன் பின்னர் அப்படியே மயங்கிவிட்டேன். அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது.

பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முழித்துப் பார்த் தேன். அதன் பின்பு தான் என்னிடம் வந்த தாதிமார் நடந்தவற் றைச் சொல்லித்தான் எனது மனைவியும் பிள்ளையும் இறந்தது பற்றிக் கேள்விப்பட்டேன். இறந்த எனது மனைவி மற்றும் ஒரு மகனையும் என்னுடனேயே கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், இருவரும் இறந்ததால் உடனடியாக கிளிநொச்சிக்குக் கொண்டு போய் விட்டார்கள். எனது உடம்பெல்லாம் காயம்பட் டதனால் நான் தப்பமாட்டேன் எனப் பலரும் சொன்னார்கள். ஏதோ தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன். என்னால் அவர் களின் மரணச் சடங்கிற்கூடக் கலந்துகொள்ள முடியாத நிலை யில் அவாக்ளின் உடலை எனது மைத்துனர் தான் முறைப்படி அடக்கம் செய்தார்.

இயங்க முடியாத நிலையில் இருந்தேன். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப் பினார்கள். அங்கும் கையும் காலும் கழற்ற வேண்டும் என்றே சொன்னார்கள். பின்பு அதற்குச் சம்மதிக்காததால், நீண்ட நாட் களிற்குப் பின்பு உடல் தேறினேன். இப்பவும் என்னால் ஒரு தண்ணீர் வாளியைக் கூடத் தூக்கமுடியாத நிலையில் கஸ்ரப் படுகின்றேன். அந்தச் சம்பவத்திற்குப் பின்பு என் மகன்மார் தான் என்னைப் பார்க்கிறார்கள். முன்புபோல் வயல் வேலை கள் மற்றும் தோட்ட வேலைகளைச் செய்யவோ முடி யாத நிலையில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வேதனைப படும் போதும் எமதினத்தின் விதியை நினைத்தே கவலைப் படுவேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாந்தபுரத்தைச் சேர்ந்த அரு ணாச்சலம் ஆறுமுகம் சம்பவம் பற்றிக் கூறுகையில்:

என்னுடைய சொந்த ஊரான கண்டிக்குப் போய் 25.01.1986 ம் திகதி திரும்பி வந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கி நின்றேன். அந்த நேரம் இராணுவத்தினர் தொடருந் தில் போவதற்கு நின்ற பொதுமக்கள் மீது திடீரெனச் சுட்டார்கள். தொடருந்து நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிணற்றடியில் நின்ற இரு இராணுவத்தினரே சுட்டார்கள். அப்போது எனக்கு சன்னங்கள் கையிலும் காலிலும் பட்டவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். எழும்ப முயற்சி செய்தபோது என்னால் முடியவில்லை. அப்போது தான் உணர்ந்தேன் எனது இரண்டு கையும் காலும் முறிந்து விட்டதென்று . கண்விழித்துப் பார்த்த போது வைத்தியசாலையிலிருப்பதைப் புரிந்துகொண்டேன். எனது காயத்திற்குச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அடுத்த நாள் விடியற்காலை தான் பூரணமாக நினைவு திரும்பியது. அதன் பின் ஏன் இராணுவத்தினர் எம்மீது சுட்டார்கள் என வினாவிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய படைச் சிப்பாய்க்கு மூளை சுகமில்லை என்று அப்போது கிளிநொச்சியில் இராணுவத் தளபதியாக இருந்த கொப்பெக்கடுவ கூறியிருந்ததாகக் கூறினார் கள். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இவ்வாறு கூறியது தமிழர்களை அழிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

அரசாங்கம் இச்சம்பவம் தொடர்பாகப் பின்வருமாறு தெரி வித்தது.

“மனநோயாளியான படைச்சிப்பாய் சுட்டதில் கிளிநொச்சி தொட ருந்து நிலையத்தில் பொதுமக்கள் பலியானார்கள். இதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோருகின்றது.” என்று கூறியதைத் தவிர அரசாங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

25.01.1986 அன்று கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. சோமசேகரம் ஜெயசீலன் (வயது 16 – மாணவன்)
02. தவராசா சின்னமணி (வயது 40 – வீட்டுப்பணி)
03. தவராசா சுகந்தினி (வயது 11 – சிறுமி)
04. துரைசாமி கதிர்காமு (வயது 18 – நீர்பாசனத் தொழிலாளி)
05. பாண்டியன் சிவகுரு (வயது 26 – வியாபாரம்)
06. குலசேகரம் தங்கம்மா (வயது 64)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மன்னார் வட்டக்கண்டல் படுகொலை – 30.01.1985

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டுக்கரைக்குளக் கரையோரமாக விவசாய நிலப்பரப்புடன் வட்டக்கண்டல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி வட்டக்கண்டல் கிராமத்தில் வசித்து வந்த அப்பாவித்தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் தரைப்படையும், விமானப்படையினரும் இணைந்து தாக்கினார்கள். 1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மதவாச்சி வீதி வழியாக வந்து கட்டுக் கரைக் குளக்கரை வழியாக வட்டக்கண்டல் கிராமத்தில் நிலைகொண்டனர்.



பின்னர் காலை 6.30 மணிக்கு துப்பாக்கி பிரயோகம் செய்த வண்ணம் வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களையெல்லாம் சுட்டும் கூரிய ஆயதங்களாலும் தாக்கினர். அவ்வேளையில் விமானப்படையின் உலங்குவானூர்த்தி மக்கள் குடியிருப்புக்களைத் தாக்கியது. பின்னர் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலைக்குள் பல இராணுவத்தினர் புகுந்து அங்கு கல்விச்செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பதினெட்டுப் பேரைச் சுட்டுக்கொன்றனர்.



இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களையும், வீதிகளில் நடமாடியவர்களையும், ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றிச் சித்திரவதைக்கு உள்ளாக்கிச் சுட்டார்கள். பின்னர் வீடுகளினுள் புகுந்து தனித்திருந்த பெண்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள் இராணுவத்தினர் ஆறு மணித்தியாலத்திற்கு மேலாக மக்கள் மீது நடாத்திய தாக்குதல் பிற்பகல் 2மணிவரை தொடர்ந்தது பின் சடலங்களில் சிலவற்றை பொதுமக்களைக் கொண்டு பொது மக்களின் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இராணுவம் கிராமத்தினை விட்டுச் சென்றதன் பின்னர் அயற்கிராமத்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை தேடியெடுத்து அடக்கம் செய்ததுடன், காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கும் எடுத்துச்சென்றனர். இராணுவத்தின் திட்டமிட்ட பொதுமக்கள் மீதான தாக்குதலினால் ஐம்பத்திரண்டு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

***சம்பவத்தை நேரில் கண்ட மன்னார் வட்டக்கண்டலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவிக்கையில்:***

“1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதியன்று காலை



மன்னார் வட்டக்கண்டல் படுகொலை – 30.01.1985

6.00 மணிதொடங்கி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தம் கேட்டபடியிருந்தது. எங்களுடைய வீடு பிரதான வீதியிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்து ஓடிவந்த மக்கள் என்ன காரணமெனத் தெரியாது இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு வருகிறார்கள் எனக் கூறியவாறு எங்கள் வீதி வழியாக ஓடினார்கள். பின்னர் அவர்களுடன் சேர்ந்து நாங்களும் ஓடினோம். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை அதிபரும் இரண்டு ஆசிரியர்கள் மற்றும் வீதியாற் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற் பங்குகொண்ட இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து யு – 14 என்று சொல்லப்படும் மன்னார் – மதவாச்சி வீதியால் கட்டுக்கரைக்கு வந்து பெரிய உடைப்பு அணைக்கட்டைக் கடந்து வண்டக்கண்டற் கிராமத்திற்கு வந்து இந்த அட்டூழியங்களைப் புரிந்தனர். இச்சம்பவத்தின் போது மொத்தமாக நாற்பத்தெட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரினதும் மரணப் புத்தகங்களில் மரணத்திற்கான காரணம் இராணுவத்தால் சுடப்பட்டு இறப்பு என்றே பதியப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.”

***30.01.1985 அன்று வட்டக்கண்டல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. பொன்னர் பொன்னப்பன - ராசா (வயது 30 – மீன்பிடி)
02. சந்தான் தொம்மைமியேஸ் (வயது 28 – விவசாயம்)
03. சவிரியான் அல்போன்ஸ்பறுலா (வயது 25 – விவசாயம்)
04. மடையப்பன் பாண்டியப்பன் (வயது 24 – கமம்)
05. முத்தண்ணதேவர் நடராசா (வயது 39)
06. முருகேசு தம்பிப்பிள்ளை (வயது 55)
07. இராசு செல்வராசா (வயது 30 – சாரதி)
08. கன்னிக்கவுண்டர் சுந்தரலிங்கம் (வயது 23 – விவசாயம்)
09. கறுப்பையா ஜெயரத்தினம் (வயது 25)
10. பிறஞ்சி கைத்தான் (வயது 27 – கமம்)
11. பிறஞ்சி சாமிநாதன (வயது 37 – கமம்)
12. திருமால் ராமச்சந்திரன் (வயது 26)
13. மனுவல் பீற்றர் சாள்ஸ் (வயது 45)
14. அலெக்சாண்டர் பர்ணாந்து (வயது 72)
15. அருணாசலம் சுந்தரமூர்த்தி (வயது 45)
16. செபமாலை பெனான்டோ (வயது 21– வியாபாரம்)
17. செல்லையா இராமசாமி (வயது 35 – விவசாயம்)
18. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 20 – விவசாயம்)
19. செல்லையா இராமசாமி (வயது 30)
20. வெங்கடாச்சலம் தேவராஜ் (வயது 34 – கமம்)
21. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 35)
22. ஞானப்பிரகாசம் செபமாலை (வயது 22 – கமம்)
23. சந்தியோகு அந்தோனி (வயது 40 – கமம்)
24. சுப்பன் பழனி (வயது 42)
25. சுப்பிரமணியம் சண்முகநாதன் (வயது 33 – தொழிலாளி)
26. சின்னையா சேருவராஜன் (வயது 33 – தொழிலாளி)
27. சிறிகோரி ரெட்ணதுரை (வயது 32)
28. ராமன் தங்கராசா (வயது 56)
29. ராமசாமி அற்புதராசா (வயது 19)
30. இராமன் தங்கராசா (வயது 35 – விவசாயம்)
31. இராமச்சந்திரன் தெய்வேந்திரன் (வயது 18 – விவசாயம்)
32. இராமசாமி செல்வராசா (வயது 27 – விவசாயம்)
33. முத்துச்சாமி சத்தியசீலன் (வயது 42 – விவசாயம்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலை 28.01.1987







இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டக் களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு இயற்கைவளம் நிறைந்த பகுதியாக கொக்கட் டிச்சோலை அமைந்துள்ளது. அத்துடன் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி அத்துடன், இறால் வளர்ப்பு என பனவாகும்.

இக்கிராமத்தின் மீது 28.01.1987 இல் சிறீலங்கா இராணுவத்தின் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கொண்ட வெட்டுவான், களுவாஞ்சிக்குடி, வெல்லா வெளி, கல்லடி ஆகிய இடங்களிலிருந்து கவசவாகனங்களுடன் முன்னேறிய இராணு வத்திற் குண்டுவீச்சு விமானங்களும் உலங் குவானூர்திகளும் மேலதிக உதவித் தாக் குதல்களை வழங்க கொக்கட்டிச்சோலை கிராமத்தினுள் நுழைந்த படையினர் அம்மக் களை மிகமோசமாகத் தாக்கிச் சித்திரவதை செய்ததுடன், படுகொலைகளையும் செய்தனர். இதில் குறிப்பாக அமெரிகக் நிதி உதவி, கண் காணிப்புடன் மகிழடித்தீவு இறால் பண்ணை இயங்கி வந்தது. இங்கு பெருமளவு ஏழை மக்கள் வேலை செய்து வந்தனர். அங்கு வேலை செய்த நூற்றுமுப்பத்தைந்து பொது மக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து இறால் பண்ணைக்குள்ளேயே போட்ட தால் இறால் பண்ணை மனித உடல்களை கொண்ட இரத்தப் பண்ணைகளாக காட் சியழித்தது. அத்துடன் கொக்கட்டிச்சோலை அரிசியாலையில் தஞ்சமடைந்திருந்த இருபத் துநான்கு பேரும் சுட்டுப் படுகொலை செய் யப்பட்டனர்.

இதில் 12 வயது நிரம்பிய 7 சிறுவர்களும் உள்ளடங்குவார்கள். இதில் குறிப்பாக பன் னிரண்டு வயது தொடக்கம் நாற்பது வயதிற் குட்பட்ட இருநூறிற்கு மேற்பட்டவர்கள் அடை யாளங் காணப்பட்டு சித்திரவதைகளின் பின் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட் டனர். அத்துடன் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

மேலும் அம்பிலாந்துறை என்ற கிராமத்தில் நாற்பத்தைந்து பொதுமக்களை கொன்ற இராணுவத்தினர் அவர்களின் உடல்களை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் உட்பட பல தொடர் படுகொலைச் சம்பவங்கள் 28,29,30 .01.1987 ஆகிய மூன்று நாட்களிற்குள்ளும் கொக்கட்டிச்சோலையிலும் அதன் அயல் கிராமங்களிலும் நடந்தேறியது.

***28.01.1987 அன்று கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இ. உதயகுமார்
02. இ.கமலாதேவி
03. இ.கணேசமூர்த்தி
04. இ.தங்கம்மா
05. இ.தங்கவேல்
06. இ.மேகலிங்கம்
07. இ.வேலாப்பொடி
08. இ.சிவபாதம்
09. இராசரெத்தினம் தம்பிராசா
10. டி.ராஜினி
11. ந.இன்பராசா
12. ந.குழந்தைவேல்
13. ந.யோகேஸ்வரி
14. ந.கோபாலப்பிள்ளை
15. ந.சுப்பிரமணியம்
16. ந.சுவாஜினி
17. நா.விநோதகுமாரி
18. கு.ரூபவதனி
19. க.யுகாமினி
20. க.உலகநாதன்
21. க.நாகராசா
22. கு.நிசாந்தன்
23. கு.நறுமலாதேவி
24. க.நல்லம்மா
25. க.கந்தையா
26. அ.சத்தியானந்தம்
27. க.கந்தப்பெருமாள்
28. க.கஜேந்திரன்
29. க.கிருஸ்ணபிள்ளை
30. க.பாலச்சந்திரன்
31. க.புவனேஸ்வரி
32. க.பரமேஸ்வரி
33. க.மலர்விழி
34. க.கோபாலப்பிள்ளை
35. க.தெய்வநாயகம்
36. க.சோமசுந்தரம்
37. க.சௌந்தரராசா
38. க.சௌந்தரராஜன்
39. க.ஞானமுத்து
40. கு.சந்திரசேகரம்
41. கு.சுகந்தன்
42. க.சுப்பிரமணியம்
43. கு.சாந்தலிங்கம்
44. கு.சுதாகரன்
45. க.சுவேஜினி
46. க.சின்னத்தம்பி
47. கு.சிவமணி
48. கு.விகாந்தன்
49. க.ரவீந்திரன்
50. கதிர்காமத்தம்பி தயானந்தம்
51. கி.கந்தசாமி
52. கி.கந்தவனம்
53. கி.குமாரதாசன்
54. கி.பாலிப்பொடி
55. கி.பாலசுந்தரம்
56. கி.பவான்
57. கி.பொன்னுத்துரை
58. கி.றோமிகரன்
59. கி.சின்னமுத்து
60. கி.சிவஞானசிவம்
61. ப.கங்கா
62. பு.வேணுகரன்
63. ப.சண்முகம்
64. ப.சண்முகராசா
65. பா.நடராசா
66. பா.அம்பிகைபாலன்
67. பா.சுதாகரன்
68. த.இளங்கோ
69. த.இராசேந்திரன்
70. த.கனகசிங்கம்
71. த.முருகேசு
72. த.சந்திரசேகரம்
73. த.சசிகரன்
74. மு.நடேசன்
75. ம.பாலசுப்பிரமணியம்
76. மு.சத்தியசீலன்
77. ம.சிதம்பரநாதன்
78. மு.வசந்தராசா
79. மா.நல்லரத்தினம்
80. மா.கணபதிப்பிள்ளை
81. மா.பரஞ்சோதி
82. மா.மகேஸ்வரி
83. மா.ஜெயந்திமலர்
84. மா.செல்லத்தம்பி
85. அ.குணமணி
86. அ.பாக்கியராசா
87. அ.பிரேமசசிகலா
88. அ.பிரேமலதா
89. அ.தர்சனா
90. அ.கோமணதாஸ்
91. அ.ரேவதி
92. அ.சந்திரப்பிள்ளை
93. யோ.சீதேவிப்பிள்ளை
94. கே.நடராசா
95. கே.அமிர்தலிங்கம்
96. கே.சௌந்தரராசா
97. கோ.நாராயணப்பிள்ளை
98. கோ.அமிர்தராசா
99. செ.பவானி
100. சோ.இளந்திரையன்
101. சோ.கபிலன்
102. சோ.மாணிக்கப்பொடி
103. சோ.விஜயலிங்கம்
104. வே.இராசையா
105. வே.நல்லதம்பி
106. வே.அரியநாயகம்
107. வே.விசுமாப்பொடி
108. வே.வள்ளியம்மை
109. வேலாச்சி இராசையா
110. ஞ.நடேசம்
111. ஞா.குருகுலசிங்கம்
112. சு.இராஜேஸ்வரி
113. சு.குணதுங்கா
114. ச.தியாகராசா
115. ச.மகேஸ்வரன்
116. ச.சந்தோசம்
117. ச.சுதாகரன்
118. சு.சிவனேசராசா
119. சு.ஏகாம்பரம்
120. சி.புவனேஸ்வரி
121. சீ.புவனேசசிங்கம்
122. சி.தில்லைநாயகம்
123. சி.மயில்வாகனம்
124. சி.மயிலுப்பொடி
125. சி.மகேந்திரமூர்த்தி
126. சி.யோகநாதன்
127. சி.வேலாப்பொடி
128. சி.லவன்
129. வ.ஜீவரத்தினம்
130. வ.குழந்தைவேல்
131. வ.முத்துத்தம்பி
132. வ.யோகேஸ்வரன்
133. வ.விஜயசிங்கம்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# புதுக்குடியிருப்புச் சந்தி படுகொலை – 30.01.1991




முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து ஏறக்குறைய இருபது கி.மீ. தூரத்தில் புதுக்குடியிருப்புச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் ஒட்டுசுட்டான் முள்ளியவளை, முல்லைத் தீவு, பரந்தன் சந்திகள் சந்திக்கின்றன. புதுக்குடியிருப்பு ஒரு நகரப்பகுதியாகும்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1980களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைநகர், மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, தென்னமரவடி போன்ற கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள். 1991 ஆம் ஆண்டில் ஆயிரத்து ஐந்நூறிற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்தனர்.

1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் சிறீலங்கா சிங்கள விமானப்படையின் இரண்டு "மொம்பர்" குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகள் புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் குண்டு வீசித்தாக்கின. குண்டுகளில் பெருமபாலானவை சந்திப் பகுதியிலும், அதன் அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் சந்தியெங்கும் ஒரே புகைமண்டலம். குண்டுவீச்சு நடந்துமுடிந்த அதேசமயம் அப்பகுதிக்கு விரைந்த, மக்களும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட காயப்பட்ட பொதுமக்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பினர். இறந்து இருபது பேரினது உடல்கள் மிட்கப்பட்டன. எங்கும் ஒரே அழுகுரல்கள் இரவாகிக் கொண்டிருந்தமையால் இறந்தவர்களை உடனடியாக மீட்கமுடியவில்லை. காயமடைந்தவர்களில் ஆபதத்தான நிலையிலிருந்தவர்கள் அன்றிரவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூவர் கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழ்ந்தார்கள்.

அடுத்தநாள் காலை மீண்டு மக்களும், மனிதநேய அமைப்புக்களும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் தேடுதல் மேற்கொண்டபோது, மேலும் ஐந்து பேரினது இறந்த உடல்கள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலால் மொத்தம் இருபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தும், ஐம்பதிற்கும் மேலானோர் காயமடைந்தும் இருந்தனர். சிங்கள விமானப் படையினரது பொதுமக்கள் மீதான தாக்குதலால் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி ஒரு மாதத்திற்கும் மேலாக சோகமயமாகவே காணப்பட்டது.

இறந்தவர்களில் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேவடிவந்த எட்டுப் பொதுமக்களும் அடங்குவர். இத்தாக்குதலில் உயிர்காக்கப் காப்பகழிக்குள் பாய்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் பிள்ளை பிறந்ததிலிருந்து நரம்பு பாதிக்கப்பட்டவராக நடக்க முடியாதவராகத் தற்போதும் இருக்கின்றார்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வந்த வி. சித்திரா தேவி தெரிவிக்கையில்...

"திருமலை சொந்த இடம். இடம்பெயர்வு காரணமாக புதக் குடியிருப்பு கிராமக்கோடு முகாமில் வசித்து வந்தோம். 1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் வந்த விமானப்படை பொம்பர் விமானங்கள் பல குண்டுகளைப் போட்டன. இதன் போது நகர்ப்பகுதியும் சந்தையும் சில கடைகளும் நாசமாகின. எங்கும் ஒரே புகை மண்டலம். நான் எமது ஊரைச் சேர்ந்த அசோக் என்பரைத் தேடிச் சென்றபோது அவர் நடத்தி வந்த சைக்கிள் கடையில் அவர் பிணமாகக் கிடக்கக் கண்டேன். இதில் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களாவார். இச்சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த எனது மகள் இன்று வரையும் வாய் பேசமுடியாதுள்ளார்."

30.01.1991 அன்று புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. இராசையா பத்மராசா (அரச ஊழியர் - 37)
2. கந்தையா ஜெகதீஸ்வரன் (மாணவர் - 14)
3. கந்தசாமி கவிதா (மாணவி - 14)
4. கதிர்காமச்சந்திரன் (கடற்றொழில் - 26)
5. கிருஸ்ணசாமி மகேந்திரராசா (மாணவர் - 20)
6. பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் (தனியார்தொழில் - 21)
7. பசுபதி அரிகரன் (மாணவர் - 14)
8. மயில்வாகனம் சிறீகந்தன் (தனியார்தொழில் -25)
9. முருகேசு சித்திரவேலு (கடற்றொழில் - 65)
10. ஜெயநாதன் சிவபாக்கியம் (தனியார்தொழில் - 36)
11. செல்லையா நாகமணி (60)
12. சுப்பிரமணியம் சிவானந்தம் (விவசாயம் - 59)
13. சின்னசாமி கந்தசாமி (தனியார்தொழில் - 46)
14. சின்னவன் கிருஸ்ணபிள்ளை (விவசாயம் -52)
15. சிவராஜசேகரன் கலைச்செல்வி (மாணவி – 19)
16. சிவராஜசேகரன் கலைச்செல்வன் (மாணவன் - 19)
17. வீரகசத்தி கிட்டினப்பிள்ளை (விவசாயம் - 70)
18. வீரசிங்கம் திலீப்குமார் (மாணவன் - 19)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மானிப்பாய் படுகொலை 16.01.2006

யாழ்ப்பாணம் மானிப்பாய்ப் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டு கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்தக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைந்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சராமரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்த சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில்ஏறித் தப்பிச்சென்று விட்டனர். உயிரிழந்த முத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினர். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் வேசையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்து குறிப்பிடத்தக்கதாகும்.

16.01.2006 அன்று இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. போஜன் அர்த்தநாரீஸ்வரி (51)
02. தியாகேஸ்வரன் ரேணுகா (30)
03. போஜன் சண்முகா (24)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம்

01. நாகேந்திரம் போஜன் (55)
02. நாகேந்திரம் உல்லாசனன் (26)







# தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்திப் படுகொலை – 16.01.2006

2006 ஜனவரி 29 ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னொரு பெண்ணான எஸ் டோசினி என்பவரும் கடத்தல் காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர் களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுவித்திருந்தது. இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறீலங்கா அரசாங்கத்தால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008 ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறியுள்ளனர்.

***தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்திக் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. காசிநாதர் கணேசலிங்கம் (53)
02. தங்கராசா கதிர்காமர் (43)
03. தனுஸ்கோடி பிறேமினி (25)
04. தர்மராஜ் வசந்தராஜன் (24)
05. சண்முகாநதன் கஜேந்திரன் (24)
06. கைலாசபிள்ளை ரவீந்திரன் (26)
07. அருள்நேசராசா சதீஸ்கரன் (23)




# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேச செயலர் பிரிவில் மடு என்னும் கிரமாம் அமைந்துள்ளது இங்கு இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரையித் தளமாகவும் விளங்குகிற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகிறது .இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்களாக, மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர் .

இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்கள்.

2007 நவம்பர் 13 ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு கூராய் கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்கு சென்ற பின்னர் அங்கு 50குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தவீரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள். 5 கிலோ மிற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த மன்சின்னப்பாண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேருந்திலேயே சென்று வருவார்கள். இங்கு பாடாசலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக்குத் தனியாக என பேரூந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேருந்திலேயே பயணிப்



பார்கள்.

அவ்வாறே 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாளும் வழமை போல் பேரூந்தில் சென்ற சிறுவர்கள் பிற்பகல் பாடசாலை முடிந்ததும் இலுப்பைக் கடவையிலிருந்து மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதே பேரூந்தில் ஆனந்தமாக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பேரூந்து மடுவை அண்மித்ததும் சரியாக 2.30 மணியளவில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் இப் பேரூந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 09 பாடசாலைச் சிறார்கள், 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவியாளர், 01 பேரூந்தின் ஓட்டுனர், 01 பேருந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுனர் என 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங்கலாக 21 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலுள்ள இராணுவத்தினர் அப் பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப் பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் அங் கிருந்து உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர். அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர் களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஜெனிஸ்ரன் பீரிஸ் என்ற சிறுவன் பெப்ரவரி 03ம் நாள் உயிரிழந்தார். மேலும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பாடசாலை அதிபர் பெப்ரவரி 05ம் நாள் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

29.01.2008 அன்று இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின்

பெயர் விபரம்

01. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் புறுனோ கொண்ஸ்ரன்ரயின் - 13 (மாணவன்)
02. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் பிறிற்ரோ கொண்ஸ்ரன்ரயின் - 15 (மாணவன்)
03. செல்வசிங்கம் யூட்கொஸ்ரன் - 15 (மாணவன்)
04. செல்வசிங்கம் யூட்கொலிண்டன் - 12 (மாணவன்)
05. ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி 15 மாணவி
06. சூசையப்பு சாம்சன் சொய்சா - 13 (மாணவன்)
07. சுாந்தன் பெனாட் றோஜ் - 16 (மாணவன்)
08. ஆந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன் பீரிஸ் - 12 (மாணவன்)
09. பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ - 11 (மாணவன்)
10. பத்பராசா பேனாட் ஜெனார்த்தனன் - 12 (மாணவன்)
11. இமானுவேல் குணசிங்கம் அன்ரன் டெஸ்மன் - 16 (மாணவன்)

# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



12. ஞானப் பிரகாசம் ஜோன் மில்டன் - 16 (மாணவன்)
13. அன்ரனி சதீசன் - 11 (மாணவன்)
14. செபமாலை மேரியோசப்பின் - 31 (ஆசிரியர்)
15. ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி - 37 (பாடசாலை ஊழியர்)
16. கிருபைராசா ஜெராட் ஞானகரன் - 29 (பேரூந்து ஓட்டுனர்)
17. சூசையப்பு லெம்பேட் ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட் - 23 (நடத்துனர்)
18. க.சண்முகசுந்தரம் - 61 (ஓட்டுனர்)
19. திருமதி. லேம்பேட் - 51 (அதிபர்)
20. விமலநாதன் றீத்தம்மா - 33 (தாதி)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்:

1. கிருசாந்த் - 08 (மாணவன்)
2. ற.பியுலின் - 09 (மாணவன்)
3. ஜெனோஸ்டிகா – 12 (மாணவி)
4. தர்சனா – 13 (மாணவி)
5. டியுலஸ் - 15 (மாணவன்)
6. ரஞ்சன் ராஜசூரியர் யுடக்சியா றூப்ளின் - 11 (மாணவி)
7. பிரான்சிஸ் சேவியர் மதுசாலினி – 16 (மாணவி)
8. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் மேரிகொண்சீற்றா – 16 (மாணவி)
9. அனித்தா – 16 (மாணவி)
10. ற. தனுசிகா – 16 (மாணவி)
11. ரெசிற்றா – 38 (ஆசிரியர்)
12. துசிதா – 35 (ஆசிரியர்)
13. நிர்மலா றஞ்சினி – 36(ஆசிரியர்)
14. குணசீலி – 45 (ஆசிரியர்)
15. ஞானசூரியர் - 35 (அஞ்சல் ஊழியர்)
16. ஞானசூரியர் ஜசிந்தா – 34 (வீட்டுப்பணி)
17. அந்தோனி பீரிஸ் போனா பீரிஸ் - 22 (வீட்டுப்பணி)
18. பாக்கியநாதன் - 60
19. இன்னுமொருவர் (?)







**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# 2024; வெற்றி ஆண்டா? தோல்வி ஆண்டா?

31.01.2024




கடந்த 24ஆம் திகதி இரவு பதினோரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன், மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது. 42 வயதான ஒரு குடும்பஸ்தர் கல்லடி பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார். ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தத்தளித்திருக்கிறார். படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். போலீஸ் அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு ஏழை மேசன். ஐந்து பிள்ளைகளின் தந்தை. கட்டிடப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அவருக்கு தொழில் இல்லை. நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார். எனவே, வாழ்க்கை வெறுத்துப் போன அக்குடும்பத் தலைவர், இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது. இதுதான் நாட்டில் ஆண்டு இறுதி நிலவரம்.

நாட்டில் நத்தார் மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம். டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நாத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எனினும் ஒரு கிழமைக்கு பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாய்க்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறையவில்லை. கூடியது. ஒரு முட்டை 60ரூபாய். இம்முறை பெரும்பாலான எழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ்தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன. வழமை யாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வ துண்டு. தைப் பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம் முறை விலை உயர்வு அசாதாரணமாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாயிலிருந்து 2000 ரூபாய்வரை போனது. வெங்காயம் தக்காளியின் விலைகளும் அதிகம். சிங்கள யூ டியூப்பர்கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொளிகளை வெளியிட்டார்கள். அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொளியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறு மதிதான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள். இப்படித்தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

புதிய ஆண்டில், அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க உள்ளது. இருபது ஆண்டுகளில், ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது. புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தில் பதிந்து வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும். அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50,000 ரூபாய்க்குக் கூடாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண் டனைக்குரிய குற்றம் என்று ஒரு செய்தி சமூக வலைத்தளங் களில் அதிகமாகப் பரவி வருகிறது

புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக மட்டும் அமையப் போவதில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம். ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும். ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல். ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.



இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப் படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள். நெற் பயிர் களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச் சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடியவில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

நாடு இப்போதுள்ள நிலையில்தமிழரசியல் இப்போதுள்ள நிலை யில்; தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா? என்று ஒரு நண்பர் கேட்டார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ்மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்று தரவில்லை. அதற்கு அதன் தலைமைதான் காரணமா? ஒரு புதிய தலைமை கிடைத்துவிட்டால், தமிழரசுக் கட்சி அதி சயங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திவிடும் என்று எதிர்பார்க்கலாமா? என்றும் அவர் கேட்டார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகாலத் தோல்வியின் விளைவுகளே. அந்தத் தோல்விக்கு எல்லாருமே கூட்டுப்பொறுப்பு. இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப்பொறுப்பு. தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப்பெரிய கட்சி அது என்ற அடிப்படையில், அக்கட்சியின் தோல்விதான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம். அக்கட்சியின் எல்லா மூத்த தலைவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இவர்களில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழரசியலை வெற்றிப்பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புக்கள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த 15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக் கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது, அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில் மூத்த கட்சி என்று அடிப்படையில், அதற்குரிய பக்குவத்தோடு பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சி நடந்து கொள்ளவில்லை.

தன்னுடைய பெயருக்குத்தான், தன்னுடைய சின்னதுக்குத் தான் தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத் தடியை தேர்தலில் முன்னிறுத் தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார்கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது. அதனால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில்தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் அது கருதியது. அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்தது; புறக்கணித்தது; ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது. விளைவாக, ஐக்கியம் உடைந்தது; கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடை வுகள் சிதைவுகள் உருவாகிவிட்டன. எனவே ஒரு மூத்த பழம் பெரும் கட்சியின் தலைவராக வரப் போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதன்பின், அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும். எல்லாருமே சாஸ்ரியைத்தான் கேட்கின்றார்கள். ஆனால் யாரிடமாவது சமஸ்ரியை அல்லது அதைவிட உயர் வான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிவரைபடம் உண்டா? தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலப் பெயர் சமஸ்ரிக் கட்சி என்பது தான். ஆனால் செல்வநாயகம் காலத்தில் இருந்து இன்றுவரை யிலும் 73 ஆண்டுகளாக சமஸ்ரியைப் பெற முடியவில்லை. கட்சியின் புதிய தலைமை அதற்குரிய வழிவரைபடத்தை தெளிவாக முன்வைக்குமா?

அந்த வழிவரைபடத்தின் அடிப்படையில் தமிழரசியலை வழிநடத்தத் தேவையான தகைமை; கொள்ளளவு; தியாக சிந்தை; விசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு? அப்படி ஒரு தலைவரிடம் எல்லா தகமைகளும் இல்லையென்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளு மைகள் இணைந்த இணைத்தலமையை உருவாக்கலாம்.




அதுதான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழி. இது தொடர்பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாக காட்டியிருக்கிறார். தமிழர் விடு தலைக் கூட்டணிக்குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அக்கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி. அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராக கருத முற்பட்டதன் விளைவாகத்தான் போட்டோ போட்டிகள் ஏற் பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத் தலைமைகளை ஏற் றுக் கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009 க்குப்பின் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இணைத் தலைமைகளைக் கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இணைத் தலைமையை ஏற்றுக்கொள்வது என்பது, தன்னிடம்



இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வதுதான். சட்டப் புலமை, ஆங்கில அறிவு போன்ற தகுதிகள் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவை அல்ல. போராட்டப் பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்கப் போதுமானவையல்ல. 2009க்குப் பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக, பண்புருமாற்றத்திற்குத் தேவையான தகைமைகள் அதிகம்



வேண்டும். பண்புருமாற்றம் என்பது கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்து; தமிழ்த் தேசிய முகமூடி அணிந்து; நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல.

ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசிய லுக்குத் தேவையான; பிராந்திய மற்றும் பூகோள நிலைமை களைப் பொருத்தமாகக் கையாளத் தேவையான; புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கி; புதிய மாற்றங்களுக்கு தயாரான் தலைமைகளே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழ ரசுக் கட்சி அதற்குத் தயாரா?

2023முடியும்போது காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக் கான போராட்டம் 2500ஆவது நாளைக் கடந்திருக்கிறது. மயிலத்தமடுவில் மேச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் நூறாவது நாளைக் கடந்திருக்கிறது. சமஷ்ரிக் கட்சி அதாவது தமிழரசுக் கட்சி சமஸ்ரியை அடையத் தவறிய 73ஆவது ஆண்டு கடந்திருக்கிறது. புதிய ஆண்டு தமிழரசுக் கட்சியின் 74ஆவது தோல்வியாண்டாக அமையுமா? அல்லது, கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தோல்வியில் இருந்து கற்றுக்கொண்ட ஆண்டாக அமையுமா?

நன்றி: நிலாந்தன்





JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றிற்கும், பண்பாட்டிற்கும் புதிய முகவரியை தேடித்தந்திருக்கும் சிவபூமி அருங்காட்சியகம்!

–பேராசிரியர். ப. புஷ்பரட்ணம் –

யாழ்ப்பாண நுழைவாயிலான நாவற்குழியில் 25.01.2020 அன்று திறந்து வைக்கப்பட்ட சிவபூமி யாழ்ப்பாணம் அரும் பொருள் காட்சியகத்தின் ஆரம்ப நிகழ்வை ஈழத்தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இடம்பெறப்போகும் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகப் பார்க்கிறேன். இவ்வருங்காட்சியகத்தின் மூலம் எம் சந்ததியினரால் வளர்க்கப்பட்டு எம்மோடு வாழ்ந்து வரும் பாரம்பரிய மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் அடுத்து வரும் சந்ததியினருக்கு கையளிப்பதற்கு வழியேற்படுத்தப்பட்டிருக்கின்றது. மூன்று தளங்களில் அமைக்கப்பட்ட இவ்வரும்பொருள் காட்சியகத்தில் வடஇலங்கை மக்களின் பூர்வீக வரலாற்று அடையாளங்கள், மரபுரிமைச் சின்னங்கள், பயன்பாட்டிலிருந்து மறைந்து போகும் பாரம்பரிய பாவனைப் பொருட்கள், தமிழ் மக்களின் கடந்தகால வரலாற்றையும், பண்பாட்டையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட உள்ளன. இவற்றைப் பார்வையிடுவோருக்கு எமது சந்ததியினர் எங்கிருந்து வந்தார்கள், எங்கே போகின்றார்கள், எங்கே போக வேண்டும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகாண வழிபிறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் தமிழ் மக்களின் விலைமதிக்கமுடியாத சொத்து மட்டுமல்லாமல் அதை தூரநோக்குடன் கடின உழைப்பால் உருவாக்கித் தந்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாகும்.




தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஒரு முழுமையான அருங்காட்சியகம் வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவாகும். 1971 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் கந்தரோடையில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த பல நூற்றுக் கணக்கான தொல்பொருட்ச் சின்னங்கள்வெளிவந்தன. அவற்றைப் பார்வையிட்ட அன்றைய அரச அதிபர் போல் பீரிஸ் அநுராதபுரத்திற்கு அடுத்த புராதன நகரம் கந்தரோடை எனக் குறிப்பிட்டு இம்மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க தமிழர் ஒருவரைத் தொல்லியல் ஆணையாளராக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். 1940 ஆம் ஆண்டுக்குரிய பிரித்தானியர் கால ஆவணத்தில் சாவகச்சேரி பழைய நீதிமன்றத்தின் கீழ் புதையுண்டிருந்த புராதன ஆலயத்தின் அழிபாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திக் காட்டியது. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த பத்திரிகைகள், தமிழர்களின் மரபுரிமைகள் கவனிப்பாரின்றி அழிவடைந்து வருகின்றன. பணத்திற்காக அவை பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுக்கப்பட்டன. இந் நிலையில் 1970 களில் பேராசிரியர் கா.இந்திரபாலா, வி. சிவசாமி, திரு.ஆ.சிவனேசச்செல்வன் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பில் ஆர்வத்துடன் இணைந்து கொண்ட ஆசிரியர்களான பொன்னம்பலம், திருவள்ளுவர், நிலஅளவையாளர் சேயோன், பூநகரி உதவி அரசாங்க அதிபர் கிருஷ்ணமூர்த்தி, கலைஞானி, குரும்பசிட்டி கனகரட்ணம் போன்ற பெரியவர்கள் தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிவதிலும், பாதுகாப்பதிலும் ஆர்வத்துடன் பணியாற்றினர் அவர்களின் கண்டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பல்கலைக்கழக மட்டத்திலும் சில ஆய்வுகள் வெளி வந்துள்ளன. ஆயினும் மரபுரிமைச் சின்னங்களைச் சேகரித்த பலர் இன்று அமரத்துவம் அடைந்து விட்ட நிலையில் அம் மரபுரிமைச் சின்னங்களுக்கு என்ன நடந்ததென்பதை யாருமே அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. 2009 க்குப் பின்னர் முன் பொருபோதும் இல்லாத அளவிற்கு வடஇலங்கை மரபுரிமைச் சின்னங்கள் தென்னிலங்கைக்கும், பிற நாடுகளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 2010-2011 காலப்பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடுவீடாகச் சென்று குறைந்த விலையில் மரபுரிமைச் சின்னங்களைக் கொள்வனவு செய்த சம்பவங்களும் உண்டு. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் இன்றும் அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் உள்ள கடைகளில் வெளிநாட்டவருக்கு உரிய விற்பனைப் பொருட்களாக உள்ளன. கடந்த வாரத்தில் வட இலங்கையில் இருந்து அமெரிக்காவூக்கு கடத்தப்பட இருந்த இரு கோடி ரூபா பெறுமதியான மரபுரிமைச் சின்னங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இவ்வாறு எமது இனத்தின் மூலவேர், இன, மத அடையாளங்கள், பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் எம்கண் முன்னேயே கடத்தப்பட்டும், அழிவடைந்தும் வருவதை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கெல்லாம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விழிப்புணர்வும், அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிப்பதற்கான அருங்காட்சியகங்கள் இல்லாதிருப்பதுமே முக்கிய காரணங்களாகும். இவற்றைச் செய்து கொடுக்க அரச அமைப்புக்களோ, பொது நிறுவனங்களோ முன்வரவில்லை. தென்னிலங்கையைப் போல் இங்குள்ள பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் இவற்றைச் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும் தெரியவில்லை. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரு கனவாகவே இருந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது அந்தக் கனவுக்கு சிவன் அருள் கிடைத்து விட்டது. அது தனி மனிதனாக இருந்து அல்லும் பகலும் உழைத்த கலாநிதி ஆர் .திருமுருகன் வடிவத்தில் கைகூடியுள்ளது. அதுவே நாவற்குழியில் தலை நிமிர்ந்து நிற்கும் சிவபூமி அரும்பொருள் காட்சியகமாகும்.



அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி ஆர்.திருமுருகன் அவர்களின் திடீர் கனவு அல்ல. அவர் துர்க்கையம்மன் ஆலயத் தலைவராக பதவியேற்ற காலத்தில் இருந்து எமது மரபுரிமைச் சின்னங்களைச் சிறுகச் சிறுக சேமித்து வந்ததை நான் அறிவேன். அவை வலிகாமத்தில் மூன்று இடங்களில் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆயினும் அதற்கொரு அருங்காட்சியகம் தோன்றும் என நான் கனவு காணவில்லை. அதனால் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்து அம்மரபுரிமைச் சின்னங்களை எமது தொல்லியல் இறுதி வருட மாணவியூடாக ஆவணப்படுத்தி வைத்துள்ளோம். அது தனியொரு நூலாகவூம் விரைவில் வெளி வரவுள்ளது. அப்போது சிவபூமி அரும்பொருள் காட்சியகம்



தோன்றிய வரலாற்றுப் பின்னணியும் தெரியவரும்.

இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ள அருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டிட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை, காட்சிப்படுத்தப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக்காத தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளை சொல்லப் போகின்றன. அவற்றுள் திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. இதுவரை எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்களுக்கே சிலை வைக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு 350 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த 21 தமிழ் மன்னர்களுக்குச் சிலைகள் வைக்கப்படவில்லை. அக்குறைபாட்டைப் போக்கும் வகையில் முதன் முறையாக சிவபூமி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் 21 மன்னர்களுக்கும் கடவுளருக்கு அடுத்த நிலையில் பீடங்கள் அமைத்து அவற்றின் மேல் மன்னர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அவற்றின் கீழ் ஆட்சியாண்டுகள் பொறிக்கப்பட்டுள்ளமை வரலாற்று ஆர்வலகர்களுக்கு மனமகிழ்வை அளிப்பதாக உள்ளது.

கடந்த இருவாரங்களாக முகநூல்களில் பகிரப்பட்ட செய்திகளில் சிவபூமி அருங்காட்சியகம் பற்றிய செய்திகளே அதிக அளவில் ஆக்கிரமிப்புச் செய்தியாகக் காணப்படுகின்றன. இது தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியதன் பிரதிபலிப்பாகும். இதன் சாதனைக்கும் நன்றிக்கும் உரியவர் அரசியல் கலப்பற்ற சொல்லின் செல்வர் ஆர்.திருமுருகன் அவர்கள். துடிப்புள்ள இளைஞராக ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட அவர் படிப்படியாக சமூகப் பணியில் அகலக் கால்பதித்து சாதனை படைத்து வரும் ஒருவர். பலர் சிந்திக்க முன்னரே செயலில் காட்டி பிறரைப் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியவர். இதற்கு தனிமனிதனாக இருந்து கிழக்கிலங்கை வரை இன்று வியாபித்துள்ள அனாதைச் சிறுவர்களுக்கான கல்விக்கூடம், விழிப்புணர்வற்றவர்களுக்கான காப்பகம், வயோதிபர் மடம், நாய்களுக்கான காப்பகம் முதலான அவரது பணிகள் கட்டியம் கூறி நிற்கின்றன. தூரநோக்குடன் நாவற்குழியில் அவர் உருவாக்கிய திவாசக அரண்மனை இலங்கை வரும் ஆன்மீகவாதிகளையும், சுற்றுலாப் பயணிகளையும் யாழ்ப்பாணத்தை திரும்பி பார்க்க வைத்தது. இன்று அதற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தமிழர் பண்பாட்டை மேலும் தலைநிமிரச் செய்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் நாவற்குழி என அடையாளப்படுத்தப்படும் பெயர் விரைவில் யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயில் என அழைக்கப்படுவதற்கு இவ்வருங்காட்சியம் வழிவகுக்கலாம்..

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
தலைவர்
வரலாற்றுத்துறை





விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# அரசாங்கத்தின் செயற்பாடே தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது!

### ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன்

10.01.2024



நாட்டு மக்களை பிளவுபடுத்தி தமக்கான வாக்கைப் பெற்றுக் கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டே ஜனாதிபதியின் அண்மைய வடமாகாண விஜயம் அமைந்துள்ளது. அதனால் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வடமாகாண விஜயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் ,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இரண்டாவது ஆண்டின் துவக்கத்தில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களை நடாத்துவதற்காகவும் ஏனைய சந்திப்புக்களை நிகழ்த்துவதற்காகவும் வடக்கு மாகாணத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

அவரது வருகை தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. மிச்சம் மிகுதியாக உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முடிவுகள் எட்டப்படவேண்டும், காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவேண்டும்.

பௌத்த சிங்களமயமாக்கலை நோக்கமாகக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பலாத்காரமாக நிர்மாணிக்கப்படும் பௌத்த கோயில்களின் பணிகள் நிறுத்தப்படவேண்டும். இவை தொடரபில் ஜனாதிபதி தெளிவான பதிலை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் தமது விஜயத்தின் போது மேற்குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களையோ தெளிவுபடுத்தல்களையோ மேற்கொள்ளவில்லை.

அவர் தொடர்ச்சியாகப் பேசிவரும் அபிவிருத்தி தொடர்பில் மாத்திரமே பேசினார். இதற்கு முன்னரும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கின்றார். ஆனால் அவற்றுக்கான முறையான நிதி ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இந்த அரசாங்கத்தின் மேல் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

ஜனாதிபதிக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் கடந்த காலத்தை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

யுத்தத்திற்கு முன்பாக, முழு இலங்கைக்கும் தேவையான விவசாய உற்பத்திகளையும் கடல் உணவுகளையும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பெருமளவில் வழங்கிவந்தன.

முப்பது வருட யுத்தத்தில் எமது விவசாயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தார்கள். விவசாயக் காணிகள் தரிசு நிலங்களாகவும் காடாகவும் மாறியது. இருந்த ஒருசில தொழிற்சாலைகளும் யுத்தத்தைக் காரணம்காட்டி அழித்தொழிக்கப்பட்டன. முழு இலங்கைக்கும் உணவளித்த மக்கள் தமக்கே வாழ்வாதாரம் இல்லாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அந்த மக்கள் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டிய அரசாங்கம் அதுதொடர்பில் எத்தகைய பிரத்தியேக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.



அதுமட்டுமன்றி, காடாக மாறியுள்ள அவர்களது காணிகளை விடுவிப்பதற்கே அவர்கள் கடந்த பதினான்கு வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

இந்த இலட்சணத்தில்தான், சிங்கள அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கின்றதென்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்திற்குப் பின்னர், வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அரசாங்கத்தின் உதவிகள் ஏதுமின்றி, தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கை முறையையும் தாமே கட்டியெழுப்பிக்கொள்வதற்காக வைராக்கியத்துடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

யதார்த்தங்கள் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி குறிப்பிடுகின்ற வடக்குமாகாண அபிவிருத்தி என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதை நாங்கள் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அதேசமயம், தமிழ்க் கட்சிகள் முன்வைத்த பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாசைகளை நிறைவேற்றுவது தொடர்பில் எந்தவிதமான ஆணித்தரமான பதில்களும் அளிக்காமல் பதின்மூன்றாவது திருத்தம் என்பது பொருளாதார அபிவிருத்திக்குப் போதுமானது என்ற கருத்தை மாத்திரம் கூறிச்சென்றிருக்கின்றார்.

பதின்மூன்றாவது திருத்தம் என்பது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை மையமாகக் கொண்டது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாகாணசபை தேர்தல்களை நடாத்தாமல் இருப்பதுடன், பதின்மூன்றாவது திருத்தத்தினூடாக மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பல அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசால் பறிக்கப்பட்டும் இருக்கின்றது.

இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ப முக்கியமானது. இவை இல்லாமல், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒருபொழுதும் சீராக நடைபெறாது. வெளிநாட்டு முதலீடுகளையும் அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

இதனைப் புரிந்துகொண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி, அதற்குரித்தான முழுமையான அதிகாரங்களை வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்குவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரமும் அரசியல் ஸ்திரத்தன்மையும் வலுவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கொழும்பிலும்சரி, யாழ்ப்பாணத்திலும்சரி புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகள் அவசியம் என்பதை மீண்டும் மீண்டும் கூறிவருகின்றார்.

கடந்த காலங்களில் தென்பகுதியிலிருந்த தமிழ் மக்களின் பொருளாதாரம் என்பது அடிக்கடி அரசாங்கம் உருவாக்கிய இனக்கலவரங்களினால் நிர்மூலம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக, பல இலட்சம் கோடி மதிப்புள்ள சொத்துகளை தமிழ் மக்கள் இழந்து அகதிகளாகக் கப்பலேற்றி அனுப்பப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களுக்குண்டு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல், அவற்றை எதிர்பார்ப்பதென்பது தமிழ் மக்களை மேலும் மேலும் முட்டாள்கள் என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

மாகாணங்களுக்கென ஒதுக்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள் போன்றவற்றை வழங்கி, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கி, சர்வதேச முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதனூடாகத்தான் புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்புக் கிட்டும் என்பதை ஜனாதிபதியும் அவருடைய தலைமையிலான அரசும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதை வழங்குவதனூடாக ஜனாதிபதி குறிப்பிடும் வடக்கை பொருளாதார மையமாக மாற்றலாம் என்பது மட்டுமன்றி, தென் ஆசியாவின் நிதி ஆதார மையமாகவும் மாற்றமுடியும்.

இவை ஒருபுறமிருக்க, யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்த நிலையில், தமிழ் மக்கள் தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக் கோரிவருகின்ற போதிலும், இன்னமும் அது முழுமையடையவில்லை. இப்பொழுதும்கூட இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களது நிலங்கள் காணிகளை முப்படையினரும் பலாத்காரமாக தம்வசம் வைத்திருக்கின்றனர். அவை விடுவிக்கப்படவேண்டுமாயின், ஜனாதிபதிதான் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாவட்ட செயலாளர்களோ ஏனைய அதிகாரிகளோ எடுக்க முடியாது.

2025ஆம் ஆண்டுக்குள் மீள்குடியேற்றம் முழுமைபெற வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி, காணிகளை விடுவிப்பதற்கான ஆக்கபூர்வமான அறிவுறுத்தல்களோ நடவடிக்கைகளோ எடுக்கவில்லை என்பதுதான் யதார்த்தமானது.

இத்தகைய சூழ்நிலையில், அவர் குறிப்பிட்ட காலத்திற்குள் மீள்குடியேற்றங்கள் பூரணப்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

அதனைப் போலவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யுத்தம் முடிந்த காலத்திலிருந்து இன்றுவரை அந்த மக்கள் போராடி வருகின்றபோதிலும்கூட அவர்களை சந்தித்துப் பேசுவதற்கோ அல்லது அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்திலோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதியை சந்திக்க முயற்சித்த தாய்மார்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது என்பது மிக மோசமான செயற்பாடாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீண்ட போராட்டத்திற்கு மதிப்பளிக்காதது மட்டுமல்ல அவர்களது உறவினர்களின் இருப்பு தொடர்பில் அவர்கள் அறிந்துகொள்வதற்கான நீதியும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இத்தகைய வார்த்தை ஜாலங்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படுகிறதே தவிர, ஜனாதிபதியின்மீதோ அவரது தலைமையின் மீதான அரசின்மீதோ நம்பிக்கை கொள்வதற்கு இடமளிக்கவில்லை.

அரசாங்கத்தின் இவ்வாறான தொடர் நடவடிக்கைகள்தான் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான சூழ்நிலையை நிர்ப்பந்தித்துள்ளது என தெரிவித்தார்.

# வடக்கில் படங்காட்டிய ஜனாதிபதி கிழக்கில் படங்காட்டிய ஆளுநர்!

13.01.2024

புதிய ஆண்டு பிறந்த கையோடு ஜனாதிபதி வடக்கிற்கு வருகை தந்த அதே காலப்பகுதியில், அவருடைய ஆளனர் கிழக்கில் மிகப்பெரிய பண்பாட்டு விழா ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார்.

வடக்கில் ஜனாதிபதி பல்வேறு தரப்புகளையும் சந்தித்தார். தொழில் முனைவோர், பல்கலைக்கழகப் பிரமுகர்கள், குடி மக்கள் சமூகம் என்று சொல்லப்பட்டவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இசைத்துறையில் விளையாட்டு துறையில் பளு தூக்கும் போட்டியில் சாதனை புரிந்தவர்கள், வடக்கில் கல்விப் பெறு பேறுகளில் சாதனை புரிந்தவர்கள், அரச உயர் அதிகாரிகள், தனது கட்சிப் பிரதிநிதிகள் என்றிவ்வாறாக பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கிறார். அவர் யாரைச் சந்திக்க வேண்டும், சந்திக்கக் கூடாது என்பதனை அவருக்கு இணக்கமான வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.



குறிப்பாக யூ எஸ் ஹோட்டலிலும் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் உரையாற்றும் பொழுது, அவர் பேசியவற்றின் சாராம்சம் என்னவென்றால், மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரங்கள் உண்டு; மேல் மாகாணத்தில் கட்டியெழுப்பப்பட்டு இருப்பதுபோல பிராந்திய பொருளாதாரங்களைக் கட்டி எழுப் புங்கள் மாகாண சபைகளின் நிதி அதிகாரம் அதற்குப் போது மானது; முதலீட்டுக்கு எனது கையைப் பார்த்துக் கொண் டிராதீர்கள்; புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி உதவி களையும் துறை சார்ந்த உதவிகளையும் பெற்றுக் கொள் ளுங்கள் அதற்கு நாம் ஒத்துழைப்போம்... என்பதுதான். அதிலும் குறிப்பாக அவர் பொருளாதார வளர்ச்சிக்கு உதா ரணங்களாக ஜப்பான், கொரியா, பிரித்தானியா போன்ற ஒற் றையாட்சி நாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். அங்கே யெல்லாம் கூட்டாட்சி இல்லை, ஆனாலும் அந்நாடுகள் பொருளாதாரரீதியாகச் செழிப்பாகக் காணப்படுகின்றன என்ற பொருள்பட யூஎஸ் ஹோட்டலில் அவர் பேசியிருக்கிறார்.

மாகாண சபைகள் இயங்காத ஒரு பின்னணியில், இப் போதைக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் நோக்கம் இல்லாத ஒரு ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கு உள்ள நிதி அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள் என்று கூறுகிறார். விக்னேஸ் வரன் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் வடமாகாண சபையானது முதலமைச்சர் நிதியம் ஒன்றை உருவாக்க முயற் சித்தது. ஏற்கனவே அதையொத்த நிதியம் மேல் மாகாணத்தில் உண்டு. ஆனால் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனால் ஜனாதிபதி கூறுகிறார், 13ஆவது திருத்தத்துக்குள் எல்லா அதிகாரங்களும் உண்டு என்று.

அப்படியென்றால் அவர் 2015 இலிருந்து பிரதமராக இருந்த காலகட்டத்தில் கூட்டமைப்போடு சேர்ந்து உருவாக்க முயற்சித்த “எக்கிய ராஜ்ய” என்ற தீர்வு முயற்சிக்குப் பொருள் என்ன? மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் போதும் என்றால் எதற் காக அப்படி ஒரு ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்? இது பற்றி யாராவது அவர்களிடம் கேள்வி கேட்டார்களோ தெரியவில்லை. ஆனால் வழமையாக இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கும் வடக்கு இந்த முறை அது போன்ற கேள்விகளைக் கேட்கவில்லை என்று அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொன்னதாக ஒரு தகவல்.

இவ்வாறு ஜனாதிபதி வடக்கில், படம் காட்டி, படம் எடுத்து, ரியோ கிறீம் ஹவுசில் ஐஸ்க்ரீமும் அருந்தி, பதின்மூன்றுக்குள் எல் லாம் உண்டு என்று கூறிய அதே காலப்பகுதியில், கிழக்கில் அவருடைய ஆளுநர் பெருமெடுப்பில் ஒரு பண்பாட்டு பெரு விழாவை ஒழுங்குப்படுத்தியிருந்தார். கிட்டதட்ட இரண்டு தசாப் தங்களுக்கு முன் நோர்வேயின் அனுசரணையோடு பேச்சு வார்த்தைகள் நடந்த காலகட்டத்தில், திருகோணமலையில் நடந்த “மானுடத்தின் ஒன்று கூடலுக்குப்” பின் அங்கே நடந்த மிகப்பெரிய அளவிலான ஒன்றுகூடல் அதுவென்று கூறலாம். அதை ஒரு மெகா நிகழ்வாக ஆளுநர் திட்டமிட்டு நடத்தி யிருக்கிறார். அதற்கு இந்தியாவின் உதவிகளையும் பெற்றிருக் கிறார். அதன்மூலம் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ரீதியிலான பிணைப்புக்களைப் பலப்படுத்தும் முயற்சிகளை வடக்கிலிருந்து கிழக்கிற்கும் விஸ் தரிக்கும் ஒரு எத்தனம் அது. அப்படி ஒரு பண்பாட்டு விழாவிற்கு இந்தியா பக்கத்துணையாக இருக்கிறது என்பது சிங்கள கடும் போக்குவாதிகளை கோபப்படுத்துமா? அல்லது பயப்படுத்துமா? என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

குறிப்பாக ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல் நிகழ்ச்சிக்கு பயிற் சியாளர்கள் முதற்கொண்டு, சிறப்பு விருந்தினர்கள், அறிவிப் பாளர்கள் வரை தமிழகத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருக் கிறார்கள். பொங்கல் பெருவிழாவில் ஆயிரக்கணக்கான வர்களை அந்த மைதானத்தில் திரட்டி, நூற்றுக்கணக்கில் பெண்களை ஆட வைத்து, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு எழுச் சியை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அந்நிகழ்வில் உரை யாற்றிய சாணக்கியன் தமிழர்களின் தலைநகர் என்று அழைக்கப்படும் திருகோணமலை என்று உச்சரிக்கிறார்.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் அதிகம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் மாவட்டம் திருக்கோணமலை ஆகும். இப்பொழுதும் அங்கே குன்றுகளாகக் காணப்படும் பிர தேசங்களில் விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் ஒளிப்படத்தை, வாகன ஊர்தியில் எடுத்துச் சென்றபோது தாக்கப்படும் அளவுக்கு அங்கு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமை உண்டு. அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்தில் பெருமெடுப்பில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு விழாவை ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒழுங்கமைத்திருக்கிறார்.

அவர் ஓர் அரச ஊழியர். ஜனாதிபதியின் பிரதிநிதி. ஆனால்



நிகழ்வில் அவருக்கு தரப்பட்ட முக்கியத்துவம் அவரை அங்கு கூடியிருந்தவர்கள் வரவேற்ற விதம் என்பவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது அவருக்கு அங்கே ஒரு கதாநாயக அந்தஸ்து வழங்கப்பட்டது. அவர் பேசுவதற்காக மேடையை நோக்கி வந்த பொழுது “அலப்பறை கிளப்புறோம்” என்ற ரஜினி படப்பாடல் ஒலிக்க விடப்பட்டது. அவர் ஒரு கதாநாயகனைப் போல மேடையை நோக்கி வந்தார். வரும் வழியில் நடனம் ஆடிய பெண்கள் அவரை நிறுத்தி கைகுலுக்கி செல்ஃபி எடுத்துக் கொண்டார்கள். அதாவது ஒரு நிர்வாக அதிகாரி கதாநாயகனாக கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் அந்த பண்பாட்டு விழா நடந்து கொண்டிருந்த அதே மாகாணத்தில், மட்டக்களப்பில், மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் 125ஆவது நாளைக் கடந்து விட்டது. அது மட்டுமல்ல, கிழக்கில் அண்மையில் பெய்த கடும் மழையால், பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிவாரணங்களை வழங்கி வருகின்றது. அந்த ஒளிப்படங்கள் முகநூலில் பகிரப்படுகின்றன. ஒரு பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாணத்தில், இது போன்ற மெகா பண்பாட்டு நிகழ்வுகள் அவசியமா என்ற கேள்விகள் உண்டு. மேய்ச்சல் தரைக்காகப் போராடும் விவ சாயிகள் வெள்ளத்தில் நிற்கிறார்கள்; அவர்களுடைய நாட்டு மாடுகளை வெட்டிக் கொல்லப்படுகின்றன அல்லது சுருக்கு வைத்துப் பிடிக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் தீர்வைப் பெற் றுக் கொடுக்க முடியாத ஓர் ஆளுனர், காளை மாடுகளை அடக் கும் போட்டிகளை ஒழுங்குபடுத்துகிறார் என்ற விமர்சனங் களும் எழுந்தன.

செந்தில் தொண்டமான் ஆளுனராக நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களைக் கவரும் விதத்தில் எதையாவது செய்ய முயற்சிக்கின்றார். எனினும் சிங்கள பௌத்தமயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவரால் தடுத்துநிறுத்த முடியவில்லை. அதில் அவருடைய அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது என்பதனை பௌத்த மதகுருமார் நிரூபித்து வருகிறார்கள். அவ்வாறு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத ஓர் ஆளுனர், வெள்ள அனர்த்த காலத்தில், பெருமெடுப்பில், பெருந்தொகை நிதியைச் செலவழித்து, ஒரு பண்பாட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார். அதில் அவர் கதாநாயகனாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

எனவே கடந்த வாரம் வடக்கிலும் கிழக்கிலும் நடந்தவை களைத் தொகுத்துப் பார்த்தால், மிகத் தெளிவான ஒரு செய்தி கிடைக்கின்றது. வடக்கில் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தத்துக்குள் அதாவது மாகாண சபைக்குள் நிதி அதிகாரம் உண்டு என்று கூறுகிறார். கிழக்கில் அவருடைய ஆளுநர் கதாநாயகனாக மேலெழுகிறார். 13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் ஆளுனர் ஒருவர் கிழக்கில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் விழாக்களை ஒழுங்குப்படுத் தியிருக்கிறார். அதனால் அவருக்கு வரவேற்பும் கவர்ச்சியும் அதிகரித்திருக்கின்றன. 13ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய அரசின் பிரதிநிதியாக காணப்படும் ஆளுனர் ஒருவர் கதா நாயகனாக மேலுயர்ந்துள்ளார். அதன் மூலம் ஆளுனர் சக்தி மிக்கவர் அவர் தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் நடவடிக் கைகளை எடுப்பார் என்று நம்பிக்கையூட்ட முயற்சிக்கப் படுகின்றது.

இவற்றின் மூலம் மாகாண சபையை ஒரு பலமான அதிகார கட்டமைப்பாக வெளிக்காட்டும் உள்நோக்கம் உண்டு. இதில் இந்தியாவை திருப்திப்படுத்தும் உள்நோக்கமுமுண்டு. வடக்கில் ஒரு சந்திப்பின்போது ஜனாதிபதி இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையிலான தரைப்பாலம் பற்றியும் பேசியிருக் கிறார். அவர் அதை நிறைவேற்ற மாட்டார் என்பது புத்திசாலி யான யாருக்கும் விளங்கும். ஆனால் அவர் அப்படிச் சொல் கிறார். 13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக முன்வைப்பதன் மூலம், இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம், கிழக்கில் பண்பாட்டு பெருவிழாவில் இந் தியாவின் உதவிகளை பெற்றதன் மூலம், அவர் இந்தியாவை சந்தோஷப்படுத்த விளைகிறார். மாகாண சபைகளைப் பலமானவைகளாகக் காட்ட முயற்சிக்கின்றார்.

நன்றி: நிலாந்தன்






# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

**Over 20 Years Experience in the field of Insolvency**



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# "வீரத் தமிழ் மகன்" முத்துகுமாரின் மரண சாசானம் 29.01.2009




அன்பார்ந்த உழைக்கும் தமிழ்மக்களே...

வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன். உங்களைப்போல் தான் நானும். தினமும் செய்தித்தாளையும், இணையத்தையும் பார்த்து பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன். வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ் நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த ரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்த பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியது தானே... ஏன் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்?

ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனிநபர்களின் பலிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமூகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம். ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் மட்டும் குற்றம்சாட்டப் படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டியது ஜெயின் கமிஷன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ்காந்தியைக் கொலை செய்த கொலைகாரர்கள்தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத் தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை, கூட்டணிக் கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்துகொள்ளும் ஆகப்பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்கபோகவில்லை என்பது போன்ற கேள்விகள் கேட்கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன. மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்தி வரும் இவர்கள் நாளை நம்மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படி பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக்கிறார்கள்?

கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்துகொள்வார்(?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவார் – இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்லை என்கிற வின்னர் பட வடிவேல் காமெடியைப் போல. காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப்பெயரைச் சூடிக் கொள்ளவும், தமிழ்நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களின் கோபத்தை எதிர்கொள்ள பயந்து மருத்துவமனையில் போய் ஒளிந்துகொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப் பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்காகவோ செய்ததென்ன? ஒரு முறை அவரே சொன்னார், "தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பா"னென்று. இவருடைய பம்மலாட்டத்தை யெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக் கிறேதே...

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக் கல்லூரி மாணவர்களே... உங்கள் போராட்டம் வெற்றிபெற சகதமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத் தமிழர் பிரச்சனை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச்சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்காதவரான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள், வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான். உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை ஜாதிய உணர்வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழிவகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்னெ யெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.

ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக்கொள்ள விட்டுவிடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக்கொள்ள இதுதான் தருணம். உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய ராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டு மொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய் களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்! விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் ராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை ராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது – இந்தக்









கூட்டணி கொள்கைக்கூட்டணியல்ல, பாலியல் கூட்டணி என்றல்லவா!, ஆக இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாண வர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தி யிலிருந்து தலைவர்களை உருவாக்குகள். உங்கள் போராட் டத்தை சட்டக்கல்லூரி மாணவர்கல் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிட மிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆன்பலம், பண பலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். 'நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ் நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம் அமைதிகொண் டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கின்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்' என்ற காசி அனந் தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்... என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட்மார்டமோ செய்யப்போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே... உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக் கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத்தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

தமிழீழம் என்பது தமீழத்தின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும் கூட காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள், உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும், ஈழத்தமிழனும் மாட்டைவிட, ஆட்டைவிடக் கேவல மானவர்கள்? எல்லை தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரை களில் அடிக்கடி தைவான் நாட்டை சேர்ந்த மீனவர்கள் வழி தெரியாமல் வந்த்வர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழிதவற முடியுமென்றா, வெறும் பன்னி ரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேஸ்வரம் தமிழன் வழி தவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதர்களே...

உங்கள் சொந்த மாநிலத்தில் கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடு தான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருந் துக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்திதான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆக்கக்கூடாதென நாங்கள் விரும் புகிறோம். ஆகவே, போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோ தரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில், ஒரு நவநிர்மாண் சேனாவோ, சிறீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவக விருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே...

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல, காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலு வலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக்கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக் களுக்காகப் பாடுபடவேண்டும், சமூக விரோதிகளை ஒழுத்துக் கட்ட வேண்டும் என்பதுபோன்ற உன்னத நோக்கங்களுக் காகத்தான் நீங்கள் காவல்துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறுகளை மறைத்துக்கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்



கெதிராகவே, பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழக போலீஸ்தான். இந்தியாவில் பழமையான காவல்துறையான தமிழக காவல் துறை சிறப்பாக செயல்பட்டு வரும் காவல்துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப்போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக் கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள். ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம் தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ்காந்தியைத் தமிழக காவல்துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந் தவர்களில் பலர் அப்பாவி போலீஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்காப்பாறப்பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரரர்கள் - அதுதான், இந்திய உளவுத் துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா... இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெரு மைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப் பணித்துப்பாருங்கள். மக்கள் உங்களை தங்கத்தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக்காசை வைத்து அணை கட்டிக்கொடுத் தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி. தன் பிள் ளைகளுக்கு அவன் பெயரை வத்துக் கொண்டாடிக்கொண் டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத்தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகரிகளுக்கு ஒத்துழைக்க மறுப் பது, ரா, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை உள் ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டு மாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதைலைப்புலிகளே...

அனைத்துக்கண்களும் இப்போது முல்லைத்தீவை நோக்கி. தாய்த்தமிழகம் உணர்வுபூர்வமாக உங்கள் பக்கம்தான் நிற் கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே... ஆனால், நம்பிக் கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறுகாலங் கள்தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்தக் காலத்தில் உருவாகலாம் அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத் துங்கள். 1965ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுய நலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைகுரிய ஒபாமாவே,

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது.





ஆனால், இறையான்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடி மகனை இனஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என் பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக் காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற் பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று... நீங்கள் அமைதி யாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்த தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக் கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக்கொண் டிருக்கப் போகிறீர்களா? வன்னியில், விடுதலைப்புலிகளூக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக் களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்காள் என்கிறார்கள். அப் படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அர சைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற் காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப் படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொள்கின்றனரென்றால். நீங்கள் உங்கள் மெளனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்துகொண்டிருக் கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அஃதே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளூாவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா - என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் எடுத்ததால்தான் வந்தது என்பதைப் போலெ... உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர் (they are not the reason: just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப் படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச் சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறு வதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது. நாடாளுமன் றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர்வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக்கொண்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொண்று குவிக்கிறது. அப்படி யானால், பாகிஸ்தானின் இந்திய மீதான பயங்கரவாதமென்பது இந்தியா-பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒருபக்கம் இருக்க, இப்போது, விடுதலைப்புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது. ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என் கிறது. ராஜீவ்காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடைபெற்றிருந்த போதும் அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்படவில்லை. ராஜீவ்காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத்துக்கொண்டு மறுபடியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று. ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திரா வின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறுதெய்வங்களில் எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப்போரில் ஈடுபட் டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக்கூடாது? புலிகள் போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்து

கொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள். என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது என்னவகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்துகொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை - ஆயுதத்தைக் கீழே வைக்கச்செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயல்படவில்லை. உதாரணம் ரணில் - கருணா. ஆனால், புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலாகாலமாக நடப்பதுதானே - ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியுருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவாதமா? அப்பாவித்தமிழர்களைக் காப்பதற்காகத்தான் போரிடுவதாக பசப்புகிறது இந்தியா. ஆயுத தளபாடங்களும், உளவு விமானங்களும்தான் இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப்பட்ட ஒரு பாரா செட்டமால் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். அதற்கு இந்தியா உதவுமாம்... வேலிக்கு ஓணான் சாட்சி! இப்போது சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தின் ஆம்புலன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? ப்ரான்சின் 17 மனித உரிமையாளர்களைக் கொலை செய்தார்களே, அவர்களும் விடுதலைப் புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல... இப்போது எம்மக்களைக் கொலைசெய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்-நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின்படி ஒவ்வொருநாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம்... எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. அவர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக் கொள்வதென்றாலும்கூட, விடுதலைப்புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது.

காலம் கடந்து வழங்கப்படும் நீதி அநீதியைவிடக் கொடுமையானது.

1. இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக்கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக்கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்தியா அரசு நடந்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப்பரிமாற்றங்கள்கூட சர்வதேச சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

2. ஐநா பொதுச்செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து தன் தாயகமான சீனாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து, ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வருவதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படக்கூடாது.

3. இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள்மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்ற குற்றத்திற்காக சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ்போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட தொழில் நிறுவனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப்படுவதோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

6. ராஜீவ்காந்தி கொலை வழக்கு இண்டர்போலால் விசாரிக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் இனம்காணப்பட வேண்டும்.

7. பிரணாப் முகர்ஜி, கோத்தபாய ராஜபக்க்ஷே, சந்திரிகா, உதயணகார, கேகலிய ரம்புக்வெல, பசில்ராஜப்க்ஷ மகிந்த, பொன்சேகா போன்றோர் நார்கோ அனிலிசிஸ் சோதனைக்குப்பட வேண்டும்.

8. அமைக்கப்படபோகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுகே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமையில் அமையவேண்டும என்பதை தமிழீன மக்கள் தான் முடிவுசெய்வார்கள்

9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்த வந்தாக்குதல், எதிர்காலத்தில் அப்பகுதிகளில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.

10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டணைக்காலம் பூர்த்தியாகும் காலத்திற்கும் இலங்கைக்குத் தப்பிச்சென்று விட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக போலிசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13. தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத் தம்பதியர் மீதான பாஸ்போர்ட் குற்றச்சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடம்பங்களுக்கான வாழ்வாதரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

என்றும் அன்புடன்,

அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன்,
கு.முத்துக்குமார், கொளத்தூர், சென்னை-99

அருமைத்திமிழ் மக்களே, அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம், உங்கள் கையில் கிடைத்திருக்கும் இந்தத் துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து, போராட்டத்திற்கான ஆதரவைப் பெருகப் பண்ணுங்கள் நன்றி



















31ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் முப்பத்தி ஓராம் ஆண்டு
நினைவு வணக்க நாள் – 16.01.2024
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்

# தை பிறக்கும் வழிபிறக்குமா?

06.01.2024

அண்மையில் கோண்டாவில் உப்புமடச் சந்தியில், ஒரு சமகால கருத்தரங்கு இடம்பெற்றது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் அக்கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது. அதற்குத் தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் சொன்னார்… தனக்கு தெரிந்த பலர் ஒரு வேளை உணவை, குறிப்பாக காலை உணவைத் தவிர்ப்பதாக. காலை உணவைக் கட்டாயம் எடுக்க வேண்டும், இரவு உணவைத் தவிர்க்கலாம் என்று தான் ஆலோசனை கூறியபோது,அவர்கள் சொன்னார்களாம்,காலை சாப்பிடாவிட்டால் அன்றைய அலுவல்களில் மூழ்கும்போது பசி தெரியாது.ஆனால் இரவு சாப்பிடாவிட்டால் பசி தெரியும் நித்திரை வராது என்று. இதுதான் பெரும்பாலான கீழ் மத்தியதர வர்க்க குடும்பங்களின் நிலைமை. ஆண்டு இறுதியில் இதுதான் நிலைமை என்றால் தை பிறந்தாலும் வழி பிறக்குமா?

சாதாரண மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ, அரசியல்வாதிகள் அதிகாரத்தைச் சுவைப்பதற்கான புதிய வழிகளைத் தேடித் திறக்கத் தொடங்கிவிட்டார்கள்.



ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்காகப் புதிய கூட்டணி ஒன்றை நோக்கி ஒரு புதிய அலுவலகம் கடந்த முதலாம் தேதி ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது. அதே நாளில், மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஷான் விஜயலால் டி சில்வா எதிரணியோடு அதாவது ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார். இவர் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தவர். அவர் எதிரணியில் இணைந்து கொண்டதன் மூலம் எதிரணி தானும் பலமடைவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

அதாவது, புதிய ஆண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான தயாரிப்புகளோடு பிறந்திருக்கிறது என்று பொருள். மக்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கலாம். மரக்கறிகளின் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து போகலாம். வரியானது மக்களை ஈவிரக்கமின்றிக் கசக்கிப்பிழியலாம். மோட்டார் சைக்கிள் ஒரு லக்சறிப் பொருளாக மாறலாம். ஆனால் அரசியல்வாதிகளின் அதிகாரப்பசி குறையப் போவதில்லை என்பதைத்தான் ஆண்டின் தொடக்கம் நமக்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஒரு ஜனாதிபதி தேர்தலை நோக்கி பிரதான கட்சிகள் ஏற்கனவே உழைக்க தொடங்கிவிட்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்த்தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது குத்துவிளக்கு கூட்டணிதான். சில மாதங்களுக்கு முன் கூட்டணியின் கூட்டம் மன்னாரில் நடந்த பொழுது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது என்று அக்கூட்டு முடிவெடுத்தது. அந்த முடிவை வலியுறுத்தி கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வப்போது கருத்து தெரிவித்து வருகிறார். சுரேஷ் அவ்வாறு கருத்து தெரிவித்த பின் அண்மையில் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார். ஒரு தமிழ் பொது வேட்பாளராகத் தான் களமிறங்கத் தயார் என்றும் அவர் அறிவித்துவிட்டார்.

இவ்வாறு விக்னேஸ்வரன் அறிவித்த பின் கஜேந்திரக்குமார் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிக்கும் என்பது அக்கட்சியின் நிலைப்பாடாகும்.

அதே சமயம் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அது தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மினக்கெடுகின்றது. எனினும் சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கும் பகிஷ்கரிப்புக்கும் எதிராகக் கருத்து தெரிவித்திருக்கிறார். தமிழரசுக் கட்சி யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கித் தமிழ் வாக்குகளைத் திருப்பும் நோக்கத்தோடிருந்தால், அக்கட்சி பொது வேட்பாளரை எதிர்க்கும்.

கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தலின் போதும் ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன்வைத்தது, தமிழ்




மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுதான். கடைசியாக நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட அக்குழுவின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனினும், அக்குழு அந்த முடிவை நோக்கி கருத்துருவாக்க வேலைகளைச் செய்தது.

இம்முறை குத்துவிளக்குக் கூட்டணி அந்த முடிவை எடுத்திருக்கின்றது. குத்துவிளக்கு கூட்டணி இந்தியாவுக்கு விசுவாசமான ஒரு கூட்டணியாகப் பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு ஆதரவான ஒரு கூட்டு என்று கருதப்படும் குத்துவிளக்கு கூட்டணி தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தை கையில் எடுத்ததனால் அது இந்தியாவின் வேலையோ என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று பார்ப்போம். ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிச்சயமாக வெல்லப் போவதில்லை. ஆனால் அவர் பிரதான சிங்கள வேட்பாளர்களின் வெற்றிகளை சவால்களுக்கு உட்படுத்துவார். எப்படியென்றால், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் கட்சிகள் கடுமையாக உழைத்தால், தமிழ் வாக்குகள் பெருமளவுக்கு அவருக்குத்தான் விடும். அப்படி விழுந்தால், பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் 50 வீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைக்காமல் போகக்கூடும். இம்முறை இரண்டுக்கு மேற்பட்ட சிங்கள வேட்ப்பாளர்கள் அரங்கில் காணப்படுகின்றார்கள். அதாவது சிங்கள வாக்குகளே சிதறும் ஒரு நிலமை. இதில் தமிழ் வாக்குகளின் கிடைக்கா விட்டால், எவருக்குமே முதற் சுற்று வாகுக்கு கணக்கெடுப்பில் வெற்றி கிடைக்காமல் போகலாம். அப்பொழுது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்புக்கு போக வேண்டிவரும். அதில் தமிழ் மக்கள் யாருக்கு தமது இரண்டாவது விருப்பு வாக்கை வழங்குகிறார்களோ அவரே வெற்றி பெறுவார். அதாவது யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதனை தமிழர்கள் தீர்மானிக்கக்கூடிய பேர வாய்ப்பைப் பரிசோதிக்கும் ஒரு முயற்சியே அது.

பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் வாக்குகள் கிடைக்காது என்றால், அவர்கள் தமிழ்த் தரப்போடு பேரம்பேச வருவார்கள். அப்பொழுது தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஒருவருக்கு தமிழ்மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்கலாம். அதாவது தமிழ் வாக்குகளை ஒரு சிங்கள வேட்பாளருக்கு “பிளாங்க் செக்”காக வழங்குவதற்கு பதிலாக பேர வாய்ப்பாக அதைப் பயன்படுத்துவது.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களோடு வெளிப்படையான ஓர் உடன்பாட்டுக்கு வரும் சிங்கள வேட்பாளர் தென்னிலங்கையில் தோற்கடிக்கப்படும் ஆபத்து அதிகமுண்டு என்பதுதான். அதனால் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் தமிழ் மக்களோடு பேரம்பேசத் தயங்குவார். ஆனால் அதுகூட தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு ஒரு உண்மையைச் சொல்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கும். அது என்னவெனில், சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமே இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்பதுதான்.

எனவே ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு உள்ள பேர வாய்ப்புகளை பரிசோதிக்கலாமோ இல்லையோ, தமிழ் மக்களின் மக்கள் ஆணையை புதுப்பிப்பதற்கு உதவுவார். அவர் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் வாக்குகளைக் கேட்பார். தேர்தல் என்று வந்தால் அது ஒரு ஜனநாயகக் கொண்டாட்டம். அங்கே கட்சிகளுக்கு புதுரத்தம் பாச்சப்படும். கட்சித் தொண்டர்கள் உற்சாகமாக இறங்கி வேலை செய்வார்கள். கிராமங்கள்தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி வலையமைப்புகள் பலப்படுத்தப்படும். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி எல்லா கட்சிகளும் அவ்வாறு உழைக்கும் பொழுது, அது தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்டும்.

ஏற்கனவே கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலில் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராகத் திரளாக வாக்களித்து இருக்கிறார்கள். அவ்வாறு ஒரு சிங்கள வேட்பாளருக்கு எதிராக விழும் வாக்குகளை தமிழ் மக்கள் ஆணைக்கான வாக்குகளாக மாற்றினால் என்ன?

கஜேந்திரகுமார் கூறுகிறார், ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் இறுதியாக யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார் என்பதனால் அந்தத் தெரிவை தாம் ஏற்கவில்லை என்று. மேலும் ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக் கொள்ளும் கட்சிகள் அவ்வாறு ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் இங்கு ஏற்கனவே பார்த்ததுபோல, பிரதான சிங்கள வேட்பாளரோடு பேரம் பேசக்கூடிய நிலைமைகள் குறைவாக இருக்குமென்றால், அதை தமிழ் மக்களின் ஆகப்பிந்திய ஆணையைப் பெறுவதற்கான ஒரு மறைமுக வாக்கெடுப்பாக தமிழ்மக்கள் பயன்படுத்தலாம். தமது உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதனை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறலாம்.

இந்த கோரிக்கையை முன்வைப்பது சுரேஷ் பிரேமச்சந்திரன் அல்லது குத்து விளக்கு கூட்டணி அல்லது விக்னேஸ்வரன் என்பதற்காக அதனை எதிர்க்கத் தேவையில்லை. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையிலாது அதைப் பரிசோதிக்கலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் ரணில், சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார். அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார். அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார். அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத்துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக்கொண்டு வருவார். தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார். அந்த ஐக்கியத்துக்கு தகுதியானவர்கள் தலைமை தாங்கலாம்.

ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் கட்டாயமாக விக்னேஸ்வரனாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. கிழக்கிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யதால் அது மிகச்சிறப்பு. ஒரு பெண்ணாக இருந்தால் அதுவும் சிறப்பு. அவர் ஒரு குறியீடு. கட்சிகளாக, வடக்குக் கிழக்காக, சமயங்களாக, சாதிகளாக, ஒரே கட்சிக்குள் இருவேறு குழுக்களாக, முகநூல் குழுக்களாக, சிதறிக்கிடக்கும் ஒரு சமூகத்தை, ஒரு தேர்தலை நோக்கியாவது ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அவருக்கு வாய்ப்பளித்தால் என்ன ?

நன்றி: நிலாந்தன்

# தமிழ் மரபுத் திங்கள்
## Tamil Heritage Month
### ஜனவரி 2024



**தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!**
**மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து**
**சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!**
**இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு**
**நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!**
**இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்**
**புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க**
**வாழ்த்துகின்றோம்!**

# ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாறு என்பது அவர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

ஜனவரி 13, 2024



ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாறு என்பது அவர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று சனிக்கிழமை (13 ) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாறு என்பது அப்போராட்டத்திற்கு உந்து சக்தியாக இருந்த போராளி களின் அரசியல் சிந்தனை, அதற்கான அவர்களின் உழைப்பு உயிர் தியாகம் என்பவற்றோடு அவர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

அவ் வரலாறு ஆவணப்படுத்தப்படுவதோடு அடுத்த சந்ததிக ளுக்கு உரிய வகையில் கடத்தப்படவும் வேண்டும். அதுவே சமூக விழிப்பிற்கும், வாழ்வுரிமை போராட்டத்திற்கும் சக் தியாவதோடு அதனை மையமாக வைத்து மக்கள் திரள் வதற்கும் வழிவகுக்கும் .

அந்த வகையில் மலையக தொழிலாளர் வரலாற்றில் 200 வருட வாழ்வோமே போராட்ட வரலாறு தான். இவ் வரலாற் றுக்கு உரியவர்களை நினைவேந்தல் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

மலையக தியாகிகள் நினைவு கூறப்படல் வேண்டும் எனும் பேரார்வம் எழுச்சி கொண்டுள்ள சூழ்நிலையில் தியாகிகளின் வாழ்க்கை வரலாறு, அரசியல் சிந்தனை, அது தொடர்பான அவர்களின் ஈடுபாடு, விடுதலை வேட்கை, காலச் சூழ்நிலை என்பன மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு தியாகிகள் தினம் அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.




இன்றைய மலையக தமிழர்களின் முன்னோர் உழைப்பிற்காக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட போது கடல் பிர யாணத்தில், காடுகள் நிறைந்த பாதையில் நடந்து வருகையில் காட்டு மிருகங்களின் தாக்கத்திற்கும், அரவங்களின் தீண்டுத லுக்கும் உட்பட்டு ஆயிரக்கணக்கானோர் பலியாகி உள்ளனர். அதேபோன்று நோய் மற்றும் பட்டினி காரணமாக மரிக்கும் தருவாயில் இருந்தோர் வரும் பாதையிலேயே கைவிடப்பட்டு அனாதரவாக மரித்துள்ளனர்.

மலைப்பாங்கான குளிர் பிரதேசத்தில் காலநிலை தாக்கம் காரண மாகவும் நோயற்ற காலத்தில் முறையான வைத்திய வசதிகள் இன்றியும் ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். இவையெல்லாம் இயற்கையான மரணம் அல்ல. அன்றைய பிரித்தானிய முதலாளித்துவ ஏற்றுமதி பொருளாதாரம் இவர்களை கொலை செய்தது என்றே கூறல் வேண்டும்.

அத்தோடு பெரும் தோட்டங்களை உருவாக்க காடுகளை அழித்த போது இயற்கையின் சீற்றத்திற்கும் வன விலங்குகளின் தாக்கத்திற்கும் உள்ளாகி மரணத்தை தழுவிய நூற்றுக்கணக் கானோர் கௌரவமான முறையில் அடக்கம் செய்யப்படாது பள்ளங்களில் தள்ளப்பட்டதாகவும், மலைகளில் ஆங்காங்கே புதைக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றது.

இவர்களும் கொல்லப்பட்டவளாக கருதுதல் வேண்டும். மலை யகத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் தொழிலாளர் வர்க்கத் தின் இரத்தம் தோய்ந்துள்ளதோடு மலையகம் எங்கும் அவர் களின் புதைக்கப்பட்ட உடல்களின் எச்சங்களும் இருக்கின்றன.

தொடர்ந்து நாட்டின் இனவாத அரக்கனும் பல்வேறு காலகட்டங் களில் மலையக மக்களை கொலை செய்திருக்கின்றான். வாழ்வு தேடி வன்னி சென்றோரையும் இனவாதம் விட்டு வைக்கவில்லை. இதனை விட மலையகத்தவர்கள் விடுதலை இயக்கங்களில் போராளிகளாகவும் உயிர் தியாகமாகி உள் ளனர். ஏதோ ஒரு வகையில் இவர்களும் நினைவு கூறப்பட வேண்டியவர்களே.

இந்த வரிசையில் தொழிலாளர்களின் உரிமை, தொழிற்சங்க உரிமை, மொழி உரிமை, நில உரிமை போன்றனவற்றிற்காக நடந்த போராட்டங்களின் போது பொலிசாரின் துப்பாக்கி பிர யோகத்தில் உயிர் துறந்தவர்களும் உண்டு. அத்தோடு தொழிற் சங்க பகை காரணமாகவும் சகோதர கொலைக்கு உட்பட்டவர் களும் உள்ளனர்.

மலையக தியாகிகளின் வரலாற்றில் தூக்குத் தண்டனைக்கு உட்பட்டு தூக்கு கயிற்றினை மாலையாக ஏற்று தொழிலாளர் களுக்கு ஒளியாகி, வெள்ளைக்கார துரைமாரை உயிர் அச்சம் கொள்ளவும், அன்றைய காலனித்துவ ஆட்சியாளர்களை அச் சத்துக்கு உட்படுத்தவும் வித்திட்ட வேலாயுதம் வீராசாமி இரு வரின் தியாக வரலாறு விசேட அடையாளத்தை தமதாக்கிக் கொண்டுள்ளது.

முல்லோய தோட்ட சம்பவத்தை(1940) தொடர்ந்து அனைத்து தோட்ட துறைமார்களும் தொழிற்சங்கங்களின் உருவாக் கத்தை முளையிலேயே அகழ்ந்து அகற்றுவதற்கும், தொழி லாளர் ஒன்று திரண்ட சக்தியாக எழுவதை தடுக்கவும் தடுப் பதற்கும் பல்வேறு ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டப் போது முல்லோயா தோட்டத்திற்கு அண்மையில் ஸ்டெலன் பேர்க் (கந்தலா) தோட்டத் தொழிலாளர் இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தில் சக்தி பெற தொடங்கினர்.

இதனை அறிந்த அத்தோட்ட அதிகாரியான சி.ஏ.ஜி போப் துறை தொழிலாளரை அடக்குவதில் தீவிரம் காட்டியதோடு தொழிற் சங்க நடவடிக்கைகளை தடுக்க அடக்கு முறைகளை கை யாண்டார். அதற்கு எதிராக கிளர்ந்த தொழிலாளர்களில் தீவிர சிந்தனை கொண்ட சிலர் மறைமுகத் திட்டம் தீட்டிதுறையின் பிரயாணங்கள் என்பவற்றை உன்னிப்பாக அவதானித்து ஒரு நாள் அவர் அடுத்த தோட்டத்திற்கு இரவு வேளையில் உணவு விருந்துக்கு சென்று திரும்பும் போது வழிமறித்தோரால் அடித்து கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பத்தோடு தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட வீராசாமி, வேலாயுதம் எனும் இருவர் 1942 பெப்ரவரி மாதம் முறையே 27ம் 28ம் திகதிகளில் தூக்கில் இடப் பட்டனர். இவர்கள் இறுதியாக எழுதிய கடிதத்தில் “உலக தொழிலாளர் வர்க்கம் நீடூழி வாழ வேண்டும்” என நமது வேட்கையை வெளிப்படுத்தி உள்ளனர்.

மலையக மக்களின் வரலாறு முழுவதும் தியாகமே அடங்கி யுள்ளது. அந்த வகையில் மலையக தியாகிகள் என அடை யாளப்படுத்தப்படுபவருடைய வாழ்க்கை வரலாறு, அவர்களின் போராட்டம், அரசியல் நோக்கம் என்பன மக்களை சென்றடை வதற்கு முறையான வேலை திட்டம் அவசியம். அதுமட்டுமல்ல அவர்கள் தொடர்பான மீள் வாசிப்பும் எழுத்துரு பெற்று மக்கள் மத்தியிலே கொண்டு செல்லப்படலும் வேண்டும்.

அதுவே மலையக சமூக விழிப்பிற்கு வழிவகுக்கும். மலையக தமிழர்கள் இனமாகவும் தொழிலாளர் வர்க்கமாகவும் ஒடுக்கு முறைக்கும் இன அழிப்பிற்கும் உள்ளாகி வரும் சூழ்நிலையில் மலையக மக்களை அரசியல் மையப்படுத்தி அடுத்த நூற்றாண்டு நோக்கி நகர்வதற்கு சரியான உகந்த நினைவு நாளை தெரிவு செய்து நடத்தப்படுதல் சாலச் சிறந்ததாகும்.





# ஓர் இரவின் எழுதல்கள்

“விஸ்மனை சுட்டுப்போட்டாங்களாம்” அந்தச் செய்தி காட்டுத்தீ போல் ஊர் எங்கும் பரவியதும், முருகன் கோவில் சப்பறத் திருவிழாவோ அச்சாணி உடைந்த தேர்மாதிரி அல்லாடிப் போயிற்றுது. சப்பறத்திருவிழா என்றால் பெரும் எடுப்பில் தான் வருடாவருடம் நடக்கிறது. அன்னதானமும் மேளமும் தாளமும் என ஒரே குதூகலம். நேர்த்திகளும் அன்றுதான் அதிகம் காவடிகள்... கரகங்கள்... தீச்சட்டிகள். ...தீமிதிப்புக்கள்... என சனங்கள் நிரம்பி வழியும்.

சப்பறத் திருவிழா சிவப்பருடையது சிவப்பற்றை திருவிழா என்றால் உச்சம். சிவப்பற்றை திருவிழாவை வெல்ல எவரும் முடியாது. இன்றும் ஐந்து மூடை அரிசிக்கும், ஆறு கூட்டு மேளத்திற்கும். ஒழுங்குகள் செய்திருந்தார் ஆனால் விஸ்மனின் மடிவு அவரை ஒடித்து விட்டது. விஸ்மன் அவர் அணைத்தபிள்ளை. அவர் மட்டுமல்ல அந்த ஊரும் கொஞ்சக்காலம் அவனை அணைத்துத்தான் இருந்தது.

எங்கள் ஊரின் கோலங்களை மிதித்து, உறுவுகளைப் பிரித்து, வசந்தங்களை முகாரிகளாக்கிவிட்டு பசையாய் எங்களின் வாழ் நிலங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்த வெறியர்களின் அச்சங்களுக்குப் பயந்து, அந்த ஊர் விஸ்மனுடனான நெருக்கத்தை கொஞ்சம் குறைத்துக் கொண்டது.

சிவப்பரும் குறைத்தது மாதிரி வெளியில் காட்டிக்கொண்டு காவுகளை திறந்த படியே இருந்தார் சாப்பாடுகள் கொடுத்து உறங்கவும் வைத்தார். அவனை ஒரு நேரம் காணாது விட்டால் அவருக்குப் பசி எழாது இமைகள் மூடாது. மனம் இறுகித் தகிக்கும். எங்கேனும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டால் மூச்சு நீளும். தெருவில் நின்று போறவர்கள் வருகிறவர்களில் விஸ்மனைத் தேடுவார்.

சிவப்பருக்கும் விஸ்மனுக்கும் உள்ள உறவு அந்தப் கோவிலால் ஏற்பட்டது. அவன் அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பாய் நியமிக்கப்பட்ட காலத்தில் தான் அந்தக் கோவிலிலும் பிரச்சினை வெடித்தது.

அது நிர்வாகப் பிரச்சினை பதினைந்து வருடங்கள் இருக்கும் பலாலியிலிருந்து சனங்கள் இடம் பெயர்ந்து அந்த ஊருக்கு வர, அவர்கள் முதலில் பாடசாலை ஒன்றில் தான் இரந்தார்கள். முன்பு இடம் பெயர்வுகள் என்றால் விழிகள் அதிசயத்துப் பார்க்கும்; பரிதாபமும் கொள்ளும் இப்ப அப்படியல்ல அனை வரும் துன்பங்களைச் சுமந்த ஏதிலிகள் ஆயிற்று!

வந்த சனங்கள் அந்த ஊரில் பத்துக் குடும்பங்கள் தான். அவர்களுக்கு மூன்று நேர உணவையும் கோவில் நிர்வாகமே கவனித்து வந்தது முன்பு அப்படித்தான் ஏதும் கண்ணிவெடிகள் நிகழ்ந்தால் தான் சனங்கள் இடம் பெயர்ந்து வருவார்கள், அநேகம் வாசிகசாலைகளும் தான் அவர்களை கவனிக்கும்.

அவர்கள் நிரந்தர இடப்பெயர்வாளர்கள் என்றபடியால் கோவில் காணியிலேயே அவர்களுக்குக் கொட்டில் போட்டுக்கொடுத்து, “சங்கர் குடியிருப்பு” என்று முதல் மாவீரரான அந்த வீரனின் பெயரையும் குடியிருப்புக்குச் சூட்டினார்கள்.

வருடங்கள் உருண்டோடின. அவர்களின் சொந்த இடம் அந்த ஊராகவே மாறியது.

திருமணங்களை அந்த ஊரிலேயே செய்து அந்த ஊருக்கும் தங்களுக்குமிடையில் ஒரு இறுக்கமான உறவை ஏற்படுத்தினார்கள். அந்த உறவால் முருகன் கோவில் திருவிழா ஒன்றை தங்களுக்குத் தரும்படி கேட்டார்கள். அதனை நிர்வாகத்தில் இருந்தவர்களில் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை.

“இவங்கள் இந்த ஊரில்லை வந்தான் வரத்தாங்கள் இவங்களுக்கு என்னெண்டு எங்கட கோவிலிலை திருவிழாவைக் குடுக்கிறது?” என்று மறுத்தார்கள். ஆனால், சிவப்பரும் அவர் சார்ந்தவர்களும்.

“அவங்கள் இந்த ஊர் இல்லாட்டியும் எங்கட இனம். இஞ்சை தானே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவங்கள் போடுற பணாங்களாலும் தான் கோவில் உண்டியல் நிறைஞ்சு கொண்டிருக்குது. அவர்களுக்குத் திருவிழாவில் ஒண்டை குடுக்கத் தான் வேணும்!” என்று பிடிவாதமாய் நின்றார்கள்.

பிரச்சினைகள் முற்றியது. சண்டைகளாய் நீண்டது, பிணாங்கள் வலுப்பெற்று, ஊர் பிளவுபட்டு திருவிழாவே பெரிசாய் நடவாமல் ஐந்து வருடங்கள் பூசைகளோடே நின்றன அந்த வேளைதான் விஸ்மன் அந்த ஊர் பிரதேசப்பெறுப்பாளனாய் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் அந்த ஊருக்கு வந்ததும் முதலில் தூக்கியது அந்தக் கோவிலின் நிர்வாகப் பிரச்சனையைத்தான்.

ஒவ்வொரு பிரச்சனையையும் அக்குவேறு, ஆணிவேறாகப் பிரித்து ஆராய்ந்தான். அதன் பெறுபேற்றைக் கூறுவதற்காக சகலரையும் கோவிலுக்கு அழைத்தான். அனைவரும் கோவிலுக்கு வந்தார்கள்.

“நாங்கள் ஒவ்வொருவரும் சின்னப் பிள்ளைகள் மாதிரித் தான் இருக்கிறம். எதையும் சிந்தித்துப் பாக்கிற பக்குவம் எவருக்கும் இன்னும்வரேலை. மனங்களில் பிரதேச வேறுபாடுகளில் வரக் கூடாது. நான் பெரிசு நீபொரிசு எண்டு இருக்காமல் நாடு பெரிசு எண்ட மனப்பான்மை உங்கள் எல்லாருடைய மனங்களிலும்

வளரோணும். அவர்கள் இந்த ஊரில் இருக்குமட்டும் ஒரு திரு விழாவைத்தானே கேட்டார்கள். எங்கள் எல்லாருக்கும் ஒற்று மைவேணும். நாங்கள் ஒன்றாக நிற்காத வரைக்கும் வரைக் கும் எங்கட நிலம் இருளில் தான் இருக்கும்.”

என்று கூறி இன்னும் பல விடயங்களைத் தெளிவு படுத்தினான். அவனின் கூற்றை ஏற்று அனைவரும் ஒற்றுமையாக திரு விழாவை செய்தார்கள்.

விஸ்மன் அந்த ஊருக்கு ஒரு விடிவெள்ளியாக ஒளிர்ந்தான். அவனின் எந்தச் சொல்லையும் ஊர்கேட்கும். அவனை நேசித் தனால் தான் இன்று அவன் சரிந்து கிடக்க அந்தக்கோவிலும் தனது அலங்காரங்களை இழந்து நிற்கிறது.

ஐயர் மட்டும் கோவிலில் நின்றார். கோவிலில் வேறு எந்தச் சனங்களுமில்லை ஐயருக்கு கோவிலில் பூசைகள் செய்யவே மனம் வரவில்லை. விஸ்மனின் உருவம் அவருள் நிழலாடிக் கொண்டிருந்தது. ஆறு காலப் பூசைகளையும், மணிகள் எழுப் பாது அமைதியாகவே செய்வதாக முடிவெடுத்துக்கொண்டு மூலஸ்தானத்துக்குள் நுழைந்தார்.

இரவுதான் விஸ்மன் சுடப்பட்டான் சுட்டவர்கள் அசிற்றையும் முகத்துக்கு ஊற்றி விட்டுச் சென்றனர். விஸ்மன் மேல் அவர் களுக்கு அளவு மீறிய அவர்கள் முன்பு சுதந்திரமாக இரவுகளில் வீதிகள் எங்கும் திரிவார்கள்... வீடுகளுள் நுழைவார்கள்... இஸ்டப்படி நடப்பார்கள்... அவர்களின் அந்த அடாவடித் தனங்களை கட்டுப்படுத்துவதற்காக விஸ்மன் விழித்திருந்து அவர்களை தாக்கி விட்டு மறைவான். அவனுக்கு






அச்சங்கொண்டு அவர்கள் பெரிசாக இரவுகளில் திரிவதில்லை. சிலவேளைகளில் திரிந்தால் திரிந்தவர்களில் சிலர் திரும்ப மாட்டார்கள். அந்த ஆக்ரோஷத்தில் தான் அவர்கள் அசிற்றை ஊற்றினார்கள்.

விடிந்ததும், அவனின் இடது காலில் தழும்பும் இடது கையில் லாத உடலும்தான் விஸ்மனை ஊரவர்களுக்கு அடையாளப் படுத்தியது. அந்தத் துக்கச் செய்தியால் அடுப்புகளில் நெருப்புகள் கூட எரியவில்லை. விழிகள் எல்லாம் நனைந்திருந்தன. ஊரைமேம் படுத்தவே தன்னை அர்ப்பணம் செய்தவன் உயிர் இன்றிக் கிடக்கையில் எப்படி ஊர் சிரித்து மகிழும்?

அச்சங்கள் ஒவ்வொரு உணர்வுகளுக்கும் விலங்கிட்டுக் கொண்டிருந்தன. உயிர் அசையில் அந்த அணைந்த மெழுகு வர்த்தியை அவர்களால் அழகு படுத்த முடியவில்லை.

சிவப்பருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. விஸ் மனை எப்படியும் போராளிகளிடம் கொடுக்கவேணும் என்ற துடிப்பில் சைக்கிளை எடுத்துக்கொண்டு போராளிகளைத் தேடினார். போராளிகள் நிலைமையை அறிந்திருந்தால் இவ் வளவுக்கு வந்து விஸ்மனை காவிச் சென்றிருப்பார்கள். விஸ் மன் தனியத்தான் அநேகம் திரியிறவன் இடுப்பில் “பிஸ்டல்“ இருக்கும் அப்படித் தனிய திரிந்தவேளைதான் சுடப்பட்டிருக் கிறான்.

சிவப்பரின் விழிகளில் போராளிகள் தென்படவில்லை. முன்பு என்றால் ஒரு போராளி மாவீரன் ஆகினால் ஊரே எழுச்சி கொள்ளும். அவனின் வித்துடல் ஊர்வலமாகும். ஊரெகண் ணீர் வடிக்கும். தெருக்கள் எல்லாம் தோரணங்களாலும் கறுத் தக்கொடிகளாலும் துக்கம் கொள்ளும். ஆனால், இன்று எதுவு மற்ற நிலையில் அநாதரவாய் விஸமன் கிடப்பது நினைக்க சிவப்பரனி நினைவூற்று வீக்கமெடுத்தது; நொந்து வலிபெரு கியது. பெடல்களை வேகமாக மிதித்தார்.

காகங்கள் கரைந்தபடி பறந்து திரிந்தன. அவைகள் துக்கத்தைப் பறைசாற்றுவதாய் அவருக்குப்பட்டது. வேலிகளில் செவ் வரத்தம் பூக்கள் எல்லாம் இதழ்களை விரித்து காற்றுக்கு அசைந்தன. அந்தப் பூக்கள் அவருக்குள் ஒரு புரட்சியை கிளறியது. இரத்தம் சிந்துவதால் தான் விடியலைப் பெறலாம் என்ற யதார்த்தத்தை அந்தச் செவ்வரத்தம் பூக்கள் அவருக்கு உணர்த்தியது.

விஸ்மனை அந்த இடத்திலேயே விதைக்கவேணும். அந்த நிலம் விழுங்கிகள் இல்லாத காலத்தில் அவனுக்கு அதிலொரு நினைவாலயம் கட்டவேணும் என்ற வைராக்கியம் நெஞ்சில் எழ சைக்கிளை வேகமாக ஓட்டி விஸ்மனுக்குப் பக்கத்தில் நிறுத்தினார். அவனுக்குப் பக்கத்தில் சதாசிவம் அழுதுகொண்டு நின்றார். கண்கள் சிவந்து முகம் வீங்கி இருந்தது.

சதாசிவம் ஒருநாள் அந்த இடத்தில்தான் மயக்கமுற்று விழுந் தார் கற்கள் தலையில் குற்றியதால் இரத்தம் பெருகிக் கொண் டிருந்தது. அந்தத் தெருவால் விஸ்மன் வாகனம் ஒன்றில் வந்து கொண்டிருந்தான் அவரைக் கண்டதும் உடனே வாகனத்தை நிறுத்தினான்.

அவர், இரத்தம் பெருக மண்ணில் தோய்ந்து கிடப்பதை பார்க்க உயிர் உருவுவது மாதிரி இருந்தது அவனுக்கு. அவன் அப்படித் தான். தான் நேசித்த மக்களுக்கு இன்னல்கள், இடர்வுகள் நிகழ்ந்தால் துடித்துக் கொள்வான்.

“நானண்ணை இந்த மக்களுக்காகத்தான் ஆயுதம் தூக் கினான் என்க்கு முன்னால் எந்தமக்களும் கண்ணீர் வடிக்கக் குடாது.” இப்படித்தான் கூறிக்கொள்வான்.

சதாசிவத்தை நெஞ்சோடு அணைத்துத்தூக்கி, வாகனத்தில் ஏற்றிக்கொண்டு பொய் வைத்தியசாலையில் சேர்த்தான், இரத் தப் பெருக்கு அதிகமாய் ஏற்பட்டதால் அவருக்கு உடனே இரத்தம் தேவைப்பட்டது. சதாசிவத்தின் இரத்தமும் ஒரே பிரிவு என்றபடியால் விஸ்மனே இரத்தத்தைக் கொடுத்தான்.

சதாசிவம் அந்த விடயத்தை பெரியசத்தமாய் சொல்லிக் கத்திக் கொண்டு சிவப்பரைக் கட்டியணைத்தார்.

இப்படித்தான் அந்த ஊரின் ஒவ்வொருவரும் அவனைப் பற்றி ஒவ்வொரு கதைகள் சொல்லுவார்கள்.

“சிவப்பண்ணை விஸ்மனை இப்படி அநாதரவா நாங்கள் விடுறதோ?” சதாசிவம் கேட்டார்.

“அதுக்கு நான் ஒரு முடிவு எடுத்துப் போட்டன். சதாசிவம் இந்த இடத்திலயே விஸ்மனை விதைக் கோணும்.”

“நாங்கள் ரண்டு போரும் இதைச் செய்தாலண்ணை நாங்கள் விஸ்மன்ர ஆகக்ளை அணைக்கிறனாங்கள் எண்டு எங்களுக் கேதும் அவங்கள் செய்து போடுவங்கள். சனங்கள் எல்லா மண்ணை விஸ்மனை நினைச்சு அழுது கொண்டிருக்குதுகள். நாங்கள் எல்லாச் சனங்களும் சேர்ந்த விஸ்மனை விதைச்சம் எண்டால்...”

“அப்படி எண்டாதசதாசிவம் அவங்கள் ஒண்டும் பயப்பிடமாமல் உறுதியா நிக்ககோணும். அவங்கள் சுடத் துவக்கைத் தூக் கினாலும் விஸ்மனுக்கும் எங்களுக்குள்ள உறவை அவங் களுக்குச் சொல்லோணும்.”

“ஓமண்ணை முந்தி தங்கட இடங்களில் இருந்து செல்லடிச்சு எங்களைச் சாக்காட்டிக்கொண்டிருக்கேக்கை தானாகவே விஸ் மன் எங்களுக்குப் பதுங்குகுழியள் வெட்டித்தரேக்கைதானே செல்வந்து விஸ்மன்ரை ஒரு கையைக் கொண்டுபோனது.”

“ஓமடா சதாசிவம் எங்கட சோத்தில வந்த பிள்ளை இப்படிக் கிடக்க நாங்கள் என்னெண்டு பாத்துக்கொண்டு நிக்கிறது. எங்கட பிள்ளையை நாங்கள் தான் அடக்கம் செய்யணுமெண்டு எங்கட சனங்கள் எல்லாம் அவங்களுக்குச் சொல்லோணும்.”

“ஓமண்ணை இந்த விசயங்களை எங்கட சனங்களுக்கு விளங்கப்படுத்தி எல்லாச் சனங்களையும் இந்த இடத்துக்கு அழைக்கேணும். ஒவ்வரு வீடுகளுக்கும் போவம்.”

இவருக்கு ஒரு இறுக்கமான முடிவுடன் ஒவ்வொரு வீட்டுப் படலையையும் திறந்தனர். அவர்களின் கூற்றுக்களை அனை வரும் ஏற்றனர். ஐந்து மணிக்கு விஸ்மனின் இடத்துக்குச் சனங்களை வரும்படி கூறிவிட்டு இருவரும் வந்தனர்.

நேரம் ஐந்து மணியைத் தாண்டியும் எவரும் விஸ்மனின் இடத்துக்கு வரவில்லை. சிவப் பருக்கு சனங்கள் மேல் எந்தகக் கோபமும் ஏற்படவில்லை. உயிர் பற்றிய ஆசை எவருக்கும் இருக் கும் தான். எப்படியும் விடயம் அறிந்து அவர்கள் வந்தார்கள் என்றால், தங்கள் உயிர் கொல்லிக் கட்டைகளால் சக லரையும் விழுத்தா விட்டாலும், சிலரையேனும் விழுத் துவார்கள். அந்தப் பயங்களில்தான் அவர்கள் வரவில்லை அவர்களின் பயங்களில் நியாயங்கள் இருக்கின்றன என் பதளை உணர்ந்தவருக்கு அச்சம் எழுந்து நெஞ்சில தாண்டவ மாடத்தொடங்கியது. அந்த உயிர் குடிக்கும் பேய்கள் அதிகமாக உலாவத் தொடங்கிவிட்டார்கள் அந்த இடத்தில் நிற்க சிவப் பருக்கு... பயம் பீச்சியடித்தது. சதாசிவத்தையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

சூரியன் விழுந்து இருள் நிலத்தைக் கௌவத்தொடங்கியது. நத்துக்கள் மரங்களில் கத்திக் கொண்டிருந்தன. சில்வண்டுகள் இரைந்தன. சிவப்பரின் மனதில் பயம் கருக்கட்டத் தொடங் கியது; நத்துக்கள் கத்தினால் ஏதும் கெடுதிகள் நடக்கும் என ஊர் கதைத்துக் கொள்வதை ஞாபகிக்க...

விஸ்மனைவிதைக்கவேணும் என்ற துடிப்பால் அந்தப் பயக் கருத்தரிப்பு குறைப்பிரசவமாய் சிவப்பரிலிருந்து சீளாய் வடிய மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு சதாசிவத்தோடு விஸ் மனின் இடத்துக்குச் சென்றார்.

மின்மினிப்பூச்சிகள் விஸ்மன் கிடந்த ஆலமரத்துக்குக் கீழே வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

மின்குமிழ்கள் ஒளிவீசும் துயிலுமில்லமாய் அந்த இடம் விசப் பருக்குப்பட்டது ஒரு புதிய தெம்பு பிறந்தவராய் மண்வெட்டியை எடுத்து விஸ்மனுக்கு அளவாய் குழி வெட்டினார்.

சிவப்பரும், சதாசிவமும் சேர்ந்து விஸ்மனை வெள்ளைச் சேலையால் போர்த்து குழிக்குள் வளர்த்தினார்கள். விழிகள் நனைய மண்ணை அள்ளிப் போட்டார்கள். குழிநிரவியதும் பூவரசம் கதிகால் ஒன்றை சிவப்பர், விதைத் இடத்தில் ஊன்றி விட்டு வந்தார்; அது உயிர்த்து எந்த நேரமும் துளிர்ப்பாய் நிற்கவேணும் என்பதற்காக!

விடிந்தது வழமையைவிட அந்த விடியல் வித்தியாசமாகவே இருந்தது. மேகம் கறுத்து மெல்லிய காற்று வீசிக்கொண் டிருந்தது அது மழையின் அறிகுறி! நீண்ட நாட்களின் வெய் யிலில் நிலம் இறுகி கிளிம்பிய புழுதிகள் எல்லாம் அடங்கிப் போகின்றன. இனி தும்மல் தடிமன் எதுவும் வராது. மூக்கை சேலையால் மூடாமல் இனித்திரியலாம் என்ற துளிர்ப்போடு சிவப்பர் விஸ்மனை விதைத் இடத்துக்குச் சென்றார்.

விதைகுழியின் மேல் ஊன்றிய பூவரசம் கதிகாலைப் பார்த்ததும் சிவப்பர் பூரித்துப் போனார். உடல்ரோமங்கள் எல்லாம் நிமிர்ந்து தேகம் சில்லிட்டன. அப்படி அவர் எந்த நாளும் பூரித்ததில்லை. கதிகால் நிறைய மாலைகள் இருந்தன. யார் போட்டது? நெஞ்சில் வினாக்குறி சிலுவையாய்க் கனத்தது. விதைகுழிக்குக் கிட்ட ஓடினார். விதைத் இடமெல்லாம் பூக்கள் நிறைந்திருந்தன. இதழ்கள் ஒவ்வொன்றிலும் நீர்த்தெளியல்கள் இரவு மழையோ... பனியோ... எதுவும் பெய்யவில்லை அப்படி என் றால் அந்த தெளியல்கள்...?

இரவு ஊர் எழுந்திருக்கின்றது கண்ணீர் வடித்திருக்கின்றது என்பதனை நினைக்க விஸ்மனின் கனவை இந்த ஊர் சுமப்பதாய் இருந்தது. சிவப்பருக்கு மனம் துள்ளி முருகன் கோவிலுக்கு ஓடினார். இன்று தேர்த்திருவிழா.

நன்றி: கருணை ரவி

-எரிமலை ஜனவரி 2000


15 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
கோகுலகிருஷ்ணன்
21.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
ரவி
02.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
இராஜா
07.02.2009
அமரேசன்
08.02.2009
முருகதாஸ்
12.02.2009
அப்துல் ரவூப்
1995
முத்துக்குமார்
நினைவு நாள் 29.01.2009
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
ஜெகதீசன்